உ


இறைவன் துணை.

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATI MAHAL LIBRARY
TANJORE

# திரு அரசிலிக் காதை

2654

வித்துவான் திரு. அடிகளாசிரியர்.



உ

இறைவன் துணை.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY. TANJORE

# திரு அரசிலிக் காதை

இயற்றியவர்

**வித்துவான் திரு. அடிகளாசிரியர்**

உதவித்தலைவர்

**சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி,**

**மயிலம்.**

★

காபிரைட்] 1948 [விலை 1—0—0

# திரு அரசிலி: பண். பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனல் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்தலை மாலை மருவிட வல்லியம் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக் கிடம்அர சிலியே. 1

ஏறு பேணிய தேறி யிளமதக் களிற்றினை யெற்றி
வேறு செய்ததன் உரிவை வெண்புலால் கலக்கமெய் போர்த்த
ஊறு தேனவன் உம்பர்க் கொருவன்நல் லொளிகொ ளொண்சுடராம்
ஆறு சேர்தரு சென்னி யடிகளுக் கிடம்அர சிலியே 2

கங்கை நீர்சடை மேலே கதம்மிகக் கதிரிள வனமென்
கொங்கை யாளொரு பாகம் மருவிய கொல்லைவெள் ளேற்றன்
சங்கை யாய்த்திரி யாமே தன்னடியார்க் கருள் செய்து
அங்கை யாலன லேந்தும் அடிகளுக் கிடம்அர சிலியே. 3

மிக்க காலனை வீட்டி மெய்கெடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை யுண்பது பொன்திகழ் கொன்றை
தக்க நூல்திகழ் மார்பில் தவளவெண் ணீறணிந் தாமை
அக்கின் ஆரமும் பூண்ட அடிகளுக் கிடம்அர சிலியே. 4

மானஞ் சும்மட நோக்கி மலைமகள் பாகமும் மருவித்
தானஞ் சாவரண் மூன்றுந் தழலெழச் சரமது துரந்து
வானஞ் சும்பெரு விடத்தை யுண்டவன் மாமறை யோதி
ஆனஞ் சாடிய சென்னி அடிகளுக் கிடம்அர சிலியே. 5

பரிய மாசுணங் கயிறாப் பருப்பத மதற்குமத் தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வானவர் கடையக
கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய அவர்தமைக் கண்டு
அரிய ஆரமு தாக்கும் அடிகளுக் கிடம்அர சிலியே. 6

வண்ண மால்வரை தன்னை மறித்திட லுற்றவல் அரக்கன்
கண்ணுந் தோளும்நல் வாயும் நெரிதரக் கால்விர லூன்றிப்
பண்ணின் பாடல்கைந் நரம்பாற் பாடிய பாடலைக் கேட்டு
அண்ண லாயருள் செய்த அடிகளுக் கிடம்அர சிலியே. 7

குறிய மானுரு வாகிக் குவலயம் அளந்தவன் தானும்
வெறிகொள் தாமரை மேலே விரும்பிய மெய்த்தவத் தோனும்
செறிவொ ணாவகை யெங்குந் தேடியுந் திருவடி காணா
அறிவொ ணாவுரு வத்தெம் அடிகளுக் கிடம்அர சிலியே. 8

குருளை யெய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையிலுண் பவருந் தேரருஞ் சொல்லிய தேறேல்
பொருளைப் பொய்யிலி மெய்யெம் நாதனைப் பொன்னடி வணங்கும்
அருளை ஆர்தர நல்கும் அடிகளுக் கிடம்அர சிலியே. 9

அல்லி நீள்வயல் சூழ்ந்த அரசிலி அடிகளைக் காழி
நல்ல ஞானசம் பந்தன் நற்றமிழ் பத்திவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தம ரர்தொழு தேத்த
வல்ல வானுல கெய்தி வைகலும் மகிழ்ந்திருப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்.

# 'முன்னுரை'

ஒரு சிலரால், 'புராணக் குப்பைகள்' 'புராண ஆபாசங்கள்' என்று பழங்கதைகளெல்லாம் இழித்துப் பேசப்படுகின்ற இக்காலத்திலே, அரசிலிப் பழங்கதைகளை 'அரசிலிக்காதை' என்னும் பெயரால் யான் பாடியிருக்கின்றேன். ஒரு தலத்தைப் பற்றி மக்களால் வழங்கப்பெறும் பழங்கதைகளை நல்லிசைப் புலவர்கள் கேட்டுத் தங்கள் நாவன்மையைக் காட்டிக் கேட்டார்ப் பிணிக்கக் கேளாரும் வேட்பத் தொடர்நிலைச் செய்யுட் காப்பியமாகச் செய்கின்றனர். இத் தொடர்நிலைக் காப்பியங்களெல்லாம் 'புராணம்' என்னும் பெயராலேயே வழங்கப்பெறுகின்றன.

## 'புராணம்'

'புராணம்' என்ற சொற்குப் பழமை, பழங்கதை என்று பொருள் கூறலாம். இதனால், பழங்கதைகளைக் கூறும் பனுவற்கெல்லாம் 'புராணம்' என்றசொல் பொருந்துமாயினும் உலகத்தோற்றம், உலக ஒடுக்கம், மன்வந்தரம், முனிவர் வல்லமை, அரசர் மரபு என்னும் ஐந்தினைக் கூறுவதே புராணமாமென்பர் வடநூலாசிரியர். அவ் வடநூலாசிரியர் கொள்கையைக் கருதினால் தமிழ் நாட்டிலெழுந்த தல புராணங்களெல்லாம் புராணம் என்று அழைத்தற்குத் தகுதியிலவாம் என்பது நன்கு புலப்படும்.

## 'தொன்மை'

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எட்டும் செய்யுள் வனப்பாகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. அவ் வெட்டில் 'தொன்மை' என்பது ஒன்று. 1 அத் தொன்மை உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருண்மேல் வரும். இத் தொன்மை இலக்கணத்தைப் பெற்று வருபவை தாம் தமிழ் நாட்டுத் தல புராணங்கள் என்று கருதுகின்றேன்.

## 'புராணப் புனைந்துரைகள்'

'நம் நாட்டுப் புராணங்களெல்லாம் நம்ப முடியாத புனைந்துரைகளைப் பெற்றிருக்கின்றன; இப் புனைந்துரைகளைக் கற்றால் நம் பகுத்தறிவுணர்ச்சி பாழ்படும்,' என்று சிலர் கூறிவருகின்றார்கள். அவர்கள் கூறுவதை ஆராய்ந்துணரும் அறிவில்லாத பலர் அவர்கள் கூற்றை அப்படியே நம்பிப் புராணம் என்றால் சீறிவிழுகின்றனர். அங்ஙனம் அவர்கள் சீறி விழுதற்கான புராண கதைகளைப் பற்றித் தமிழ் நாட்டறிஞர்க்குச் சில கூற யான் விழைகின்றேன்.

---

1 தொன்மை தானே,
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே 'தொல்' பொரு 549.

ஆசிரியன் மாணக்கர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்குங் கால் அவன் அக் கல்வியை அவர்களுக்குப் பல நெறிகளாலே சொல்லிக் கொடுப்பான். அப் பல நெறிகளிற் சிறந்ததொன்று கதைகளைக் கூறி அவற்றால் கல்வி கற்பிப்பதாகும். அங்ஙனம கூறப்படுகின்ற கதைகள் உண்மையாகவு மிருக்கலாம் புனைந்துரையாகவு மிருக்கலாம். எப்பொழுதும் புனைந்துரை பெய்துரைக்கப் பெறாத கதைகள் அவ்வளவு நன்றாயிருப்பதில்லை. ஆகையினாற்றான் தொன்றுதொட்டே நல்லிசைப் புலவர்களெல்லாம் தாங்கள் செய்யுள் செய்யும் புலநெறி வழக்கிற்குப் புனைந்துரையாகிய நாடக வழக்கினையும் உள்ளனவாகிய உலகியல் வழக்கத்தினையும் உறுப்பாகக் கொண்டுள்ளார்கள். 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்பது தொல்காப்பியம்.

அதுவுமன்றியே தற்காலப் பாடப் புத்தகங்களிலும் எத்தனையோ புனைந்துரைக் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. முயலானது ஒரு சிங்கத்தை ஏமாற்றிக் கொன்றதென்றும், நரியொன்று நாரையொன்றிற்கு விருந்து செய்து ஏமாற்றியதைப்போல நாரையும் நரிக்கு விருந்து செய்து ஏமாற்றியதென்றும் பாட புத்தகங்களில் படித்திருக்கிறோம். இக் கதைகளெல்லாம் வெறும் புனைந்துரையாகவிருப்பினும் ஒவ்வொன்றும் நமக்குச் சிறந்த நீதிகளைப் புகட்டுவதால் நாம் அக் கதைகளை விரும்பிக் கற்கின்றோம். அங்ஙனம் அக் கதை யுணர்த்தும் நீதிகளைக் கருதாது இது புனைந்துரை! கட்டுக்கதை? என்றொருவன் கூறிக்கொண்டிருப்பானேயானால் அம்மகனின் பகுத்தறிவு விளக்கத்தை என் சொல்வது?

அங்ஙனமே புனைந்துரையாகிய நாடகவழக்கத்தினையும் உளதாகிய உலகியல் வழக்கத்தினையும் அடிப்படையாகக்கொண்டு கற்றுவல்ல சான்றோர் தாங்கள் வாழ்ந்துவந்த காலத்திற் கேற்ப நூல் செய்வார்களேயானால், அந் நூலைப் புனைந்துரை! புனைந்துரை!! பகுத்தறிவிற் கேற்றதல்ல என்றொருவன் கூறுவானேயானால் அவன்றன் தமிழ்க் கல்வி யறிவினையும் பகுத்தறி வுணர்ச்சியினையும் என்னென்றுகூறுதும்? இதுநிற்க.

யான் யாத்த 'அரசிலிக்காதை' ஏனைய தல புராணங்களைப் போன்றதாயினும் இதன் அமைப்புத் தனிப்பட்டதாகும். சூதபுராணிகர் திருவாய் மலர்ந்தருளச் சௌனகாதிமுனிவர் கேட்டனர் என்பனபோன்றவை இங்கு இடம்பெறவில்லை. நகரப் படலத்தே அந்தணர் முதலான குலப் பிரிவினைகள் கூறப்பெறவில்லை. வாமதேவர் வழிபடு படலத்தே சைவ சமயத்தின் பரந்த நோக்கம் எங்ஙன மிருக்கவேண்டும் என்று கூறப்பெற்றுள்ளது. பெண்களின் உயர்வைப் பற்றியும், அவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதக் கூடாதென்பது பற்றியும் சுந்தரி சிவம் பெறு படலத்தில் விளக்கப் பெற்றுள்ளன. தமிழறிஞர்கள் இக் காதையை நன்கு படித்துப் பார்த்துக் குற்றங் குணங்களை எனக்குத் தெரிவிக்க வேண்டுவன்.

7—10—47.
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க் கல்லூரி,
மயிலம்.

இங்ஙனம்
**திரு. அடிகளாசிரியன்,**
உதவித் தலைவன்.

MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY



உ

இறைவன் றுணை.

# அரசிலிக் காதை;

## பாயிரம்

### காப்பு.

பொன்னும் மன்னிய பவழமும் பொலிந்தெனப் பொலியும்
மின்னு கொன்றையும் சடைகளும் மிளிர்ந்திட மேலோர்
பன்னும் யானைமா முகத்தவன் பாததா மரைகள்
என்னுள் நின்றன இடரெலாம் நீங்கின இனியே. 1

### அரசிலி இறைவன் (வேறு)

செயலுறும் உலகால் உளதெனப் பெற்றுச் சிற்றுயிர் வினைத்திறன் ஊட்ட
மயலுறும் உடலம் முதலிய அளித்தே மலவலி தடிந்தருள் புரிந்தே
இயலுறு குணங்கள் குறிகளும் எண்ணி இயம்பொணுப் பெரும்பொரு,ளாகிப்
புயலுறு சோலை அரசிலி வாழும் புனைமதிக் கடவுள்தாள் போற்றி, 2

### அரசிலி இறைவி

இருளிலே கிடந்த என்னையும் எடுத்தே இடிலாப் பேரொளி யாகும்
அருளிலே கிடத்தி அழுக்கெலாம் போக்கி அறிவினற் பொலிந்திடச் செய்தே
பொருளிலே கிடக்கும் வாய்மையைப் புணர்த்திப் புனிதனர் அடிகளிற் பொருத்தும்
தெருளிலே விளங்கும் பெரியநா யகிதன் திருவடி வணங்குவன் யானே. 3

### மூத்த பிள்ளையார் (வேறு)

"பள்ளம் விரையும் புனல்போலப்" பரமன் றனையே விழையன்பர்
உள்ளக் களிற்றின் கழுத்தேறி உலவச் செலுத்தி அருள்நெறிக்கே
வெள்ளப் பிரசச் சிவனடிக்கண் விதலை யொழியக் கொடுநிறுத்தும்
பிள்ளைக் களிற்றின் திருவடியைப் பெரிதும் வணங்கிப் பேசுவனே. 4

### இளைய பிள்ளையார் (வேறு)

திங்கள் மண்டிலக் கோடியே திருமுக மாக
எங்கு தோன்றிடும் அடியருக் கிடர்களங் கங்கே
சங்கை யின்றியே வந்திடும் சண்முகத் தேவின்
பங்க யத்திரு வடியினை பரவிவாழ்த் துவனே. 5

### தமிழ்; (வேறு)

அன்பினல் விளங்குறு அமலன் செய்திட
ஆன்பினல் உலகெலாம் அடையும் இன்பென
முன்பினல் பொருளுரை முழங்கு நற்றமிழ்
இன்பினல் விளங்குக இசைகள் மன்னியே. 6

---

**குறிப்புரை:—** ௧ பொன்போற் பொலிவது கொன்றை: பவளம்போற் பொலிவது சடைகள்.
௨ உடலம் முதலிய: தனு கரண புவனபோகங்கள்.
௩ இருளிலே கிடந்த என்றது கேவலாவத்தையை. பேரொளி யாகும் அருள் என்றது சகலாவத்தையை.
௪ விதலை; அச்சத்தால் தோன்றும் நடுக்கம்.
௫ அடியருக்கு எங்கு இடர்கள் தோன்றுமோ அங்கு ஆறுமுகன் தோன்றுவாரென்க.
௬ பொருளுரை; இறையனார் களவியலின் முன் 'அன்பினைந்திணை' என்ற சூத்திரம்.

## நால்வர் (வேறு)

புகலியன் திருவா ரூரன் போற்றுநன் னவ லூரன்
இகலறு வாத வூரன் என்பவர்த் தாள்கள் போற்ற
அகலுறு உலகத் தென்றும் அமைபெயர் ஊறும் அற்றே
நகலுறு இறைவன் ருள்கள் நண்ணுதல் வாய்மை கண்டீர். 7

## அப்பூதி அடிகள்

அந்தணர் குலத்துள் வந்தும் அரும்பெறற் சைவம் ஆய்ந்தே
எந்தையா ரடிய ராவார் யாவரே எனினும் போற்றி
முந்துறு மன்பி னுய முதிர்நிலை யொடுநா வேந்தின்
செந்தளி ரடிகள் போற்றும் திங்களூ ரடிகள் போற்றி. 8

## சிவஞான பாலய சுவாமிகள்

அலகில் தமிழும் சைவமுமே அகிலம் விளங்கி விளக்கமுற
இலகு மயிலம் பிரமபுரம் இசைகள் விளங்கி வளஞ்சிறக்க
நிலவு செயல்கள் பலபுரிந்தே நிமலன் அருளார் வழிநிலவி
உலகம் விளங்கத் தான்விளங்கும் உயர்பா லயனு ரடிபோற்றி. 9

## 'வாழி'

வானம் வாழி பயிர்வாழி வளங்கள் சிறக்கப் பயன்சொரியும்
ஆனும் வாழி அறம்வாழி அறஞ்சேர் அரசும் நனிவாழி
தேனும் பாலும் எனச்சொல்லும் தெளிதீந் தமிழும் மிகவாழி
மானுந் துடியுங் கரத்தேந்தும் மழைபோற் களத்த னருளாலே. 10

## 'காரணமும், அவையடக்கமும்'

அருளெலாம் விளங்கும் பாலய தேவன் அரசிலிக் காதையை ஆய்ந்தே
பொருளெலாம் விளங்க உரையெனச் சொல்லப் போற்றியே அவனடித் துணையால்
இருளெலாம் அகல வுரைத்தனன் அடியேன் இன்றமிழ்ப் புலமையால் உயர்ந்தீர்
மருளெலாம் அகற்றிப் புதுப்பொருள் விரும்பல் மாண்புறு பெரியர்தங் கடனே. 11

## பாயிரம் முற்றும்.

(ஆகச் செய்யுள் 11)

---

எ புகலியன் திருவாரூரன் நாவலூரன் வாதவூரன் என்று ஊரோடு கூடிய நால்வரின் பெயரைக் கூறவே அடியார்கள் ஊரும் பேரும் அற்று வீடுபெறுவர்.

கக அருளெலாம் விளங்கும் பாலய தேவன் என்றது. "ஸ்ரீமத் ஞான இராசதானியாகிய இனும் பொம்மையபாளையம் திருக்கைலாய பரம்பரைப் பெரிய மடம் சிவஞான மயூராசலநிவாச யதீச்சுரகர்த்தரான மயிலம் தேவஸ்தான ஆதீனபரம்பரைத் தர்மகர்த்தத்துவம் இருந்தா கஅ-வது பட்டத்து ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளை

உ

# நாட்டுப் படலம்.

ஆன்றவிந் தடங்கு கொள்கை அறிவொடுஞ் செறிந்து நாளும்
மூன்றெனும் பொருள்மு டித்து முதல்வன டியைப் போற்றும்
சான்றவர் பலரைக் கொண்டு சகமெலாம் புகழப் பெற்ற
ஏன்றிடு தொண்டை நாட்டை எளியனேன் இயம்பப் போமோ? 1

## வேறு,

திங்களிற் சிறந்த வானந் தெண்கடற் பரப்பைத் தேக்கிக்
கொங்கவிழ் நறிய கொன்றைக் கொற்றவன் மிடற்றிற் றேன்றி
அங்கவன் பொலஞ்செய் மேனி யாமென வுலகின் மின்னிப்
புங்கவன் அருளைப் போலப் போய்வரை பொழிந்த தம்மா. 2

## வேறு:

கலித்த நன்மழை பொழிதலால் களிசிறந் துலகம்
ஒலித்த தாமென வரையெலாம் ஒலிபுனல் ஒழுக
சலித்த நன்மணி பொன்னெலாந் தன்னிடை தயங்க
வலித்த வள்ளியர் போன்மென வந்தபல் லருவி. 3

அருவி வாரியாய் ஓடையாய் அடைதரும் யாருய்
பெருகி நானில வைப்பெலாம் பிறங்கியே வருதல்
ஒருவன் பைப்பய அறிவினில் உயர்ந்தன ளுகித்
தரையெ லாங்கொளும் புகழொடு வருதலே தகைக்கும். 4

## வேறு.

"பிறர்க்கென வாழும் வள்ளியோ ரெல்லாம் பிறர்கடை நடந்துதாம் சென்றே
வறர்க்குத வுறுதல் போன்றிட" வானம் வண்புகழ்க் குடிளையாய் நடந்தே
சிறப்புறத் தொண்டை நாட்டினைச் செய்யும்; செய்யெலாம் செந்நெலுங் கரும்பும்
மறைப்புறப் பொதுளும் சோலேயுங் கமுகும் மற்றைய வளமெலாஞ் செய்தே. 5

## வேறு.

மழையுறழ் கொடைஞ ரென்று மாண்புறு புலவ,ரெல்லாம்
விழைபய னுவமை சொல்ல விளங்கிய மழையி னலே
கழைவளர் வரையுங் கானுங் கடலக வரைப்பும் நல்ல
குழைவளர் பழனப் பாலும் கொண்டன பயன்க ளன்றே. 6

---

க மூன்றெனும் பொருள்; அறம் பொருள் இன்பம் அல்லது பதி பசு பாசம் என்ற முப் பொருள்களை ஆராய்ந்து முடித்து.

உ "தெண்ணீர் வயற்றொண்டை நன்னடு சான்றோருடைத்து" என்பது ஔவை மூதாட்டியாரின் திருவாக்கு.

ங திங்களிற் சிறந்த வானம்; இறைவன் முடிசூடிய திங்கள் போல் வெண்ணிறம் படைத்த மேகம்;

ச உலகம் ஒலித்தாற் போல ஒலிக்கின்ற புனல் என்று கூட்டுக.

ரு குடிளை, யாறு.

## குறிஞ்சி.

வன்பினல் வேட்டை காண வந்திடு தலைவ,ரெல்லாம்
அன்பினல் வேட்டல் காண ஆக்கிடு காமக் குன்றம்
இன்பினல் வள்ளி வேட்ட இளையனுக் கிடனே யாகி
நன்பினல் நாக நாட்டின் நனிசிறந் திலங்கு மம்மா.

## வேறு.

மழைவளர் வரைக ளெல்லாம் மயிலெனத் திரியு நல்லார்
கழைவளர் அருவி யெல்லாங் கயலென முழுகிச் செல்வார்
குழைவளர் சார லெல்லாங் குயிலென இசைக்கு நல்லார்
மழைவளர் மினலைப் போல மழைபயில் குடுமி சேர்வார். 8

இருள்படப் பொதுளா நின்ற எண்ணருஞ் சோலை யெல்லாம்
தெருள்படப் பொருந்தி யாடும் தெரியிழைப் பெண்மை நல்லார்
மருள்படு மனமுங் கண்ணும் மணமுறச் சுழல்வ போல
மருள்படும் சுரும்ப ரீட்டம் மணமுறச் சுழலும் மாதோ. 9

சந்தனம் தேக்கு வேங்கைச் சார்பறத் தொலைத்த வேடர்
செந்தினை தோரை வித்திச் செய்தநற் புனத்தின் பாங்கர்
"கந்தனும் வள்ளி போன்ற" காதலர் பலருங் கூடிப்
பைந்தமிழ் இன்பந் துய்த்துப் பாவலர் நிகர்த்தா ரன்றே. 10

## வேறு.

தேன்நிறை வரையெலாம் தெளிவில் வெள்ளமா
வான்மறை புயலெலாம் வந்து பெய்யவும்
கோன்முறை தவறிடாக் குறிஞ்சி மக்களும்
நான்மறை பயிலுவார் நடுநல் யாமத்தே. 11

---

எ வேட்டல்; களவு மணம். நாக காடு; போக பூமி.

க பெண்மை நல்லாரின் மனமும் கண்ணும் காதலரோடு கூடும் மணத்தை ந சுழல்வபோல் சுரும்பரீட்டம் மலர் மணத்தை அடையச் சுழலுமெ

கo பைந்தமிழ் இன்பம்; அகப்பொருள் இன்பம் பாவலர்; புலவர், மலர்ந்த மலர்.

கக நான்மறை; இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்ற நான்கு, இயற்கைப்புணர்ச்சி முதல் மூன்றும் இளவேனிற் பகற்பொழுது நிகழ்வன; பாங்கியிற் கூட்ட இரவுக் குறியே கூதிர் இடையாமத்து நிகழ்வது ஆயினும் இவ்விடையாமப் புணர்வு நிகழ்வுழி ஏனைய மூன்றையும் எண்ணுதலின் "நான் மறை பயிலுவர் நடுநல்யாமத்தே" என்று கூறப்பட்டது, இந்நான்கும் நான்மறையாதல் "காமப்புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்றுங்கநால் வகையினு மடைந்த சார்பொடு மறையென மொழிதன் மறையோ ராறே" என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தாற் பெறுதும்.-(488)

## பாலை

கானமும் வரைகளும் கனன்று தோன்றிட
ஏனமுங் கரிகளும் இளைத்து வைகிட
வானமும் வெயிலுமே வயங்கி வெம்மைசெய்
வேனிலுந் தோன்றின விரிந்த பாலையே. 12

வற்றிய மரங்களும் வறண்ட பொய்கையும்
தெற்றிய சிலம்பிநூல் திகழ்வெங் கூவலும்
முற்றிய உருப்பமும் முடுகு கானலும்
செற்றிய மறவரும் சிவணும் பாலையே. 13

களரியைக் கள்ளியுங் கனன்றெ ரிந்திட
முளரியைப் போலொளிர் முதிர்நெ ருப்பினில்
வளரியை வண்புகை வயங்கித் தோன்றுவ
கிளரியைக் காளியில் கிளர்ந்து தோன்றுமே. 14

பொன்னுறை கல்லெனப் பொலியும் நற்குயில்
தென்னுறை சில்மரம் திரிந்து கூவிட
பன்னுறு பாணரும் பாலை பாடியே
உன்னுறு கள்வரும் உருகச் செய்வரால். 15

மானமும் வீரமும் மதித்து ஆவியை
ஈனமென் றெள்ளிடும் இளைய வீரர்கள்
ஆனமுங் காளையும் அடித்தும் மீட்டுமே
தேனிரை வெட்சியுங் கரந்தை தேர்வரே. 16

கள்ளியுங் கூகையுங் கனன் றொலித்திட
உள்ளிய செல்பவர் ஒழுக்கு கண்ணீர்
ஒள்ளிய தீயினை ஒழிக்கும் வெஞ்சுரம்
நள்ளிய காதலர் நடந்து செல்வரால். 17

செந்தளி ரடியெலாஞ் சிவந்து கன்றிட
மைந்தரொ டரிவையர் மணந்து சேரலால்
தந்தமர் வந்திடத் தலைவர் நீங்குதல்
வெந்துயர் தந்திடும் வேற்கண் ணார்கட்கே. 18

---

கஉ வானம்; நீலவானம்
கானமும் வரைகளும்; முல்லையுங் குறிஞ்சியும்,

கஎ இப்பாட்டு உடன் போக்கு

கஅ இப்பாட்டு உடன் போக்கிடையீடு

அய்வகைப் பிரிவினும் அகலும் ஆடவர்
மெய்யுறச் சுரத்திடை மெலிந்து கூடியே
நய்யுற மொழிபல நவின்று தேறியே
உய்யுற மொழிசில உரைப்பர் காண்டிரால். 19

## கல்வி

மால்தரு மாதரார் கலவி மாந்தியே
நூல்தரு கல்வியை நுகர்தல் நீக்கினால்
சால்தரு அறிவெலாஞ் சற்றுமின்றியே
மேல்தரு கதியிடை மேவம்? என்பரால். 20

## நாடுகாவல்

ஒருவரின் அஞரினும் உலகர் துன்பமே
வெருவறக் களைந்திடல் விழையத் தக்கதே
தெருமரு மனத்தொடு தெரிவை நிற்பினும்
உருவுற உலகினுக் குதவல் நன்றென்பார். 21

## தூது

உமையொடு கூடலும் உளத்தி வின்றியே
அமைவரு தூதிடை அரனுஞ் சேர்வரேல்
கமைவரு காதலி கடிந்து சொல்லினும்
சமைவரு தூதிடைச் சார்தல் நன்றென்பார். 22

## உற்றுழி உதவல்

வேல்புரை கண்ணியர் வெதுண்டு நிற்பினும்
"மால்வரும் உடைநெகிழ் மகளிர் கையென"
மேல்வரு செயலெலாம் விலக்கி மிக்கதோர்
சால்பினைப் பெற்றவர்க் குதவல் சால்பென்பார். 23

## பொருள்

காதலும் காமமும் கரைபுரண்டிட
மாதரைக் கூடியே மனையில் வைகினால்
ஈதலும் துய்த்தலும் இயற்று நன்பொருள்
ஆதலும் கூடுமோ அரிமின் என்பரே. 24

ஆள்வழக் கற்றிடும் அரிய பாலையுள்
நீள்வளி வீசலால் நிமிருந் தீப்படக்
கோள்வரி வேங்கையும் குமிரக் காண்பரோ
கேள்வரும் என்னவே கிளப்பர் நங்கைமார் 25

மணிமழை கடுத்திட மரத்தின் கோடெலாம்
அணியுறு பனிப்பெயல் அடுக்கும் அச்சிரம்
தணிவறு வெஞ்சுரத் தகைமை அஞ்சினோர்
நணியுறு பல்லெலாம் நடுங்கச் செய்யுமே 26

---

௧௯ ஐவகைப் பிரிவு; கல்வி, நாடு காவல், தூது, உற்றுழி உதவல், பொருள் இவை காரணமாகப் பிரியும் பிரிவு.

௨௦ மேவம்; மேவுவோமா என்று வினவாக்குக அல்லது எதிர்மறை முற்றுக் குக.

௨௩ ஆண்களைக் காட்டிலும் பெண்களே நாணத்திற் சிறந்தவராதலின், உடை நெகிழின் ஆடவரைக் காட்டிலும் மிக விரைந்து போற்றக் கூடியவர் பெண்களே; ஆதலின்- "உடைநெகிழ் மகளிர்கை" என்று இங்கு கூறபபட்டுள்ளது.

## முல்லை

"பொருளிலான் இளமைபோல்" புல்லென் கானமும்
"அருளிலான் வாழ்க்கைபோல்" அழிந்த சோலையும்
"மருளிலான் தவமென" மலிய மாமழை
"வெருளிலான் மொழியென" விளங்கப் பெய்ததே 27

வாடிய மரங்களும் புதரும் வண்மையாய்க்
கூடியே தளிர்த்திடக் கொண்டல் மின்னியே
நீடிய பெருமழை நிறைக்குங் காரினால்
பீடுறு புறவெலாம் பிறங்கு கின்றவே. 28

கொல்லையின் ஆனினங் குறுக இல்லெலாம்
நல்லொளி கொளுவிட நணுகி நங்கைமார்
எல்லொளி மறைந்திட இருளுங் கைவர
முல்லையும் முகிழ்த்திட முடுகும் மாலையே. 29

பைம்புதல் சங்குகன் மணிப ரத்தலால்
எங்கணும் மாயவன் இனிய தோற்றமே
தங்கிடும்; பூவையம் மலர்கள் தோன்றுவ
அங்கவன் மைந்தனை அடுக்கும் என்பரால். 30

முல்லையும் முசுண்டையும் முகிழ்த்த லர்ந்திடும்
கொல்லையும் புதர்களும் கோல வானமும்
எல்லைதீர் உடுக்களும் எனவி ளங்கிட
கொல்லைசேர் குறுஞ்சுனை குளிருந் திங்களே. 31

மைவிழி ஆய்ச்சியர் மயலின் மூழ்கிய
நைவிழி ஆயரும் "நடைவல் லேறெனும்
கைவழி நளிர்கடல்" கடந்து அந்நலார்
தொய்வழி இளமுலைத் துணையிற் சேர்வரே. 32

வரகொடு சாமையும் வயங்க வித்தியே
விரகொடு பயன்கொளும் வினைஞர் யாவரும்
குரவொடு மரவலர் குடுமி சூடியே
உரவொடு குழலிசை ஊதி நிற்பரே. 33

---

உஅ கொண்டல் மின்னி மழையை நிறைக்குங் கார்காலத்தால் புறவு பிறங்குமென்க.

உகூ நங்கைமார் நணுகி இல்லெலாம் நல்லொளி கொளுவிட என்று கூட்டுக. நல்லொளி; மாலை விளக்கு.

௩க கொல்லையும் புதர்களும் பசுமையால் நீலவானம்போல் தோன்றுகின்றன; முல்லை முசுண்டைப் பூக்கள் உடுக்களைப்போல் விளங்குகின்றன; குறுஞ்சுனை திங்கள் போன்றது.

௩உ இப்பாட்டு ஆயர், ஏறு தழுவி ஆய்ச்சியரை அடையும் அசுர மணத்தைக் கூறுகின்றது.

விளம்பழம் வரகினின் வெய்ய சோற்றொடு
களம்பழம் இளந்தயிர் கறவைத் திம்பயன்
உளங்கொளும் புழுக்கலும் உறைந்த வெண்ணெயும்
தளர்ந்தவர்க் களித்திடு தகையர் எந்துமே. 34

குளவியும் முல்லையும் குருந்தங் கொன்றையும்
வளமுறு பித்தியும் வயக்கச் சூடியே
தளவென மூரலும் தயங்க ஆய்ச்சியர்
"இளவுழை போல்"விழி இலங்க நிற்பரே. 35

ஆக்களுங் காளையும் அணைந்து செல்வபோல்
மேய்க்குற பெண்களும் மேவும் ஆண்களும்
போய்க்குறும் புன்னையுன் போகத் துய்ப்பரால்
"எய்க்குறப் பின்னையும் இளைய மாலுமே"

பேதுறு வண்டெலாம் பெரிய கொன்றையுள்
ஓதுறு காலையில் உறுவன் காணென
காதலர் கூறிய கருத்துள் நிற்றலால்
மாதரும் காரினை மறந்தும் நோவுறார். 37

கார்மிகப் பரத்தலால் கார்ந்த வானமே
நீர்மிகப் பரத்தலால் நிலமும் நேர்படா
ஏர்மிக வுடம்பெலாம் இடந்து டித்தலால்
தேர்மிக வருமெனத் தெளிவர் தீஞ்சொலார். 38

முன்றிலின் உணங்கலை முடிய வுண்டலால்
துன்றிலிற் பெடையொடு துயில நன்குரீஇ
ஒன்றிய மாலையில் உறுவர் கொண்கரென்
றின்றிய துயிலொடும் இருப்பர் நங்கைமார். 39

---

௩௬ பின்னை; நப்பின்னைப் பிராட்டியார்,

௩௭ வண்டு கொன்றையுள் ஓதுறுகாலம். கார்காலமாம்; தலைவன் கூறிய சொற் கொண்டு ஆறியிருத்தல் முல்லையாதலின் கார்காலத்தை நோவார் கண்வன் வருவான் என்று எண்ணியிருப்பாரென்க.

## மருதம்.

வற்று வளவயலும் வாய்மாண்ட ஏரியும்
குற்று மரைமலரும் கோலஞ்செய் பொய்கையும்
சுற்று அளியினமும் சோலைப் பெருமலரும்
முற்று மருதத்துள் மூரிப் பெருகுவன. 40

## வேறு

வெள்ளிகண் மாறலால் விசும்பு பொய்ப்பினும்
கொள்ளியல் நீராருக் குளங்கள் மன்னுவ
"தெள்ளிய தீயநாள் திருவர்க் கில்லெனும்
ஒள்ளிய நன்மொழிக் குவமை யாகுமால். 41

மரையொடு குமுதமும் மாறிப் பூத்தலால்
இரைதரு ஞிமிறினம் என்றும் மாறிடாத்
திரைதரும் புனல்வளர் தீந்தண் பொய்கைகள்
தரைதரும் அமிழ்தெனத் தயங்கும் எங்குமே. 42

இகஞ்செயும் பயனெலாம் இயற்று தென்னையுள்
சுகஞ்செயுங் குறியெலாஞ் சுமந்து காண்வர
முகஞ்செயுங் குரும்பைகள் "முலையை ஒத்தலால்"
அகஞ்செயும் இளையவர் அமர்ந்து காண்பரே. 43

பச்சிளங் கமுகெலாம் பகன்ம றைத்தலால்
உச்சியுங் குளிர்கொளும் உயர்ந்த சோலையுள்
நச்செனும் விழிச்சிறு நடுவர் தம்முலை
வெச்சென விளங்கலால் விழைவர் மள்ளரே. 44

கரும்பினைக் காத்திடுங் கருங்கை மள்ளர்கள்
விரும்பின குரக்கினம் வெருட்ட மேலுறீஇ
"பரும்பின கழையுறும் பாதர் ஒத்தவால்"
சுரும்பினஞ் சுழல்வயற் சூழ லெங்குமே. 45

"காமன்போற்" கருகிய கழைக்கை மள்ளர்கள்
"தூமன்போல்" நிறமுறு துணைப்ப கட்டினை
காமன்கால் வணங்கினர் கலப்பை பூட்டியே
ஓமன்நீர் வயல்களை உழுது வைகுவார் 46

---

௪0 வாய்; மதகு. குற்று மரைமலர்; மிகுதியால் பறித்துத் தலைக்கட்ட முடியாத தாமரைமலர் சுற்று அளியினம்; மலர்கள் மிகுதியாக யிருத்தலினு லும் ஒவ்வொருமலரும் மிகுதியான நறவைப் பெற்றுள்ளபடியால் மலரையும் நறவையும் தெடிச் சுற்று வண்டினம் என்க,

௪௧ 'செல்வர்களுக்குத் தீய நாள் இல்லை' என்பது பழமொழி.

௪௨ மாறிப்பூத்தல்; தாமரை காலையிலும் குமுதம் மாலையிலும் பூத்தல்.

௪௩ சுகம்; கிளி. அகஞ்செயும் இளையவர்; அகத்திணை பயிலும் மாணவர்.

௪௪ வெச்சென; வெம்மையாக.

௪௫ பரும்பின; பருத்த.

௪௬ முதலில் வந்துள காமன் மன்மதன்; இரண்டாவது காமன் இந்திரனுகும் காமன்; காமன் என்க, ஓமன் நீர்; மதகில் மன்னிவரும் நீர்.

சேறெலாம் எருப்பெய்து செவ்வை செய்தபின்
பாறெலாம் திரண்டிடு பரிய வேற்கணூல்
கோறெலாம் முயல்கடைக் கோதை மார்களும்
நாறெலாம் வயல்களில் நடுவர் நன்கரோ. 47

பச்சையாய்ப் பணைத்துயர் பயிர்கள் யாவையும்
இச்சைகூர் அறம்வளர் இறைவி மேனிபோல்
நிச்சலும் வளர்ந்தவள் நெல்லைக் கொண்டென
உச்சியில் கதிருற வொசிந்து நிற்குமே. 48

திறமெலாங் காட்டிய திகழ்பொன் னாடென
நிறமெலாம் பொன்னுற நிலத்தில் உற்றதால்
வறமெலாம் அற்றிட வழங்கித் துய்த்திட
அறமெலாம் மன்னிட அறுப்பர் சாலியே. 49

தலமிசை உழவரும் தாமும் தோற்றிய
பொலனுறு சாலியின் போர்கள் யாவையும்
நிலனுறப் பரப்பிட நிமிர்ப கட்டினம்
வலனுற உழக்கியே வைநெல் பாத்துமே. 50

எளியவர் பொருநர்நல் விளையர் தாமெலாம்
களியுறக் கொடுத்தனர் கழிந்த நெல்லெலாம்
அளியுறு விருந்தினர்க் காக்கி ஊட்டிடும்
நளிமனை உழவரான் நடக்கும் ஞாலமே. 51

## வேறு.

''முல்லை முகைநேர்'' வெண்சோற்றை முதிரக் காய்ச்சு நறும்பாலில்
எல்லை இகக்குங் கேளிரெலாம் இருந்தே உண்டு மிகுந்தவற்றை
''அல்லைப் புரையுங்'' குழலாளும் அன்பைப் பெருக்குந் திறலானும்
ஒல்லைப் புசித்து அறங்காக்கும் உயர்மா மனைகள் மிகப்பலவே. 52

---

சஎ நாறு; நெல் நாற்று.

சஅ பொன்னாடு; சுவர்க்கநாடு,

ருo தாமும் என்றது பகட்டினத்தை, பாத்தும்; உழவருக்கு [நெல்லும் தமக்கு வைக்கோலுமாக பிணையடித்தலால் பருக்கும் என்க.

## நெய்தல்

புன்னையும் தாழையும் பொதுளிப் பூக்களால்
மன்னிய கடலெலாம் மணத்தை வீசிட
பொன்னியல் கதிரொளி போகும் போதுதான்
துன்னறு காதலர் துயரத் தோன்றுமே. 57
வளியெழு கடற்றுளி வானின் மீனெனத்
துளியெழு அரும்பெலாந் துணர்க்கும் புன்னையுள்
களியெழு பகல்செலக் கலங்கிச் சேவலை
விளியழை குருகெலாம் விரைந்து தங்குமே. 54
மணிநிலா விரிந்திட மலர்கள் கூம்பிட
அணிநிலா மடந்தையர் அாற்றிக் கானல்வாய்
தணிவிலா மயக்கினிற் றயங்கி வைகிட
"பணிவிலான் மொழியெனப்" பாக்கும் வாடையே. 55

## வேறு.

குழைத்த புன்னையுட் குளிர்மதி எறித்திடு நிலவால்
"இழைத்த வெள்ளியின் தகடென" இலையெலாம் இலங்கும்
மழைத்த நற்கடல் "மல்லிகைத் தாரெனச்" சுழலும்
தழைத்த வெண்டிரை தன்னொடு பொலிவுறத் தயங்கும். 56

## வேறு

திங்களுண் முயலே! எங்கள் திருத்தகு கொழுநர் மன்னித்
தங்குறு கலத்தைக் கண்டுத் தகைபெற வாவு கூறின்
இங்குறு இளம்புல் லெல்லாம் எடுத்துனக் களிப்ப மென்றே
மங்கைய ரிரங்கி நிற்ப மதிநிலா விரிக்கு மன்றே. 57

## வேறு

மீனும் உப்பும் நொடைப டுத்தி மிசைய நெற்கொள் அளவியர்
தேனும் வண்டும் நறவ ருந்தி திசையெ லாமொ லித்தலால்
கான லஃதெ னத்தெ ரிந்து காத லோடு புகுதரும்
வான மேவு சோலை துன்னி வாளை தாவு கானலே. 58

"மலையெ ன"த்தி ரைகள் வந்து மாறி மாறி மோதினும்
நிலையி னிற்க லக்க மின்றி நின்று தேரும் நாரைகள்
"உலைதல் மேவு துன்பும் இன்பும் உற்ற நாளும் இறையடி
அலைத லின்றி நெஞ்சள் கொள்ளும் அறிஞர் மானும்" நன்றரோ. 59

---

ருக கதிரொளி போகும்போது; எற்படுகாலை.

ருஅ நொடை படுத்தல்; விற்றல். அளவியர்; நெய்தல் நிலப் பெண்கள் தேனும்; தேன் வண்டுகளும், வண்டின் ஓசையால் கானல் இது வெனத் தெரிந்து வருவர் அளவியர் என்க.

உணங்கல் உண்ண வானில் துன்னி உலவுகின்ற புட்குலம்
பிணங்கி யோட சங்கெறிந்து பேணு பேதை மாரெலாம்
அணங்கெ னப்பொ லிந்து நின்று ஆளி, மொய்ம்பின் இளைஞரை
இணங்க லொத்த கண்ணை யேவி எளிதில் வென்றி கொள்வரே. 60

சேம மாய புணைய டங்க சிதறி யோட வெடியுறும்
நாம நீர கடலு லாவு நனிபெருத்த சுறவினும்
வாம மேக லைப்ப ரந்த வாரி பெற்ற மங்கைமார்
காம மேவு கயல்வி லங்க கலம றந்து வாழ்வரே. 61

மணியும் மீனும் வாரி வாரி மலையெ னக்கு வித்திடும்
அணிகொள் மேனி அளவர் யாரும் அம்ம லைவெ றுப்பரேல்
துணிவி லாத இடையி னும்பர் தோன்றி ரண்டு வெம்மலைத்
தணிவிலாத காதல் பெண்டிர் தரவி ரும்பி அடைவரே. 62

## திணை மயக்கம்

முல்லைக் கொடிகள் கடற்கானல் முடுகிப் படர்ந்து ஆய்ச்சியர்தம்
பல்லைப் பொருவ முத்தொளியை பதுங்கிக் கவரும்; இளம் புன்னை
கொல்லை வளர்ந்து குழலூதும் கோவர் தமக்கு நிழலீந்து
வில்லைப் பொருவு நுதற்பொதுவி வெண்பல் லொளியைக் கவர்ந்திடுமே. 63

குன்றக் குறவர் மடமகளிர் குலவும் முல்லை மலர்சூடி
நன்று வளர்ந்த தினைப்புனத்தே நணுகிக் குழலும் மொழிகேட்டே
ஒன்று கிளிகள் மிகநாணி ஓடிப் பழனத் தெங்கேறி
நின்று வளரும் குரும்பையவர் நேரும் முலையென் றூறுசெயும். 64

## வேறு

கோங்கரும் பிணையை "மாதர் கொங்கைநேர்" என்றோ ரண்ணல்
தீங்கற மொழியக் கேட்டத் தேன்மொழி ஆய்ச்சி ஊட,
ஆங்கவள் மருண்ட கண்ணை அஞ்சிய நவ்வி ஓடி
பாங்குள கழியின் நெய்தல் பார்த்துளம் மகிழு மன்றே. 65

செய்வளர் பழனச் சேலும் சேர்திரைக் கழியின் சேலும்
கொய்தினை வரையிற் பாய்ந்து குதித்திடு சுனைக ளெல்லாம்
நெய்யுறு குழல ராகி நிலவிடும் கொடிச்சி மார்கள்
மெய்யுறு முகத்தை ஒக்க மிளிர்ந்திடும் தொண்டை நாடே. 66

கான்வளர் ஆனின் பாலும் கழைவரைச் சிகரத் தேனும்
தேன்வளர் சொல்லின் நல்லார் திரித்துயர் தலைவர்க் கீய
வான்வளர் அமிழ்தம் வெல்லும் வாலெயி றிலங்கு நீர்போல்
மான்வளர் மதியத் தன்ன மங்கைமீர் இனிக்கும் என்பார். 67

நாட்டுப் படலம் முற்றும் ஆகச் செய்யுள் 78.

---

கூ0 உணங்கல்; மீன் வற்றல்.

கூக வெடியுறுதல்; துள்ளித்தாக்கல், நாமம்; அச்சம், வாம மேகலைப் பரந்தவாரி; அல்குல் கலம் மறந்து; மரக்கலத்தை மறந்து.

கூரு மாதர் என்ற பன்மையால் ஆய்ச்சி ஊடினாள்: அப்பொழுது மருண்டிருந்த அவள் கண்ணை நவ்வி ஒவ்வாமையால் தோற்றோடிற்று; அது கழியில் உள்ள நெய்தல் மலர் தன் கண்போல் மலர்ந்திருத்தலைக் கண்டு உளம் மகிழ்ந்தது.

கூஎ 'வெல்லும்' என்ற சொல்லுக்கு வெல்லுகின்ற உம்முடைய என்று பொருள் காண்க. திரித்து; கலந்து,

# நகரப் படலம்

## நகரம் இருக்கு மிடம்

தொண்டை மண்டிலக் காஞ்சிநா டெனுமொரு துறையில்
வெண்டி ரைப்புனல் விளங்குவே லூரெனுங் கோட்டம்
மண்டி லத்தினில் சிறந்ததோர் மரைமலர் அதனுள்
அண்ட ரும்புகழ் அரசிலி பொலன்பொகு டம்மா. 1

## வேறு

தென்னார்க் காடு மாவட்டத் திண்டி வனத்தின் கூற்றத்தில்
பொன்னார் மேனித் தெய்வத்தின் போதம் நிறைந்த இடமாகும்
மின்னார் தோயும் நீர்த்துறையுள் மேவுங் கயல்கள் மிகக்சேர்ந்தே
அன்னார் முகத்தின் கயலோடு அன்பைச் செலுத்தும் அரசிலியே. 2

## நகர மக்கள்

ஏரி நிறைந்த நீராலே எங்கும் வயல்கள் மிகமன்னி
வாரி பெருகச் செல்வரெலாம் வண்மை யறத்தை மிகப் பெருக்கி
வேரித் தொடையல் மாதரொடு வேட்ட போகம் நுகர்ந்தனராய்
காரி இடத்தன் அருளாலே நன்கு விளங்கி யிருப்பாரே. 3

சோம்பல் மறவி நெடுநீர்மை சொல்லும் துயிலுஞ் சிறிதின்றி
ஏம்ப லறவே பொருளீட்டி எவர்க்குங் கொடுத்த உவகையராய்
தேம்ப லிடைசேர் உமைநாதன் திருக்கால் மனத்தே தினநிறுத்தி
"ஆம்பற் குளம்போல்" அரசிலிக்கண் அமர்ந்தோர் மகிழ்ந்து வதிவாரே. 4

## வேறு

தமக்கென இல்லஞ் செய்து தம்மவர் மருங்கே வாழ
தமக்குறு செல்வ மீட்டித் தாங்கொடுத் ததன்பின் உண்டே
அமைக்குநல் லுலகில் வாழும் அருந்தவத் தேவர் போன்றே
உமைக்கொரு நாதன் கால்கள் உளங்கொடு மாந்தர் வாழ்வார். 5

சுமைக்கென உடலைப் போற்ருச் சொற்றெறி வீரர் எல்லாம்
தமக்கென உலையை யேற்ருத் தகைபெறு நல்லா ரோடே
அமைக்குறு அறத்தைக் காத்து அறவழிச் செல்வ மீட்டி
இமைப்பறு கடவுள்போல இன்பமே துய்ப்பர் மன்னே. 6

---

* ஆம்பற் குளம்; ஆம்பல் வாழுங் குளம். ஆம்பல் குளத்திலுள்ள நீரோடே மலர்ந்து நீரற்றலும் அங்கேயே வாடி நிற்பது. அதுபோல் நன்மைக் காலத்திலும் தீமைக்காலத்திலும் ஊரில் நீங்காதவர் அரசிலி வாழ்வார் என்க.

காட்டெலாம் களைந்து ஆப்பிக் கலந்தநீர் மெழுகிக் காலை
ஈட்டிய கலங்க ளெல்லாம் எழில்பெறத் துலக்கி மூழ்கி
"ஊட்டிடு அமிழ்தம் போல" உணவெலாம் அமைக்க மாதர்
கேட்டிலும் உறுதி சூழும் கிளைஞரும் பதியும் உண்பார். 7

எச்சிலும் காட்டு மின்றி இலங்கிய தெருக்க ளெல்லாம்
பச்செனும் மரங்கள் வாய்ந்து பணையெலாம் தளிர்த்து நிற்கும்
கொச்சைய மொழிகள் பேசுங் குழவிகள் விளையாட் டாலே
அச்சிறு முருகன் ஆடும் அமரர்கள் உலகம் போன்ற. 8

## கோயில்.

புவிப்பொருள் முதல வெல்லாம் புகலுறு அணுவும் போதாத்
தவத்தொழில் உலகமெல்லாம் தவலற நடத்தல் வேண்டி
அவத்தொழில் புரியா வண்ணம் ஆண்டவன் விளங்கிக் காக்கும்
சிவத்தொழில் கோயில் மன்னிச் சிறப்பிறைற் பொலியும் ஆங்கே. 9

அன்பெலாம் விளைத்து நாளும் அருளெலாம் தோற்றி என்றும்
இன்பெலாம் அடியர்க் காக்கும் எழில்பெறு கோயிற் கண்ணே
நன்பெலாம் நிறைந்த நாதன் நளிரடி வணங்கி யன்பர்
என்பெலாம் உருகி நைவார் இணைவிழிப் புனலினோடே. 10

யான்எனுஞ் செருக்கை நீப்பீர் யாவரும் இறைவன் மக்கள்
தேன்நிறை இதழி வேணித் தேவனே தலைவன் யார்க்கும்
கோன்அவன் அடியை வாழ்த்திக் கூடலே பயனுமென்றே
ஆன்அமர் இறைவன் நூல்கள் அடியவர் இசைப்பார் அம்மா. 11

ஏல்வகைப் புனலை வார்த்து எங்கணுந் தூய்மையாக்கி
நால்வகை மலருந்தேடி நல்லதோர் மாலை செய்தும்
மால்வகை சிறிது மின்றி மணப்பொருள் கூட்டித் தந்தும்
மேல்வகை அடிய ரெல்லாம் மெய்ப்பொருள் தொண்டே செய்வார். 12

வெண்டிரு நீறு பூசி விளங்குகல் லுடையுஞ் சாத்திக்
கண்டிகைக் கலன ணிந்தே கவின்றஐந் தெழுத்தும் போற்றி
அண்டமுங் கடந்து நின்ற அறிவனை அகத்துள் வைத்தே
தொண்டர்தங் குழுக்க ளெல்லாம் தொழுதிடு கோயில் அம்மா. 13

வாம தேவனும் சத்திய விரதனும் வயங்குநல் லருள்சேர்ந்த
சோம னேமிகர் இந்திர சேனனும் சொலுமவன் மகளாரும்
காம சூதனன் றன்னையே பாடிடும் காழிவாழ் பெருமானும்
சேமம் உற்றிடப் போற்றியே அருள்பெரு சிறப்புடைப் பதியம்மா. 14

நகரப் படலம் முற்றும். ஆகச் செய்யுள் 92.

---

எ காட்டு குப்பை, பதி; கணவன்.

அ அச்சிறு முருகன் ஒன்பான் விரர்களோடு விளையாட்டயரும் அமரர்கள் உலகம் போன்றது அரசிலி வீதி.

# வாமதேவர் வழிபட்ட படலம்.

வீடு வேண்டியோ ரந்தணன் தவஞ்செய விரிந்ததொல் வினையாலே
கேடு சூழ்ந்திட இரந்துபின் கீடமாய்க் கேதாரத் தோர்காவில்
கோடு சூழ்ந்திடு மரத்தினி லிருந்திடக் குளிர்மதிப் பிறையோடே
ஆடு பாம்புவா ழவிர்சடை யிறையவ னம்பிகைக் கருள்செய்ய. 1

அம்ம ரத்தடி அமர்ந்தனன் அருளினல் ஆகம முறைசெய்ய
வெம்மை யிற்புரி கொடுவினை விலகிட வீழ்ந்ததப் பெருமான்முன்
செம்மை உற்றிடு புழு; அதைக் கண்டுதான் சிவன்றிரு வருள்கூர்ந்தே
மும்மை உற்றிடு வினையெலாம் அகன்றிட மொழிந்தனன் சிலசொற்கள். 2

புழுவெ னத்திகழ் புன்மைதீர் அந்தண! போனதுன் வினையாவும்
இழுமெ னத்திகழ் புனல்சொரி தமிழகத் தெய்திஆ ரிடஞகி
வழுவ னைத்தையும் அகன்றிடு வாமதே வப்பெயர் வரமக்கள்
குழுவ னைத்தினும் நற்பொருள் கொளுத்திடு கும்பிடென் வடிவென்றான். 3

நீல மேதிகழ் வாலிழை பாகனார் நிகழ்த்திடும் உரையாலே
கோல மேதிகழ் மங்கையர் முகமதி கொழித்தகல் லமிழ்தோடே
நீல மேதரும் தண்டமி ழகத்தினில் நிலவுநல் லணியூரில்
சீல மேதருஞ் சைவநன் மரபினிற் செனித்ததப் புழுசேயாய். 4

வந்து தித்தசே யிறையவன் வரத்தினல் வளர்ந்துநற் கலையாவும்
முந்து நின்றிட முதிர்புலன் வளர்ந்திட முதல்வனு ரடிக்கன்பு
"சிந்து வென்றிடும்படி" உளம் பெருகிடச் செழும்பொனின் வடிவேய்ந்தே
அந்தி வெண்பிறைச் சடைமுடிப் பெருந்தகை அருளெனப் பொலிந்தானே. 5

அன்பி னலமை வடிவுடை யிறையவ னருளிய பெருவாழ்வால்
இன்பி னலமை கல்வியும் ஒழுக்கமும் இறையடி மறவாத
முன்பி னலமை எண்ணமும் அறிவெலாம் முதிர்ந்திடு பெருவாழ்வும்
என்பி னலுரு வடிவுடைப் புழுவுறின் என்னுரும்? இறையாலே. 6

குழலை வாயினல் மாதவன் குறிக்கினும், கோதறு நரம்பாலே
எழலை யாகிடும் யாழிசை இசைக்கினும், இன்னிசை எனக் கொள்ளார்
மழலை வாயினல் பொருளுரை வழங்குமிம் மைந்தனைக் கண்டோர்கள்
அழலை ஏந்திய சிவனருள் இதுவென அகத்தினில் தெளிந்தாரே. 7

---

குறிப்புரை:—க அருள் செய்ய என்னும் எச்சம் அடுத்த பாட்டில் உள்ள அமர்ந்தனன் என்னும் வினை முற்றுடன் முடியும்.

ச நல்லமிழ்தம்; வாலெயிறூறிய நீர் நீலமேதரும்; கண்ணுகிய நீல மலரைத் தரும். —

கல்ல வாமதே வப்பெயர் புனைந்திடு நல்லிளஞ் சேய்காளும்
அல்லை நீக்குறு முழுமதி சொரிந்திடும் அணியுறு நிலவேபோல்
முல்லை மாக்கொடி அரும்பிட முகிழ்விரி முந்துறு மலரேபோல்
தொல்லை யாக்குறு மலந்தபு நீற்றினைத் தோன்றுறப் புனைவானே. 8

பொன்னின் நன்னிறம் போன்றொளிர் கண்மணி புரண்டிட நன்மார்பில்
மின்னில் துன்னுறு செஞ்சடை மேவுற, விளங்குநற் றுவராடை
துன்னு கோவணந் தன்னொடு துலங்கிடத் துயரறு துணையாகப்
பன்னு மந்திரம் பகர்ந்தொளிர் வாயொடு பரனெனப் பொலிவானே. 9

அன்பு புல்லியும் பொய்மையும் வஞ்சமும் அணுத்துணை இல்லாமல்
இன்பு புல்லிய செம்பொருள் இசைக்குமோ ரெழிலுறு மின்சொல்லால்
துன்பு புல்லிய உலகினைத் தூய்மையில் தோய்ந்திடப் புரிவித்தே
என்பு புல்லிய உடற்பயன் எய்திட எவர்க்குமன் குரைப்பானே. 10

பிணியும் சோம்பரு மில்லையாய்ப் பீடுறு பிள்ளைமை வடிவான
அணிகொள் மாதவன் அலகலும் நீணிலத் தண்ணலா லயங்கண்டே
பணிதல் வேண்டினன் "பண்ணவன் கோயிலைப் பரனென நினை" யென்ற
துணிவின் மேவிய சொற்றொடர்ப் பொருளினிற் றுவக்குறு கருத்தாலே. 11

உலகம் யாங்கணும் உளஅரன் ஆலயம் உவப்பொடு சூழ்போதில்
திலக மாகிய அரசிலி எனுநகர்த தெரிதர வருங்காலைக்
கலக மாகிய வினைத்தளைக் கழன்றிடக் களங்கறு தெளிநீர்போல்
இலவ மாமனம் நிறையுடன் இறையடி நினைவினில் நிமிர்ந்தன்றே. 12

## வேறு.

பூந்துணர்ச் சோலையும் புல்லும் வல்லியும்
மாந்துறு நீரமை மலலற் பொய்கையும்
நீந்துறு மீனமும் நின்ற பூக்களும்
போந்துறு மாதவன் புகலக் கண்டனன். 13

தேன்விரி மலரகம் தெரிந்து வண்டெலாம்
கான்விரி புதலகம் களுலுப காட்சிதான்
ஆன்விரி கொடியம ரழகற் கண்ணுற
நோன்பமர் அடியவர் நுழைதல் போலென்றான். 14

---

௬ அறிவுடையார் எல்லாம் உடையர் ஆதலின், அறிவெலாம் முதிர்ந்திடு பெருவாழ்வும் என்று கூறப்பட்டது

௰ இப் பாடடு, "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்" என்னும் திருக்குறளை நோக்கியது.

௧௧ ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே, என்பது சிவஞான போதம்.

எரிபுரை மரைமலர் இலங்கு பொய்கைவாய்க்
கரிபுரை ஞிமிறினம் கஞலிச் சுற்றுவ
தெரிவரு சிவத்தளி தெரிந்து சூழ்தர
புரியிரு ளுயிரெலாம் புதுவ போலென்றான். 15

தேங்குறு நறைபயில் தெய்வக் கானெலாம்
மாங்குயில் விளிப்பிசை மாந்தும் மாமுனி
ஓங்குறு சிவன்றனை உய்யக் கூவிடும்
பாங்குறு அடியவர்ப் பாணி போன்மென்றான். 16

பல்வகை நறைத்திரள் பரந்த பொய்கைநீர்
நல்வகை மயிற்குழு நலத்தில் உண்டலால்
சொல்வகைப் பொருளறி சுகத்தில் ஆடுறும்
நல்வகை அடியரில் நடிக்கும் என்றனன். 17

வெள்ளிய தாழையுள் விரிந்த நீறெலாம்
ஒள்ளிய நீறென உதிரக் கண்டவன்
அள்ளிய புன்னையின் அரும்பை அன்பரின்
தெள்ளிய கண்புனற் றிகழ்வென் றுன்னினான். 18

இன்னணம் அரசிலி இயற்கைக் காட்சியைத்
தன்னமர் மனங்கொளத் தலைக்கொண் மாதவன்
முன்னமர் அரசினின் முடியுங் காணலால்
இன்னமர் விழைவொடு இறைஞ்சி வந்தனன் 19

அன்புளம் உருகிட அளிக்கண் நீர்வர
இன்புறு உடன்மயிர் எழுந்து குச்சிட
என்பகம் நெகிழ்வுறு இயல்பிற் சென்றவன்
முன்பமர் அரசிலி முதலைக் கண்டனன். 20

வணங்கினன் பன்முறை வலத்தில் சூழ்ந்தனன்
சிணுங்கினன் இறந்தநாள் சிறுமை யாய்த்தென
இணங்குநல் அரசிலி இறையைக் கண்டநாள்
"மணங்கொளும் நாளென" மகிழ்வுற் றானரோ. 21

---

௧௫ புரியிருள் உயிர்; ஆணவ மலத்தாற் கட்டுண்ட உயிர்,

௧௬ அடியவர்ப் பாணி; கீதமினிய குயிலே, என்று பாட்டிசைத்த வாதவூரர் போன்ற அடியார்களின் பண்.

௧௭ சொல்; சிவாகமம்,

வானுலாம் அரசடி வயங்கு கின்றதோர்
தேனுலாம் சிவனருட் டெளிவை உண்டலால்
நானெலாம் எனதெலாம் நடக்க நெஞ்சினுள்
கானுலாம் உமையிறைக் கழல்கள் வந்தவே. 22

உயிருறு கோயிலா உறையும் இசநீ
மயர்வறு அரசடி மன்னு காட்சிதான்
செயிரற அகம்புறம் செறியும் சீர்மையை
அயர்வறக் காட்டுமென் றறைந்து வாழ்த்தினான். 23

அண்மையில் அறிஞரின் அகத்திற் றூயவாய்
ஒண்மைய மணமலர் உறும்பல் புள்ளினம்
தண்மைய புனலொடுந் தயங்கு பொய்கையைக்
கண்மைய பயன்கொளக் கருத்தில் நோக்கினான். 24

"அகத்தினுள் மாசெலாம் அகற்று நீறென"
இகத்தினுள் மெய்யழுக் கிரிக்கும் நீரிதால்
சகத்தினுள் இவ்விடம் தவத்திற் கென்றனன்
"நுகத்தினுள் ஆணிபோல்" நுவலும் மாதவன். 25

"தனிமையும் அமைதியும் தயங்க வாழிடம்
இனிமையைப் பயக்குமென்" றிசைப்பர் மேலவர்
கனிகளும் மலர்களும் கனல்இச் சோலைதான்
தனிமையும் அமைதியும் தயங்கச் செய்யுமால். 26

ஆதலால் இவ்விடத் தமர்ந்து பூசனை
நீதறச் செய்தவன் சிவனை என்றனன்
"ஓதுறு பல்கலை உணர்தல் முக்கணன்
போதுறு பூவடி பொருந்த" என்றுளான். 27

பல்வகைக் கொடிகளும் படர்ந்து பாங்கெலாம்
தொல்வகை இலைகளும் துவன்றக் கண்டனன்
எல்வகைப் பிறைமுடி இறைவற் கியாவொரு
இல்வகை எடுப்பனென் றிதயத் தெண்ணியே. 28

---

௨௨ நானெலாம் எனதெலாம் நடக்க; தனுவும் கரணமுமாய நான் என்னும் பற்றும்; புவனமும் போகமுமாய எனதென்பற்றும் போக, உமையிறைக் கழல்கள் வந்த; இரண்டு பற்று சென்றன இரண்டு திருவடிப் பற்று வந்தன.

௨௭ "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்", என்னும் திருக்குறட் கருத்து;

அன்பருள் வேர்மரம் ஆக்க லாதிய
இன்பருள் உருவெலாம் இலங்கச் சாகையா
முன்பொரு மரமெனும் முதல்வன் கோயிலாம்
தன்பொரு அரசினும் தயங்கத் தாபதன். 29

சில்வகை மூங்கிலால் சிவனுக் கின்பமாம்
புல்வகை யாதியால் பொருந்த வோரிலம்
நல்வகை யாகவே நசையில் ஆக்கினான்
சொல்வகை யோர்ந்துள தூய நற்றவன். 30

பொய்கையின் கரையகம் பொருந்த வோர்குடில்
கையினால் வகுத்தனன் கமழும் பூம்புதல்
மொய்யுற நிறுவினன் முதல்வர்ப் போற்றியே
சைவநன் னெறியெலாம் சமைக்க எண்ணினான். 31

## வேறு

கான்கோழி துயிலெடுப்பக் கடையாமத் திசைத்திடும்புட் கானங் கேட்டே
தேன்போதுங் கடுக்கைமலர் திகழ்சிவத்தின் திருவடியைத் தேர்ந்த வாமன்
மான்போத்துக் கலக்கவொடு மயிற்பாசிப் புழுக்காட்டாம் மலின மின்றி
மீன்நீந்தும் பெருந்தடத்துள் மிடைந்தாடித் திருநீற்றை மிகவும் பூசி. 32

பல்வகைய நிறமெல்லாம் பாங்குறுவெண் முகிலிடத்தே படியக் காட்டி
கல்வகைய இளங்கனலி ஏழ்நிறமும் அடக்குவெயில் இலங்கத் தோற்றிக்
எல்வகைய மனமுருக்குங் காலைவரக் கமழ்படப்பைக் கடிதிற் சென்றே
சொல்வகைய மலர்பறித்துச் சூழ்கடத்துள் புனல்நிறைத்துச் சுவன்மே லேற்றி. 33

வான்றோயும் புனலணிந்த வள்ளலுக்குப் புனலாட்டி வண்ணங் குன்றாத்
தேன்றோயும் மலரணிந்து தேங்கனிகள் பலவூட்டித் தெய்வச் சோதி!
கூன்றோயும் மதியணிந்துங் கொன்றையந்தார் மிகப்புனையும் குரிசில்! நீதான்
"கான்றோயும் குழலுமையின் பூசனைபோற்" கடையவன்பூ சனையுங் கொள்க. 34

எனவணங்கி நெஞ்சகத்து ளிறைவனை எண்ணியபின் இலங்குந்தூய
கனியருந்தித் தீம்புனலும் காகத்தாற் பருகியபின் கமழுங் காற்றுள்
இனிதிருந்தே எய்ப்பகற்றி "இளமுருகன் தவக்கோலத் தியல்பி னோடே
தனியிருந்த வாறென்னத்" தனியிருந்தே சிவத்தோடு தலைப்பட் டானே. 35

---

௨௯ இறைவன் அன்பே வேராகவும் அருளே அன்பிலிருந்து கிளைத்த அடி மரமாகவும் ஆக்கலாதிய ஐந்தொழிலே கிளைகளாகவும் மரம் போன்றுள்ளான்.

௩௨ மான்; விலங்கு.

௩௩ கனலி, நிறமெல்லாம் முகிலிடத்தே படியக் காட்டிப் பின்பு ஏழ் நிறத்தையும் தன்னிடத்தே அடக்கிக் கொள்ளும் இளவெயிலைத் தோற்றிக் கல்போன்ற மனங்களை எல்லாம் உருக்குகின்ற காலைப் பொழுதானது வர என்று இயைத்துப் பொருள் உணர்க.

பூம்பணைசூழ் குடில்வதிந்தும் பொய்கையகன் கரையிருந்தும் பொதுளா நின்ற
தேம்பணைசூழ் மாம்பயின்ற தெய்வஇளம் பொழிலெல்லாம் திரிந்து சூழ்ந்தும்
வாம்பிணைசூழ் கலைபயிலும் வள்ளியநல் லியாற்றிடையே வழங்கி நின்றும்
காம்பணைதோள் மடவாலைக் கைப்பிடிக்கும் பெருமானைக் கருத்தி லுன்னும். 36

செக்கர்நிறச் சிறுமுகிலும் செழுமதியும் உடுத்திரளும் சிவணவ ானில்
இக்கர்வரு இளங்காலும் இளந்துணரின் மலர்மணமும் இலங்கும் போதும்
திக்கர்தொழும் பெருமானும் திருச்சிலையும் மனவரங்கிற் நிகழ்ந்தே வாழ
எக்கர்செயுங் கடலகத்துள் எழும்உவகை இறைஉவகை எனக்கொள் வானே. 37

இத்தகைய நிலைமுறுகி இறைவணக்கம் இயற்றூர்நாள் இசையில் மேவும்
எத்தகைய அறிவினரும் எடுத்திசைக்க இயலாத இயல்பின் எம்மான்
கொத்தகைய மலர்செறிந்த குழலுமையாங் கொடியோடுங் குழவான் ஏற்றில்
மெய்த்தகைய முனிவானுக் கருள்புரிய மிளிர்ந்திடலும் மிசையிற் கண்டே. 38

உளங்கரைந்து நெகிழ்ந்திடவும் உரைகுழற உடலமெலாம் உருக உள்ளே
குளம்பெருகி வழிவதெனக் குவிவிழியுள் புனல்ஒழுகக் குவியக் கைகள்
வளம்பெருக புளகெழும்ப வசமிழந்து பாவசமாய் வயங்கு மெம்மான்
இளம்பெருகு திருவடியை யிருள்கழியத் தொழுதிசைக்க இறைவன் சொல்லும். 39

## வேறு

முனிவனே! கேட்டி யாக்கை முழுதமை அன்பே யாகக்
கனியுறு செவ்வாய்த் தீந்தேன் கழைமொழிக் கரிய வாட்கண்
பனிமலர்க் கோதை யென்னப் பகரருள் விளங்க நாளும்
இனியபல் லுயிர்க்கும் வீட்டை இனிதருள் புரிவங் கண்டாய். 40

"உயிர்க்குயி ராமெம் மாட்டும் உயிர்களின் மாட்டும் அன்பாய்ச்
செயிர்ப்புறு நெஞ்ச மின்றிச் சிறப்புறு தொண்டைச் செய்யும்
அயிர்ப்பில வாகுஞ் சைவ அன்பருள் நெறிவி ளக்கி
மயர்ப்பில வாகும் வீடு மருவுக" என மறைந்தான். 41

அண்ணலா ருரைத்த மாற்றம் ஆங்கவன் கேட்டே எம்மான்
எண்ணமிலா தாயின் என்னுள் இறையருள் காட்டுந் தூய
"வண்ணமார் வழியுள் நாளும் வகைபெற வுலகஞ் செல்லத்"
திண்ணமாப் புரிந்த பின்னறத் திருவடி யடைவன் என்றான். 42

---

௩௭ இக்கர்; மன்மதன்,

௪௦ முனிவனே; எமக்கு யாக்கை அன்பே யாக எம் பனிமலர்க் கோதையையுடைய தேவி அருளே யாக உயிர்களுக்கு வீட்டை அருளுவம்.

௪௧ சைவ நெறி: சிவநெறி 'சி: அன்பாகிய சிவம்; 'வ' அருளாகிய சத்தி ஆதலின் சிவநெறி என்றாலும் அன்பருள் நெறி என்றாலும் ஒரு பொருளனவே.

அரசிலி மருங்கில் வாழ்வார் அணியுறு தொண்டை நாட்டார்
பாசுறும் பிறநாட் டுள்ள பகவன தன்ப ரெல்லாம்
முரசறைந் தியம்பி னாற்போல் மொழிசிலர் சொல்லைக் கேட்டே
"பிரசுறு மிடத்தி லீப்போல்" பிறைமுடி அருளால் வந்தார். 43

வந்தவர் தம்முட் கல்வி, வகையமைப் பாகம், அன்பு,
மூந்துறு வாய்மை, இன்சொல், முதலிய அமையப் பெற்ற
மைந்தரைக் கூட்டி நாளும் மயர்வற உணர்வு மல்க
அந்திவான் மேனி எம்மான் அருள்கொடு ஆக்கி னானே. 44

அருள்கொடு ஆசாற் கூறும் அறிவெலாம் பெற்ற மைந்தர்
தெருள்பெறு நெஞ்சி னோடுந் திருவடி ஆசாற் போற்றிப்
"பொருள்பெறு சைவ மென்ற புகழருள் நெறியை நெஞ்சம்
இருளறக் கூறல் வேண்டும் எமக்" கென இயம்பி னாரே. 45

ஆங்குரை அவரை எண்ணி அருட்டிரு நோக்கஞ் செய்தே
தேங்கமழ் குழலி பாகன் திருவருட் சேர்க வென்றே
ஓங்குறு வலக்கை தன்னை உவப்புறத் தலையுட் சூட்டிப்
பாங்குற வமைத்துச் சைவப் பழநெறி பகர லுற்றான். 46

வேறு.

இறைவனும் உயிர்களும் இலங்கு கட்டுமா
அறைதரு பொருள்களுள் அறிவன் உண்டெனல்
முறைபெறு குறியுணர் முடிந்த காட்சிசேர்
கறையறு கருதலால் என்பர் காண்டிரே. 47

"செய்பவன் வேண்டுமால் செயற்கு" என்னுமோர்
எய்வகல் வாய்மையாம் இயலு ரைப்படி,
செய்பவன் வேண்டுதும்: செறிந்து வந்துபோம்
மெய்யுறு செய்கைசேர் மேதி னிக்கரோ. 48

உடலினை இயக்குமோர் உயிரைக் கண்டயாம்
மடனுறும் உயிரினுள் மகிழ்ந்து மன்னியே
திடனுற இயக்கிடுந் தெருள்கொள் தேவென்றே
கடனுற அறிதரல் கலையின் வாய்மையே. 49

எண்ணிய மனப்படி யியல்வ தில்லையால்
பண்ணிய வினைப்படிப் பயனும் சாருமால்
கண்ணிய வினைசடம் கருத்தன் வேண்டுமால்
பண்ணிய வினைப்படிப் பயனை ஊட்டற்கே. 50

---

௪௪ பாகம்: பக்குவநிலை,

௪௭ கருதலால்: அனுமான அளவையால்,

இல்பொருள் அளவையால் உரைத்து நாட்டொணு
உள்பொருள் அளவையால் உரைத்து நாட்டலாம்
இல்பொருள் இறைவனேல் இசைத்து நாட்டொணு(து)
எல்பொருள் அளவையால் எனம னங்கொளீர். 51

உலகுறு பற்றெலாம் ஒழித்த நற்றவர்
இலகுறு உணர்வினுள் இறைவன் தோன்றலால்
அலகறு புகழுறும் அவர்சொல் வாய்மொழி
கலகறத் தெளிவொடும் கடவுட் காட்டுமால். 52

## இறையியல்,

அன்பருக் கருள்செய ஆகின் அல்லது
துன்பருள் உருவினன் அல்லன்: தூய்மையான்;
இன்பினன்; ஒருவனே; என்றும் உள்ளவன்:
முன்பதைக் குணர்வுற மன்னு வானரோ். 53

முழுமுதல்; அசைவிலன்; மொழியும் வாய்மையான்;
எழுமொளி முதலவன்: எவருங் கூறெணுக்
கெழுமுறு இயல்பினன்; கேடில் காட்சியான்;
செழுமுறு சிவனெனச் செப்ப லாகுமால். 54

ஆக்குத லளித்திடல் அழித்தல் மூன்ளெடும்
ஊக்குற மறைத்தருள் உதவ லாந்தொழில்
மேக்குறு மிறையவன் மிளிரச் செய்வவாப்
போக்கறும் அறிவினர் புகல்வர் காண்டிரே. 55

கதுவுறு உலகமும் நுகர்வுங் காட்சிசேர்
அதுவுறு கருவியும் அமைந்த யாக்கையும்
புதுவுறப் படைத்தலேப் புகல்வர் ஆக்கலாப்
பொதுவுடன் சிறப்பெனப் புரிவில் தோன்றவே. 56

உடன்முத லவற்றெடு உயிரை வாழ்வித்தல்
திடமுறும் அளித்தலாத் தெளியச் செப்புவார்
அடைவுற உடன்முத லடக்கல் போக்கலாத்
தடையறும் உணர்வினர் தகவிற் சொல்வரே. 57

மலவலி தடிந்திட மரபிற் போகத்தால்
இலகுறு உயிரினுக் கின்பம் ஈவதே
உலகினர் மறைத்தலா உரைப்பர் மும்மல
நிலேயறப் புரிவதை அருளில் நேர்வரே. 58

---

உடன்நிகழ் ஆற்றலால் உயிர்வி னேப்படி
சடனெனும் மாயையால் சகத்தைத் தோற்றியே
திடனுறு நினேவினல் தெளிந் தியற்றுமோர்
கடனுறு நிமித்தனுங் கடவுள் காண்பிரே. 59

## உயிர்.

எதுவுறின் இவ்வுடல் இயங்கி நின்றிடும்
எதுவுரு தாகிடின் இயங்க லற்றிடும்
அதுதனை உயிரென அறைவர் நுண்மதி
கதுவிடக் கலையுணர் கவர்வில் கேள்வியார். 60

எனதுடல் புலன்மனம் இயங்கு காலென
நினைவொடு மொழிதலால் நிகழ்த்து மிப்பொருள்
தனினய லெனவிறை தன்னில் வேறதாய்
மனிஉயி ருளதுணர் மறைப்பி லாமலே. 61

எண்ணுதற் கரியவாய் என்றும் உள்ளவாய்
அண்ணிய ஆணவத் தழுந்தி, ஆர்வினைக்
கெண்ணிய உடலிறை யருளில் ஏய்வவாய்க்.
கண்ணிய அவன் அவள் அது வென்கட்டவாய் 62

இன்பொடு துன்பமும் இயல்பில் துய்ப்பவாய்
முன்பொடு இருவினை முயன்று செய்வவாய்
வன்பொடு செல்லுதல் வருதல் ஏய்வவாய்
நன்பொடு சிற்றுணர் வுடைந யத்தவாய். 63

மலபரி பாகமும் மருவு காலையில்
நிலவமர் சோதியான் நிகரி லாவருள்
இலகுற வீட்டினை இசைந்து நிற்பவே
நலமுறு உயிரியல் பெனந வில்வரே. 64

மருவிடு உயிரெலாம் மலம்நல் மாயையோ
டிருவிய வினையெனும் இவைகள் துன்னுற
திரிவித மெனவுரை தெரிப்பர் வாய்மையார்.
ஒருவிரு மும்மையோ டுரைக்கும் பேரினல். 65

## தளை.

ஆணவம் மாயையே அசைக்கும் வல்வினை
மாணுறு மாயையுள் மலருங் காரியம்
ஏணுற மறைத்தலோ டிசைப்பர் ஐந்தவாக்
காணுறத் தளையினைக் கலையின் வாய்மையோர். 66

## ஆணவம்.

உயிரறி வவாத்தொழில் உஞற்றும் ஆற்றலைச்
செயிருற மறைப்புறு செயலின் மேவிய
பயிறரு பலவலி படைத்தும் அவ்வலி
அயிறரு முறையினில் அனைத்தும் தீர்வவாய். 67

ஒன்றதாய்ப் பழமையாய் உளதெக் காலமாய்
என்றுறு கதிரிலும் இரித்த வில்லையாய்த்
துன்றிடும் உயிரினில் துலங்கும் ஆணவம்
அன்றிடும் இருள்; அதை அறிதல் வாய்மையே. 68

## மாயையும் மாயை காரியங்களும்.

ஆணவ மறைப்புறு அணுவுக் கன்பினல்
காணுற உடன்முதற் கருவி யீந்தனன்
மாணுறும் இறையவன் மாயை யென்னுமோர்
ஏணுறு முதலின லெனப்பு லன்கொளீர். 69

## வேறு மாயையின் வகையும் தூய மாயையும்.

தூய மாயைவல் தூய்மையில் மாயையா
ஏயு மாயையி ருவகை யாகுமால்
தூய மாயையுள் தோன்றுறும் சொற்பொருள்
பாய நூலுணர் பண்புள மாணவீர்! 70

## ஆறு அத்துவா.

எழுத்தொடு மொழிமறை இசைக்கும் நற்கலை
வழுத்திடு பொருளிடம் வழிகள் ஆறுமே
பழுத்ததூ மாயையுள் பரந்து தோன்றிடும்
கழுத்திடு கறையுள கடவுள் ஆற்றலால். 71

முந்துறு மூன்றையும் மொழிவர் சொல்லெனப்
பிந்துறு மூன்றையும் பொருளிற் பேசுவர்
இந்தநல் லியல்பினல் இரண்டு கூறதாம்
விந்தெனும் மாயையின் விளக்கம் காண்டிரால் 72

அகரமே முதலன எழுத்து: ஆய்ந்தவர்
பகர்வுறு வியோமாம் வியாபி யாவன
புகரறு மொழி;அவை தமவில் போதுவ
நிகரறு மறைமொழி நிகரில் காட்சியீர்! 73

சாந்தியா தீதமும் சாந்தி வித்தையும்
ஆம்பிர திட்டையும் அறைநி வர்த்தியும்
போந்துறு கலையெனப் புகல்வர் நற்றவர்
ஏந்துறும் உணர்வினில் இலங்கு மைந்தரீர்! 74

சிவமுத லுரைப்பன செப்பு மெய்ப்பொருள்;
அவமறு இடங்கள் வாமாதி யாகுமால்
நவமுறும் உணர்வினில் நண்ணி நாடொறும்
தமுறத் தலைப்படும் தக்க மாணவீர்! 75

## சிவதத்துவம்.

## வேறு.

இறையொடுக்கம் நுகர்வுநிலை ஆட்சி யென்ன இசைமூன்றுக் கிடமாகி, இலங்குந் தூய
முறையுறுநல் அனந்தர்சீ கண்ட ரான முதல்வர்க்கு யாக்கைதரும் முதல்வாகி [கண்
அறையுறுநல் லெழுத்துச்சொல் மந்தி ரங்க ளனைத்தும்வர ஒருமுதலாம் தூமா யைக்-
கறையறுநற் சிவமுதலாம் தத்து வங்கள் கடவுளரு ளால்தோன்றும் கதியும் சொல்-
[வேன். 76

### வேறு.

தூய மாயையை ஒருசிவம் உணர்வினல் நோக்க
நேய மாசிவம் நிகழ்வுறும்; தொழிலினல் நோக்க
ஆய சத்தியும் ஆணைவுறும்: இரண்டினல் நோக்க
சாய லில்லவாச் சமைதரு சதாசிவம் சாரும். 77

உணர்வின் ஆற்றலே உறச்சிறி தாக்கிநற் ருெழிலேப்
புணர்வின் மிக்கிடப் புரிந்துநன் மாயையைக் காண
உணர்வின் ஆற்றலே மிகத்தொழில் ஊனமாய் நோக்கப்
புணரும் இச்சுரம் புகழ்தரு சுத்தவித் தையுமே. 78

சிவமும் சத்தியும் செப்புவர் ஒடுக்கமாச் சிறந்த
நவச தாசிவம் நன்னுகர் வெனவுரை நவில்வர்
அவமில் இச்சுரம் வித்தையும் ஆட்சியா அறைவர்
பவமில் வானவ னுகிய பரஞ்சுடர் தனக்கே. 79

### தூய்மையில் மாயை (அசுத்தமாயை)யுள் வித்தியாதத்துவம் தோன்றல்.

தூய்மை யின்றிய மாயையில் அநந்தராற் றலினல்
வாய்மை யாகிய காலமும் நியதியும் கலேயும்
ஏய்மை யுற்றவாய் வந்துறும்; இசைக்குறு கலேயுள்
ஆய்மை வித்தையும் வித்தையுள் அராகமும் ஆணையும். 80

நுகர்த லுற்றிடு உயிரினுக் களவையால் நுகர்வைப்
பகிர நிற்பது காலதத் துவமெனப் பகர்வார்
புகரி லாவர சாணேபோல் உயிர்வினைப் பயனைத்
தகவி லவ்வவைக் காக்குவ நியதிதத் துவமால். 81

இருளின் யாப்பினைச் சிறிதள விரித்து நல்லுயிரில்
பொருளின் மேவுறு தொழில்விளக் குறுதல் பொற்கலேயாம்
தெருளின் வித்தையே அறிவினைப் பொதுவினிற் றிகழ்த்தும்
மருளின் மூலமாம் அவாப்புலப் படுத்துவ தராகம். 82

கால மேமுத லேந்துடன் கலந்துபோத் திருவாம்
சீல மாமுயிர் அவிச்சையாங் காரமோ டவாவும்
வாலி தாகிய ஆசையும் சினமிவை வரலால்
தால மேலுயர் புருடதத் துவமெனத் தயங்கும். 83

போகம் ஆர்ந்திடப் புகுந்திடு புருடனும் அவற்குத்
தாக போக்கியம் தரவெனக் கலேயினிற் றழைக்கும்
பாக மூலமாம் பகுதிய தெனுமொரு பாவை
மோக மாகிய அவிச்சையா திகளேயும் முகிழ்த்தே. 84

கால மேமுதற் பகுதிய தீறவாக் கழறும்
சீல தத்துவச் செறிவின ஏழுமே சிறந்த
வால மாகிய வுணர்வினே வாக்கியே வளர்க்கும்
கோல வித்தியா தத்துவக் குழுவெனக் குறிப்பார். 85

## ஆன்ம தத்துவம்

### குணம்

வெளிப்ப டாநிலை மூலமாம் பருதியை விளக்க
அளிப்பொ டாந்திருக் கண்டரின் ஆற்றல்தான் கலக்க
நளிப்ப டுங்குணம் மூன்றுமே நந்திநற் சமமாய்க்
குளிப்பொ டாயது குணமெனும் தத்துவக் குவிவே. 86

### புத்தி

முக்கு ணத்தினுள் முதற்குணம் மிகுந்துவே றெய்தும்
அக்கு ணத்தினுள் புத்தியும் அடைந்துயிர் அறிவை
மிக்கு றச்சிறப் பாவிரித் திருவினைப் பற்றாய்
தொக்க நல்லற மாதிய பாவகத் திடமாம். 87

பாவ கங்களெட் டாமவை பகரறம் அறிவு
ஓவ லாகிய வெறுப்புநற் செல்வமே மறமே
வீவ தாமறி வின்மையே விருப்புடன் வறுமை
மேவ லாகிடும் முக்குணத் தினிலவை மிளிர்ந்தே. 88

### அகங்காரம்

புத்தி யாமொரு கருவியால் பொருட்டுணி படைய
நத்தி யானென எழுவதாங் காரமா நவில்வார்
புத்தி யாகிய பொருளினில் இருகுணம் குறைந்தே
நத்தி ராசதத் தெழுந்திடும் நவிலகங் காரம். 89

இருகு ணங்குறைந் திலங்குசாத் துவிக ராசதமே
மருவு தாமதம் தனித்தனி வயங்ககங் காரம்
பொருவில் தைசதம் வைகரி யோடுபூ தாதி
உருவு மூவகை யுற்றிடு மெனப்புலங் கொள்ளீர். 90

ஆய தைசதத் தாகிடும் மனம்உணர் பொறியே
பாய வைகரி தன்னிலே தொழிற்பொறி படுமால்
ஏயும் வெய்யபூ தாதியுள் எழும்ஒலி முதல
தூய கேள்வியை விரும்பியே உணவுகொள் தொழிலீர்! 91

### மனம்

வாயி லான்நிரு விகற்பமாய் அறிதரு பொருளை
ஏய யாதென எண்ணியே வாதனை உணர்வால்
நேய வாமிது வெனஎனும் நினைவொடு விகற்பம்
ஏய நின்றிடு காரணம் மனமென இசைப்பர். 92

### சித்தம்

இன்ன தாகுமால் இதுவென வாதனை முதலால்
மன்னி ஆய்தரு மனத்தினர் விருத்தியை மதிஞர்
பன்னு சித்தமாப் பகர்ந்திடு வாரெனப் பரமன்
சொன்ன ஆகமம் சொலுமொழி உணர்கமா ணவரீர்! 93

## ஞானேந்திரியம்

நல்ல தைசதத் தாகிடும் உணர்தரு பொறிகள்
ஒல்லு நற்செவி யாதிஐ யிடங்களி லுறலால்
சொல்லு மப்பெய ருற்றுநல் லுயிரறி வாற்றல்
புல்லக் காண்பொருள் விகற்பமில் லறிவினுற் புலத்தும். 94

## கன்மேந்திரியம்

வல்ல வைகரி தன்னிலே வருதொழிற் பொறிகள்
நல்ல வாய்முத லைந்திடத் துறவரு பெயரே
புல்லி, நல்லுயிர்த் தொழிலெனும் ஆற்றலே பொருந்தி
ஒல்லுல் ஐந்தொழில் உளுற்றுறுல் உறுபொரு ளுணர்வீர். 95

## தன்மாத்திரை

ஓசை ஊறுடன் ஒளிச்சுவை நாற்றமாம் ஐந்தும்
பேசு கின்றநுண் பூதமாப் பேசுவர் அவைதாம்
ஆசு நீங்கிய அறிதொழிற் பொறிகளுக் கிடமாய்
மாசு தேங்குபூ தாதியுள் மலர்வுறுல் மதியீர் 96

## தூல பூதம்

ஓசை யேமுத லைந்திலுல் உறுவமா பூதம்
பேசு வானுடன் வந்துதீப் புனல்நில் மெனவே
மூசு வண்டினம் மொய்த்துறு மலர்செறி முடியோன்
தேசு பெற்றுளிர் திருவடித் தொழும்பராந் திருவீர்! 97

## ஆன்ம தத்துவத் தொகை

புத்தி யேமுதல் இருபதின் நான்குபோற் றுயிரின்
தத்து வத்தொகை தாமெனத் தாழ்குழல் இறைவி
வைத்த வாமனர் ஆகமம் வாய்மையின் உரைக்கும்
ஒத்த நூலுணர் மாணவப் பிள்ளைகாள் உணவீர்! 98

புத்தி யாகிய தத்துவச் சார்பிலே பொருந்தி
நத்தும் ஐவகை யாகிநற் கிரியையான் நடந்து
ஒத்த புண்ணிய பாவமாம் உருவுடன் மூன்றாய்
வைத்த இன்பொடு துன்பமும் வரச்செயும் வினையே 99

## ஐவகைக் கன்மமும், பயனும்

உலகம், ஆகமம், ஆன்மிகம், பெருநெறி, மறையே
இலகும் ஐவகை வினையென உணர்வினர் இசைப்பார்
நிலவு கூவல்கள் மடம்முதல் நிலைபெற இயற்றல்
உலக கன்மமாம்; உறுபயன் நிவிர்த்தியின் உலகே. 100

இறைவன் ஆகமம் இசைத்திடு செயலினை இயற்றல்
முறைவ ழாதநல் ஆகம வினையென மொழிவார்
அறையும் அவ்வினை அடைந்திடச் செயும்உயிர் தனையே
உறைத ரும்பிர திட்டையின் உலகினை உணர்வீர். 101

ஆண்ட வன்திருப் பூசனைத் துறவறம் முதல
ஈண்டும் ஆன்மிகச் செய்தியா இயலவர் இசைப்பர்
வேண்டும் அவ்வினை வித்தியா கலையுள உலகை
ஆண்டி டும்படிச் செய்திடும் அறிவுசால் அகத்தீர்; 102

இயம மாதிய யோகமா நெறிபெரு நெறியாம்
நியம சாந்தியின் உலகினில் நிலைபெறச் செயுமால்
வயம தாகிய மறைநினைக் கனித்தளம் வலத்தல்
அயம தாமறை வினையடை தரச்செயும் அதீதம். 103

## திரோத மலம்

உயிரின் மேவுறு மலபரி பாகமே உதவ
செயிரின் மோகமே முதலிய மலச்செயல் செலுத்தும்
அயிரில் ஆண்டவன் நினைவினுக் கேதுவாம் திரோதம்
"பயிரில் மேவுறு நீரெனப்" பசுக்களுக் குதவும். 104

## வேறு

அய்வகைத் தளைகளை அறிந்து இங்ஙனம்
உய்வகைத் தளைபடு உயிரைக் கண்டபின்
மெய்வகை உயிரெலாம் மிளிறும் ஆண்டவன்
தெய்வதத் திருவடி தெரிந்து கூடுவீர். 105

## உயர்ந்த சமயம் சைவமெனல்

எண்ணி லாத இருஞ்சம யங்களுள்
அண்ணும் அன்பொடு ஆரருள் மேனியாம்
கண்ணு தற்சிவங் காணுமை தேவெனும்
ஒண்ணு சைவம் உயர்சம யம்மரோ. 106

## சைவ சமயக் கொள்கை

ஒழுக்கங் கல்வி உயரறி வின்றியே
இழுக்க மேபயில் ஏழைய ரியாவரும்
செழுக்க வாழ்ந்து சிவம்பெறச் செய்தலே
வழுக்கில் சைவ வளம்பெறு கொள்கையால். 107

தூய நீறு துலங்கல ராயினும்
ஆய அன்பின ராகில் அவர்களை
நேய சைவர் எனக்கொளு நேர்மையே
பாய சைவ பரப்புறு கொள்கையால் 108

## சைவர் இன்னுரெனல்

அன்பு கொண்டே அருளும் வளருற
இன்பு கொண்டே இலங்க உலகெலாம்
முன்பு கொண்டே முதிர்தொண் டியற்றுவோர்
தென்பு கொண்ட சிவசம யத்தரே 109

நாளென் பற்றும் நசிக்க அறிவினுள்
தேனும் பாலும் திகழ இனிக்குமோர்
கோனின் ஆருள் கூட உயிர்க்கெலாம்
ஆன நற்பணி ஆக்குவோர் சைவரால். 110

சாதி வேற்றுமைச் சாடி உயிரெலாம்
ஆதி தங்குமோ ராலய மென்னவே
பாதித் திங்கள் பரமன் அருளினால்
நீதி செய்வர் நிகழ்பெருஞ் சைவரே. 111

என்று வாமன் இசைக்குறு நன்மொழி
ஒன்று சேர்ந்த உளம்பெறு மாணவர்
நன்று கொண்டு நலம்செய, ஞாலமே
மன்று ளாடி மறைநெறி மல்கிற்றால். 112

உலகம் யாவும் உயர்நெறி தேக்கிய
அலகில் வாம அருந்தவன் பின்பொர்நாள்
நிலவு வாழும் நிமிர்சடைப் பண்ணவன்
மலர்சி லம்படி மன்னினன் நன்றரோ. 113

வாமதேவர் வழிபட்ட படலம்

முற்றும்

ஆகச் செய்யுள். 113

# சத்திய விரதப் படலம்

வேங்கியை நகராக் கொண்டு விளங்கிய சளுக்க வேந்தர்
ஓங்கிய குடியுள் நல்ல ஒழுக்கமே உருவாய் வந்தோன்
வீங்கிய குவவுத் தோளால் விளங்குற உலகம் வென்றே
தாங்கிய குடையுள் வைத்துத் திருவென நிழல்செய் வானே. 1

சத்திய விரத னென்னச் சாற்றிடு பெயர னாகிப்
பத்தியின் வகைக்கோர் வித்தாய்ப் பான்மதிப் பாமன் பாத
முத்தியின் விருப்பி னோடு முறைசெயும் இறைவ னாகித்
தத்திடும் அலைநீர் சூழ்ந்த தரையினைப் புரந்திட் டானே. 2

## வேறு

வெல்லும் வேலால் பகைநீக்கி விளங்குங் கோலால் முறையாக்கி
நல்ல குடையால் உயிர்காத்து நளிர்மா முடியால் நாயகமாய்
அல்லல நீக்கும் மதிக்குலத்துள் அணைந்த வேந்தன் அவனிதனை
நெல்லும் நீரும் உயிரென்று நிகழ்த்தா வண்ணம் காத்தானே. 3

தீய சினமும் பெருங்காமத் தீயும் கழிகண் ணோட்டமுடன்
வீயும் பயமும் பொய்யுரையும் விழையும் அன்பாம் பொருட்பற்றும்
தேயுந் தெறலாங் கடும்பண்பும் தீர்ந்த ஆணை உருளோட்டிப்
பாயும் விடையெம் பரம்பொருளிற் பாந்த அருளாற் பொலிந்தானே. 4

## வேறு.

எய்ப்பினில் வைப்பு போன்ற இறையவன் மக்க ளெல்லாம்
துய்ப்பன பொருள்கள் ஆடை வாழிடம் தூய்மை யாக்கி
மெய்ப் படக் கொள்ளச் செய்யும் மேன்மைசேர் முறையி னாலே
வெப்புறு நோய்கள் நீக்கும் வியன்மருத் துவனை ஒத்தான் 5

மடியிலா முயல்வில் நின்றே மனங்கொளுஞ் செயலை யாற்றி
மிடியிலா வாழ்வை மக்கள் மேவிடப் புரித லாலே
வடியுலாம்வேற்கை மன்னன் வளங்கெழு நாட்டில் யாரும்
நடுவிலா நெஞ்ச ராகி நாடிடார் பிறர்தம் ஆக்கம்: 6

உலகுள உயிர்கள் யாவும் உடல்சிவக் கென்னும் உண்மை
இலகிட இறைசெய் நீரால் யாவரும் அன்பின் மேவி
அலகறு உயிர்கட் கென்றும் அடைதரத் தீங்கு செய்யார்
நிலவுறப் பிறர்க்கே வாழ்ந்து நிலைபெறு வார்கண் மன்னே. 7

அல்லவை செய்யான் காக்கும் அரசனின் ஆட்சி தன்னில்
நல்லவை செய்யக் கற்ற நவையறு நாட்டர் யாரும்
தொல்லவை யாண்டின்மிக்குத் துயரிலா நெஞ்ச ராகிச்
சில்லவை யான நோயும் சேர்ந்திடா ராகி வாழ்ந்தார். 8

தீப்புலன் நெறிசே ராமல் தேர்தரும் அறிவி னாலே
பாப்புறு இறைவன் பாத பங்கய நறவை மாந்தி
யாப்புறு தளையின் நீங்கி யாவரும் மகிழ்ந்து வாழக்
காப்புறு சளுக்க வேந்தன் காசினிக் கியற்றி னானே. 9

சிவநெறி உலக மெல்லாம் சிறப்பொடு தழைத்து வாழ
அவநெறிச் சிறிது மின்றி அடைதாஞ் செயலை ஓர்ந்தே
பவநெறி வழக்க மெல்லாம் பகல்முனைப் பனியாம் என்றே
நவநெறிச் சுரர்க ளெல்லாம் நடுங்கினர் நனிவர் மாதோ. 10

தேவர்தம் விரதந் தன்னுள் தெரிசிவ விரதந் தன்னை
ஏவர்தம் மனமுங் கொள்ள இறைபுரி செயலி னாலே
மூவர்தம் செயலும் மாறி மொழிதரு உலகில் எல்லாச்
சீவரும் சிவத்தின் கண்ணே செறிவரோ எனப்ப யந்தார். 11

## வேறு.

அச்ச முற்றிடு தேவர் முச்செயல் அவனி மீது நிலைக்கவோ
இச்சை யற்றிடு அன்பர் தம்வினை இணையில் சத்திநி பாதமே
வைச்ச காலையில் வந்து ஆள்தரல் வாய்மை என்றுல கெண்ணவோ
உச்ச மார்தரு பத்தி ராசனை உன்னி யீசனும் வந்தனன். 12

அன்பின் மேவிய வேந்த னூர்புரி அரிய நந்தனம் எதிருறீஇ
இன்பின் மேவிய முக்கண் மூர்த்திதன் இருவி ழிக்கொரு மகிழ்தர
நன்பின் மேவிய நங்கை பாகனும் நசைகொள் நவ்வியின் வடிவுறீஇ
முன்பின் மேவிய பூக்கள் நற்றளிர் மொழியும் அன்பொடு மிசையவே. 13

பூச னைக்கொரு மலரி ளந்தளிர் புதுத ருவகை புதுமதி
ஈச னேயுனின் அலகில் காவலர் இணையில் மாக்குழு என்செயும்?
வாச மேவிய மலர்பெ ருஇறை வலிமை மிக்குற அரணுறீஇ
நேச மேவிய படைஞர் தங்களை நிகரி லாவகை வைத்தனன். 14

இமைத்த கண்கள் முகிழ்த்தி டாதவர் இணையில் காவலை மேவினும்
உமைத்த டங்கண் உறழ்ந்தி டும்உழை உறழ்வி லாமலர் மேயலால்
கமைத்த மன்னன் உறச்சி வந்தொரு களவை யானறி வேனெனு
சமைத்த விற்கை பிடித்தி ராப்பகல் சரமொ டேயவண் நின்றனன். 15

மாலும் நான்முகன் வான வர்க்கிறை மற்ற யாவரும் அறிகிலா
ஆல மார்தரு வான வன்உழை யாகி மேவரும் வடிவொடே
ஏல மேவுற எசில் சாளுவன் ஈச னாருள் எழுதலால்
கோல மார்விழி நோக்கி அன்புளங் கொள்ள நின்றனன் மிகவரோ. 16

அன்பு ளங்கொள நின்ற மானை அகப்ப டுத்திட எண்ணியோ
துன்பு ளங்கொள அம்பை யேவி துயர்ப்ப டுத்திட முன்னியோ
முன்பு நின்றவவ் வேந்தன் மானை முடுக்க அவ்வுழை வேந்தனை
இன்பு நின்றிடு காந்தம் என்ன இழுத்த தேவனம் எங்கணும். 17

மானை எய்தற பின்தொ டர்ந்திடு மன்ன னும்வெகு சேணுற
கான முற்றுந டந்த புன்றலை கள்ள நவ்வியு மறையவே
ஆன அத்தலை வேட னாகியோர் அய்யன் வில்லொடு எதிருறீஇ
நீன நவ்வியை நீது ரந்தது தீர மோஅமர் செய்கென 18

வேந்தும் வேடனும் வீர வெஞ்சிலை கோலி அம்பினை விடுதலாய்
ஏந்து வானகம் ஏய முற்றிட எங்தும் ஆரிருள் செறியவே
வேந்து கைக்கணை யாவும் அற்றிட வீரம் அற்றில னாகியே
போந்து வேடனைக் கைகொ டெற்றினன் போரில் மற்கொடு புரியவே. 19

மல்லின் நல்லமர் இருவ ருஞ்செய மான வேந்தனும் வேடனை
மெல்ல அல்லினை வளைகு வாரென மேனி கைகொ டிருக்கினான்
புல்லு கைத்தலை புகுது மெம்மிறை போனன் மாயம தாகவே
ஒல்லை அவ்வுழை வந்து தோன்றலும் ஓடி மாடுற வளையினான். 20

மன்னன் மாடுற வந்த மானும் மலர்ந்த ஓடைகள் துன்னியே
அன்ன மேமுதல் துன்னு சீர்மைய அரசி லிப்பதி அணுகிடா
தென்ன னாவென வண்டு பாடுமோர் திகழ்ம லர்ப்புதர் அரசடி
மன்னி மாயம தாம றைந்தது மகிபன் அப்புதர் மன்னினான். 21

பூக்கள் மன்னிநல் புதும ணங்கமழ் புதரின் நல்லகம் ஆய்ந்தனன்
நோக்க நல்லொளி உதய மேயென நுவலு நற்சிவ சோதியின்
ஆக்கை கண்ணுற அகமெ லாயகிழ் வணைய நின்றனன் வேந்தனும்
ஏக்கம் உற்றிடு வறிஞன் எய்திய இணையில் செல்வம தென்னவே. 22

உள்ள மெங்கணும் அன்பின் வெள்ளம் உகைத்தெ ழுந்திட கண்ணநீர்
வெள்ள மெங்கணும் ஓட மன்னன் விளங்கு சோதியை யுட்கொளா
கள்ள வெம்மல மாதி யாகிய கட்டி ருட்களும் நீங்கலால்
எள்ள ரும்பொருள் மெய்மை கண்டனன் இணையி லாவருள் துன்னினான். 23

மெய்மை யாகிய பொருளு ணர்ந்திடு மேன்மை சோறி வாதலால்
பொய்மை யாகிய மறுமை இம்மையில் போதும் நெஞ்சிலன் ஆகியே
செம்மை யேகொடு அரசின் வாழ்வுறு சிவனை யேவிழை காதலால்
வெம்மை யாகிய அரசின் வாழ்வினை வேண்டல் நீங்கினன் வேந்தனே. 24

## வேறு.

உடையவன் அடியைப் போற்றும் ஒருபெரும் உவப்பி னாலே
படைகளே முதல வாய பலபொருள் அசத்தும் எண்ணான்
விடையவன் அருளும் வேந்தன் விருப்பமும் உறுத லாலே
நடையுறு திருத்தொண் டாற்ற நயந்தனன் அவனும் நன்றே. 25

வாளினால் புதரை யோச்சி வகுத்தனன் சிறிய கோயில்
நாளினாற் புனலுள் மூழ்கி நறும்புனல் இறைவற் காட்டிக்
கேளினால் நறும்பூ சூட்டிக் கிளர்கனி முதல வூட்டித்
தாளினால் மனத்தில் என்றும் தனிமுதல் கூட்டி னானே. 26

அரசையும் மறந்து காதல் அரசியை மறந்து நாளும்
பிரசமே நிகர்க்கப் பேசும் பிள்ளையை மறந்தா னாகி
அரசிலி அரசன் வாழ்ந்தான் அரசிலாச் சளுக்க நாட்டு
பூரசதிர் பழைய வூரின் முறைமையும் மொழிய லுற்றேன். 27

சத்திய விரதப் படலம் முற்றும்

ஆகச் செய்யுள். 27

# "இந்திர சேனப் படலம்"

## சத்திய விரதனில்லாத நாட்டின் நிலை.

அருளிலா நெஞ்சும் ஆணிலாப் பெண்ணும் அறிவிலா மக்களும் சிறந்த
பொருளிலா இல்லும் பூவிலாப் புனைவும் புகழிலா மக்களும் புரைந்த
இருளிலா வண்ணம் பூவெலாம் புரக்கும் இணையிலாச் சத்திய விரத
வெருளிலா வேந்து நீங்கிய அதனால் வெருள்கொளும் சளுக்கநன் னடே. 1

## இந்திரன் சேன ஆட்சி.

குடிகளும் அமைச்சும் குழுவின ராகிக் குலமகன் றனைக்கொணர்ந் தவற்கே
அடியுறும் அரிசைக் கொடுத்திட நாளும் அரசநன் னெறிவழா துலகை
மடியுறப் புரிந்து தொழிலெலாம் ஓங்கி மலிதரப் பொருள்புரிந் தாண்டான்
படியெலாம் புகழும் இந்திர சேனப் பகர்பெய ருடையவம் மகனே. 2

## இந்திர சேனன் தவம்.

அன்பினுற் சிவத்தை அகங்கொடு, உலகும் அமைவுறு சிவம்பெற ஆண்ட
இன்பினுற் சிறந்த அரசனும் இனிதாங் குரவனை இழந்ததி னுலும்
என்பெலாம் உருக்கும் மழலைசேர் குழவி இதுவரை இலாமையி னுலும்
துன்பெலாம் அடைந்து நகர்ப்புற மிருந்து தொடங்கினன் இனியமா தவமே. 3

## உமையின் அருளால் பெண் மகவு தோன்றல்.

அருளெலாம் புரியும் சிவைதிரு வடிக்கே அகமெலாங் கொடுத்துஅற் பகலும்
தெருளெலாம் விளங்கத் தவஞ்செய ஒருநாள் திகழ்மலர்ச் சோலையுள் சிவைதன்
அருளெலாம் திரண்டு குழவியாய் விளங்க அகமலி உவகையன் ஆகிப்
பொருளிலா னிடத்தில் பொருள்புகுந் ததுபோல் பொருக்கென எடுத்தனன் சென்றே.

இளநிலா மூரல் மனைவிகைக் கொடுத்தே இடிலாப் பெண்மக விதனை [4.
வளநிலா வுறநீ வளர்ப்பையென் றுரைத்து வாலிழை பாகனை நினைத்தே
உளமெலாம் உவகைப் பெருங்கடல் வழிய ஓவறு உலகெலாம் ஆண்டான்
அளவிலாச் சிவையின் றிருவருட் குழவி அழகுற வளர்ந்ததை யன்றே. 5

## வேறு.

ஆய்பெண் மகவு வானோர் அமிழ்தநல் வயலின் கண்ணே
தூய நற் பொலஞ்செய் வல்லித் தூமுளை துளிர்த்திட் டாங்குக்
காயமும் உறுப்பு மெல்லாங் கவின்வர மனத்தின் கண்ணே
நேயமும் ஒழுங்குந் தோன்ற நிச்சலும் வளர்ந்த தாலோ. 6

பூமனுங் குழலி னுலும் புயலெனும் நீல மேனி
வாமனும் உளத்தில் ஆய்ந்து வகைபெற எண்ணின் அல்லால்
காமனுங் கருதொ ணுத காரிகை வனப்பு நோக்கிச்
சோமனும் புரையா வேந்தன் சுந்தரிப் பெயரிட் டானே. 7

## வேறு.

### உறுப்பு நலன்.

கரிய நெடிய மென்கூந்தல் காரிற் றிகழ்ந்து முடியுறினும்
உரிய சிவன்றன் அடியடங்கும் ஊழிக் கரிய கடல்மானும்
பெரிய மதியம் முகமென்றே பேசும் புலவர் உரைத்தாலும்
கரிய திருமால் கழற்கணிந்த கமல மலரைக் கடுத்திடுமே. 8

முல்லை யரும்பு வெண்முத்தம் முருந்தின் அடிபோற் பல்லுறினும்
எல்லை யரும்பு பல்லுடுத்தோன் இனிய புகழ்போல் வெள்ளியன
சொல்லை யரும்பு நல்வாய்தேன் சொரியுங் குமுதம் என்றிடினும்
அல்லை யரும்பு கண்டத்தோன் அருளுஞ் சிவநூல் வடிவமன்றே. 9

திலகம் பொறித்த வாணுதல்தான் திருவில் என்னத் திகழ்ந்தாலும்
இலகு சிவன்றன் முடிப்பொலியும் இளைய மதியம் எனலாமே
கலகம் விளைக்குந் திருப்புருவம் கரும்பின் வில்லென் றுரைத்திடினும்
உலகம் பிழைக்குங் கறைமிடற்றில் ஒளிருங் கருமை உளப்படுமால். 10

கரிய இளைய பிடிக்கரம் போல் கன்னித் தொடைகள் கவின்பெறினும்
அரிய சிவன்றன் பொலனுடல்போல் அம்ம ஒளியைச் சொரிவனவாம்
எரிய விளங்கும் அழல்புரையும் எம்மான் உறையும் திருவரசின்
தெரிய விளங்குந் தளிர்நிகரும் தெரிவைச் சிறிய திருவடியே. 11

### செயல்.

சூரிய வெளிய திருக்கண்கள் காமஞ் சிறிதுந் தோற்றாமல்
உரிய சிவத்தை உறுவதற்கே ஓடும்; குமுதத் திருவாய்தான்
எரிய உடலம் இலையானேன் இயற்று காமக் கலையொழித்தே
அரிய சிவன்றன் கலையாவும் அகத்தில் தோன்றப் பயின்றிடுமே. 12

செல்வம் இளமை பெருவனப்புச் சேர்ந்தும் உலக காமமின்றி
நல்ல சிவத்தை விரும்புகின்ற நாடற் கரிய காமமுளாள்
மல்லல் செறிந்த நறுங்குழலும் மாவின் மதமு மிருந்தாலும்
அல்லல் தணிக்குந் திருநீறே அழகைத் தருமென் றணிவாளே. 13

## வேறு.

இன்பெலாம் இறைவற் போற்றல் என்றகங் கொண்ட நங்கை
நன்பெலாம் பொருந்தத் தெண்ணீர் நளியுறு கரகத் தேந்தி
முன்பெலாந் திரண்ட முக்கண் மூர்த்திதன் அடியில் மிக்க
அன்பெலாஞ் சொரிவாள் போல அணிபெறச் சொரிவா ளம்மா. 14

## வேறு.

தீய வுலகாம் நெறிபேணாள் தெய்வ நெறியே உளங்கொள்வாள்
மாயக் கனவாம் உடலென்பாள் மண்ணும் பொருளும் அழிவென்பாள்
தூய சிவனும் தாய்தந்தை சொல்லுங் கணவன் அவனேயாம்
நேயம் அவனும் என்நெஞ்சுள் நிற்கும் பொருளே அவனென்பாள். 15

## வேறு.

நிச்சமும் மாதர்க் கண்டும் நிறுத்தொணு மனத்தைப் பெற்றே
நச்சலை யுடையர் வாழும் நலமிலா வுலகின் கண்ணே
கச்சமில் வனப்புப் பெற்ற கட்டிளங் கன்னி யாயும்
அச்சமும் அன்பும் தோன்ற அணங்கெனப் பொலிந்தா ளம்மா. 16

இந்திர சேனப் படலம்

முற்றும்.

# சுந்தரி சிவம்பெறு படலம்.

அன்பினுக் கூற்ற மான அழகிதான் சிவத்தை வேண்டி
இன்பினுக் கூற்ற மான இயல்நெறி அடைந்த வாற்றை
நன்பினுக் கூற்ற மான நலஞ்செறி அடியர் தாளை
முன்பினுக் கூற்ற மாக முன்னியே மொழிகின் றேனே. 1

மின்னெலாந் திரண்டா லென்னும் மெய்யுடை வடிக்கண் ணாளை
மன்னெலாந் திரண்டு வந்தே மணஞ்செய விரும்புங் காலைக்
கொன்னெலாந் திரண்ட தந்தைக் குரைகழல் வணங்கி நின்றே
தென்னெலாந் திரண்ட சொல்லால் தெரிவையும் தெரிக்கும் மாதோ. 2

"தந்தையே! உண்டு வாழ்ந்து தரையிடை இறந்து செல்லும்
முந்தையோர் போல" யானும் முடிந்திட நினைத்தே னில்லை
அந்திவான் திங்கள் சூடும் அழகனார் அருளைப் பெற்றே
இந்தவெம் பிறப்பை நீக்க எண்ணினேன் மிகவும் இன்றே. 3

பெண்ணெனும் பிறவி மிக்கப் பெருமைசால் பிறவி யேனும்
மண்ணினிற் றுயரம் மிக்க மயலுறும் பிறவி யன்றோ?
எண்ணிய பெதும்பை யானல் இல்லுறீஇ உலகந் தன்னைக்
கண்ணுறப் பெறுமல் வாழ்ந்து கழிப்பிடப் பெறுவ ரன்றே. 4

கொண்கனை அடைந்த காலைக் கொண்கனும் தெவிட்டாத் தேனே;
நண்புறு நறிய பூவே! நளிர்வரைத் தென்றற் காற்றே;
பண்புறு நரம்பின் பண்ணே! பாவையே! எனக்கொண் டாட,
எண்புறும் உறவோர் கேட்டே இவர்களை எளிப்பர் அம்மா. 5

எள்ளிடு காலந் தன்னுள் எழுந்துசூல் வயிற்றுட் டோன்றத்
தள்ளிட உணவு நாளும் "தாழியில்" வயிறு வீங்கத்
வெள்ளிட வடிவ மெல்லாம் விளங்கிழைப் பெண்கள் துன்பம்
உள்ளிட உரைக்கப் போமோ? உயிர்பிழைப் பரிதே யம்மா! 6

அய்யிரு திங்கள் தன்னில் அன்னையும் சேயும் எய்தும்
மெய்யுறு துன்ப மெல்லாம் மிகமிகக் கொடிதே யன்றோ?
அய்யகோ பெண்கள் வாழ்க்கை அழகிது, அங்ஙன் ஆயும்
நய்யுறப் பெண்கள் வாழ்க்கை நடுவிலார் செய்வ ரன்றே. 7

பிள்ளையை வளர்த்தல் ஒன்றோ? பெரியவோர் கொண்கன் நாளும்
உள்ளிடும் உணவை அட்டு உண்டிட ஊட்டல் ஒன்றோ?
கொள்ளைய தொழில்கள் வீட்டுள் குயிற்றிடல் ஒன்றோ? கூடி
கள்ளிடு கலவி யின்பம் நாயகற் களித்தல் ஒன்றோ? 8

இன்னபல் லுழைப்பி னாலே என்பெலாந் தெரியக் கூனித்
துன்னுறு பிணியி னோடு துன்புறு முதுமை யெய்தக்
கொன்னுறு கணவன் றானுங் குலம்அறு மகளிர் கூடிப்
பன்னுறு கொடுமை யெல்லாம் பன்னியர்க் கியற்று வானே. 9

ஆதலிற் கணவன் எய்தி அவனியில் வாழ்தல் தன்னில்
சாதலே நலம தென்று சாற்றுவர் சான்றோ ரெல்லாம்
சாதலில் சிவத்தை எய்திச் சாருமெவ் வுயிர்க்கும் அன்பாய்
ஓதலேய் தவத்தைச் செய்தல் ஒள்ளறம் மகளிர்க் கென்றாள். 10

அவ்வுரை கேட்ட வேந்தன் அளவிலா மருட்கை யெய்தி
இவ்வுரை மழலை மாறா இளையளுக் கெழுதல் நன்றோ?
எவ்வுரை நூலும் மாதர்க் கில்லறம் விதித்த நன்றி
எவ்வுரை தவத்தைச் செய்ய விதித்தில குழந்தாய்! என்றான். 11

தளரியற் கொடியன் னாரும் தக்கதோர் கொழுந ரின்றி
வளருற லிலரா மென்னும் வாய்மொழி வழக்கும் உண்டால்;
கிளருறு தலைவன் இன்றேல், கேடறு வாழ்க்கை யேனும்
"களருறு பயிரைப் போன்று" கரிந்துபோம் மாதர்க் கென்றான். 12

பூப்புரை உண்கண் ணாளும் புதுமையும் நகையும் பூத்துத்
தீப்புரை வேலி னானைத் தெரிவுற வணங்கிக் கூறும்
"ஆப்புரை ஆவி தன்னை ஆடவர் மகளி ரென்று
காப்புரை நூல்கள் ஒன்றும் நவின்றில" அறிதி எந்தாய்! 13

ஆடவர் மகளி ராகா ஆருயிர் யாப்பு நீங்கி
வீடதை அடையு மாறால் வீட்டினைத் தவமே தந்தால்
நாடவர் மகளிர் தம்மை நற்றவஞ் செயவொட் டாமல்
கேடுற விலக்கல் நன்றோ? கேட்டியெம் தந்தாய்! என்றாள். 14

பேயெனும் வடிவம் பூண்டுப் பிறைமுடித் தலைவனுக்கே
தாயென விளங்கி னாளும்; தகவுறு சிவத்தை யெண்ணிச்
சீயென வுலக வாழ்வைச் சிந்திய திலகத் தாளும்
ஏயென வுலகத் தாரால் இகழ்ந்தெணப் படுகின் றாரோ? 15

அக்கமா தேவி யென்னும் அருந்திறல் அணங்கன் னாளும்
இக்கினல் எய்யுங் காமன் எரிகணை மயக்க மின்றி
முக்கணன் றன்னை யுன்னி முதிர்துற வடைந்த காதைத்
திக்கெலாம் போய தொன்றே! தீங்கென மொழிந்தா ருண்டோ? 16

பெண்ணெனப் படுவோ ரெல்லாம் பிறங்குர்ஆண் அடிமை யென்றே
எண்ணுறும் அறிவி லாளர் இளங்கொடி யனையார்க் கென்றும்
மண்ணினில் தவமும் வேண்டா மதிக்குறு அறிவும் வேண்டா
அண்ணிய உணவை ஆக்கும் அடுக்களை ஆமென் பாரே. 17

கலனுறு மகளிர்க் கெல்லாம் கருமங்கள் வேண்டா மென்றே
புலனறு சிலவர் கூறும் புனைவுரை போகட் டென்றும்
குலனுறு மகளி ரெல்லாங் கொழுந்தவங் கொள்க வென்றே
நலனுறு சிவநூல் கூறும் நலமொழி கொள்க எந்தாய்! 18

"அன்பினால் உலகம் ஒன்றாம்; அதுஅமை சமயம் யாது?
முன்பினால் மொழியும்?" என்றால் மொழிபுறச் சமயர்க் காமோ?
அன்பினால் வடிவங் கொண்டே அன்பினார்க் கருளைச் செய்யும்
இன்பினார் சிவத்தைப் பற்றும் எழில்சிவ சமயர்க் கல்லாய். 19

''பொன் அணி ஆடை வீடு புதுநிலம் கணவன் மக்கள்
மன்னுற வேண்டு மென்றே மனமெலாம் விழைவு கூறும்
மின்னுறழ் மாதர் போல'' மேவிலேன் சிறிதும் நெஞ்சுள்
தன்னுறழ் சிவத்தைச் சாரும் தாங்கொணா விழைவி னேனே. 20

என்றவ ளுரைத்த மாற்றம் எண்ணிய சளுக்க வேந்தன்
ஒன்றிய தெளிந்த ஆழ்ந்த உணர்வினோர் உரைக்குஞ் சொல்லை
இன்றிவ ளுரைத்த லாலே இறைதிரு வருளி னோடு
தன்றவக் குறையைத் தீர்க்கத் தரையிடைத் தழைத்தாள் என்றாள். 21

'என்றவக் கொடியே! நீயும் இறைதிரு வருளே பூத்து
ஒன்றிய சிவம ணக்க உன்மனப் படியே ஒன்றி
வென்றிய புலன்க ளோடு விழைதவம் படர்க'' வென்றே
அன்றினர் செருக்கும் வேந்தன் அருளினான் மகளுக் கன்றே. 22

'தாயருக் கிசைவ கூறித் தவத்தினை இயற்று தற்கா
ஆயநற் குலத்து வந்த அறிவனைப் பணிந்து கேட்கத்
தூயவன் உரைத்த வண்ணம் துகளறு மனத்த ளாகி
நேயமும் பிறவும் வாய்ப்ப நிமலனை வணங்க எண்ண. 23

இருளினிற் கிடந்து நாளும் இன்னலே நுகர்ந்து மாறா
மருளினிற் பொலிந்த சீவர் மருள்கெட உலகந் தன்னுள்
அருளினிற் பொலிந்த எம்மான் அன்பமை படிவம் வாய்த்துத்
தெருளினிற் பொலியுங் கோயில் திறம்பட இயற்றி வேந்தன். 24

வந்தனைக் குரிய வாக வழங்குபல் பொருள்கள் தந்தான்
எந்தையார் அடிவ ணங்க எண்ணிய அழகி நாளும்
முந்தையோர் நெறிவ ழாமல் ''மொய்யழல் அரக்கே போல''
நைந்துளம் வழிபா டாற்ற நன்கனம் தொடங்கி னாளே. 25

## சுந்தரி வழிபாடு.

எல்லொளி எழுமுன் னாக எழுந்துசில் செயல்கள் முற்றி
பல்லொளி தாத்து லக்கிப் பரமனை வணங்கி நீற்றைச்
சொல்லொடு அழகி தாகச் சுடர்ப்பிறை தனில ணிந்தே
அல்லொளிர் மிடற்றி னானை அகத்தினில் வணங்கி நின்றே. 26

பாசியும் புழுவு மின்றிப் பளிங்கெனத் தெளிந்த நீருள்
ஆசிலா மனத்தி னோடும் அழகிதான் குளித்த பின்றை
தேசுலாம் மதிநி லாவைத் திகழுறத் தரித்தா லென்ன
மாசிலா வெளிய ஆடை மனங்கொள அணிந்து மாதோ. 27

வெள்ளொளி துளும்பு முத்தும் வயிரமும் விளங்கச் செய்த
அள்ளொளி அணிகள் யாவும் அணிவரப் புனைந்து வெள்ளைக்
கள்ளொளி மலர்கள் சூடிக் "கலைமகள் வடிவே" என்ன
உள்ளொளி வெள்ளை வைத்து உடம்பெலாம் நீறு பூசி. 28

பண்ணெலாம் திரண்ட சொல்லாள் பாங்குறப் புனைந்த பின்றைக்
கண்ணெலாம் மகிழு மாறு "கலைமதி நடந்தா லென்ன"
நுண்ணுலாம் இடையி னார்கள் நூல்வழி அமைத்த வாய
ஒண்ணுலாம் பொருள்க ளேந்தி உடன்வரக் கோயில் புக்காள். 29

பெரியநற் பிள்ளை தன்னைப் பேணினள்; பெருமான் கோயில்
உரிமையோ டுற்றே அன்பால் உளமெலாம் உருகி நின்றே
'கரியதோர் மாலுங் காணாக் கடவுளே! அடியன் செய்யும்
தெரிவிலா வழிபா டேற்றுத் திருவருள் புரியு" மென்றாள். 30

பரனணி பழம்பூ வாதி பரிவொடும் அகற்றித், தொண்டர்
உரனணி மனத்துள் மேவி ஒருபெரும் விருப்புள் ஆடும்
சிரனணி மதியி னார்க்குச் சிறந்திடு புனலை யேந்தி
மானணி மலர்ப்பூங் கொம்பாள் மகிழ்வினால் ஆட்டல் மேவி. 31

எண்ணெயும் ஆனின் ஐந்தும் இலங்கும்ஐ அமிழ்தந் தானும்
வெண்ணெயின் உருக்கும் பாலும் விளங்கனித் தயிருந் தேனும்
பண்ணையின் கருப்பஞ் சாறும் பழங்களின் பிழிவுந் தெங்கின்
கண்ணுறு காயின் நீரும் கலவையும் முறையே ஆட்டி. 32

சொல்லினால் உயர்ந்த நீரைச் சொல்லொடு முடிவி லாட்டிச்
செல்லினாற் கதுவு மாடைச் சீர்பெற அணிவா னுக்கே
வில்லினாற் பொலியும் ஆடை வீக்கிநல் லணிகள் சாத்தி
மல்லினாற் பொலியும் மாலை மான்மதம் முதல சேர்த்தி. 33

பல்வகை உணவும் நல்கிப் பாக்கிலை முதல தந்தே
அல்லெனும் நறிய தூவம் ஆணவம் அகற்று தீவம்
நல்லமங் கலத்த வாதி நாயகன் திருமுன் நின்றே
ஒல்லென இயமு ழங்க உதவினள் ஒளிர்பூங் கொம்பாள். 34

கல்லுளம் மாக்கண் எல்லாம் கரைந்திழி அருவி வார
நல்லுளந் தொடுத்த சொல்லநல் நாயகன் இசைகள் பாடி
அல்லொளிர் மிடற்றி னானின் அழகிய திருக்கோ லத்தைச்
"சொல்லொளிர் பொருளே போலச்" சுடரிட மனத்தே எண்ணி. 35

குவித்திடு காமும் அன்பாற் குழறிடு மொழியும் முத்தின்
சவித்துளி விழியும் மெய்யில் சரித்திடு புளகுந் தோன்றச்
செவித்துவம் முதல வெல்லாம் செலநினை இவள்ம னத்தே
'கவித்துவ உவகை போலக்" கடவுள்நின் றுவகை செய்தான். 36

அண்டமுங் கடந்தே எல்லா அளவையும் நீங்கி நின்றே
பண்டுடன் நிகழ்வும் என்றும் பரமனும் இன்பத் தெய்வம்
கொண்டநல் லுளத்தில் நின்றே கொடுத்திடும் இன்பிற் றென்றும்
மண்டலத் தின்ப மெல்லாம் மதித்திடப் போமோ? கண்டீர்! 37

பெரியநல் லின்பம் பெற்ற பிறைநுதல் வடிக்கண் ணாளும்
அரியநல் லிறைவன் கோயில் அடைவினில் வலமாய் வந்தே
கரியநன் மிடற்றெம் மானே! கலைமதி அழகா! நின்னைப்
பிரியுநெஞ் சில்லை சென்று பின்னையே வருவ னென்றே. 38

தன்னமர் மாடம் நண்ணித் தலைவனார் உணவை உண்டே
இன்னமர் நெஞ்சும் சொல்லும் இசைபெறு உடலம் யாவும்
பொன்னமர் மேனி அம்மான் புதுமலர் அடிக்கே ஆக்கி
மின்னமர் வல்லி அன்னாள் மிளிர்ந்தனள் இங்கன் நாளும். 39

## இறைவன் தோற்றம்.

அன்பெலாம் இறைவற் காக்கி அகங்கரைந் துருக மேனி
என்பெலாம் நெகிழ நாளும் இவள்செயும் வினைவின் ஓர்நாள்
இன்பெலாம் வளர எம்மான் எழின்மிகு உடலம் தாங்கித்
துன்பெலாம் அகலத் தோன்றித் துண்ணென மறைந்தான் அம்மா. 40

## வேறு.

## சுந்தரியின் விழைவு.

மாலும் மால்கொளும் வனப்பினன் மங்கையின் மனத்தொர் நாளுறலாலே
சேலும் மால்கொளும் வரிக்கணாள் இன்பினைச் செறிந்தன ளென்றாலும்
“பாலும் நீரெனப்” பான்றிரு வடிவைதன் பாணியாற் றழீஇக் கொள்ளக்
கோலும் சீர்மையில் குறிக்கொடு நின்றனள் கோமளக் கொடியன்னாள். 41

உளத்தில் தோன்றுமோர் அழகிய உருவிசை உடறனைப் படைத்திட்டே
களத்தில் தோன்றுமோர் கறையவ னெதிர்ப்படிற் கரமெலாம் வளைத்தோடி
வளத்தில் இன்பெலாம் வளர்ந்திடத் தழுவியென் வறமெலாங் கழிவேனால்
குளத்தில் கண்ணவன் திருவுளம் யாதெனக் கொடியிடை துயர்ந்தாளே. 42

## வேறு.

உலகரைப் பித்தென் றுன்னும் ஒளிநகை முறுவல் நல்லாள்
இலகுறு பித்தி என்றே எவரும் இரங்கிப் பேச
நிலவுறு கண்ணி தன்மேல் நிச்சலுங் காதல் கொண்டே
அலவுறு நெஞ்சி னோடே ஆற்றிநின் றுயங்கு வாளே. 43

## மெய்ப்பாடு.

இன்சுவைப் பாலுங் கொள்ளாள் எழிசை யாழும் விள்ளாள்
அன்பிசை நெஞ்ச மெல்லாம் என்னையே துயர்க்கு மென்பாள்
அன்பிசை உருவந் தானும் அகத்தினிற் றெரிய நைவாள்
இன்பிசை இறைவன் றேன்றி எனக்கருள் செயுங்கொ லென்பாள். 44

பசியடப் பசலை பாய்ந்தே பண்டுபோல் உணவுண் ணுமல்
விசியுடல் சுருங்கக் கண்ணும் வேண்டிய துயில்பெ ருதே
சசிமுடித் தலைவன் தோன்றிச் சார்ந்ததாக் கனவுட் கண்டே
"தசிமதுக் குவளை போலக்" கண்ணீர் பெருக்கு வாளே. 45

"வேண்டியார் வேண்டிற் றெல்லாம் விரைந்தருள் பரிவ னென்றே"
இண்டியார் இசைக்கும் மாற்றம் எனக்கவை பொய்யா மென்பாள்;
தேண்டியார் பலர்க்கும் வந்தே திருவருள் புரித லாலே
காண்டிட அருளும் செய்யும்; கண்டபின் விடுங்கொல்? என்பாள். 46

வெண்டிரு நீறு பூசி விளங்கிடும் அடியர்க் கண்டால்
கொண்டநல் லன்பு பொங்கக் குரைகழல் சிவமாக் கண்டே
எண்டரு உணவு நல்கி இலங்குபல் பொருள்கள் ஈவாள்;
"மண்டுமிவ் அறத்தால் எம்மான் மலரடி பெறலாம்" என்பாள். 47

"அடியவர் அறனும் இன்னே அழகனை உதவா தாதல்
கொடியவென் விதியே" என்பாள்; குலவுமஆண் பெண்ண வான
படிமிசை உயிர்கள் கண்டே "பரன்உமை வடிவம்" என்பாள்;
வடியுறும் புகழ்மை பேசி "வரும்நினை விலனே" என்பாள். 48

## வேறு.

இன்னணம் மடந்தைதான் இன்ன லெய்தியே
துன்னுறு முதல்வனின் தூய காதலால்
கொன்னுறு பகலிராக் கூடல் காண்கிலாள்
மின்னுறு கொடியென மெலிந்து வைகினள். 49

## வேறு.

## வேனில் வரவு.

வந்தது குழவி வேனில் வான்றலைப் பெயலி னலே
செந்தளிர் பொதுளக் கண்கள் செல்குறுப் பொதும்ப ரெல்லாம்
தந்தன மலருந் தேனும் தண்ணளி நுகர்ந்து பாட
மந்தனன் மலயக் காலும் மணந்தது புலங்க ளெல்லாம். 50

## வேனில் மாலை.

பகல்கழி பையுண் மாலைப் பசும்பொலன் வான மீதே
இகல்கழி நிறைவுத் திங்கண் இலங்கொளி வெள்ளங் கால
தொகல்கழி வான மீன்கள் துலங்குறுங் காட்சி மாரன்
புகல்செழி விழவில் வைத்த பொலஞ்சுடர் விளக்கம் மானும். 51

## சுந்தரி நிலை.

## (வேறு)

தூயவெள் ளொளியுள் அமிழ்தினைக் கூட்டித் துலங்குறச் சிறிதுநன் னீலம்
ஆயஅள் ளொளியும் அழகுறச் சேர்த்தே அகமெலாம் உவகையே வார
பாயவெண் மதியம் பனிவிசும் பிவர்ந்து பகலென ஒளிமிகப் பரப்ப
சேயநல் லழகி நினைவெலாம் சிவத்துள் நிறுத்தினள் நிறைபெரி தூடையாள். 52

## திங்களைப் பழித்தல்.

(வேறு)

நிலதியர் தம்மை நீத்துச சேயிழை தனிமை யெய்தி
நிலவுறு மாடந் தன்னுள் நின்றனள்; மதியை நோக்கிக்
"கலதியைப் போல எம்மைக் கலக்குதி, களிப்பில் தோன்றும்
சலதியைக் கலக்கி நின்ற சழக்கனே! கொடியை" என்பாள். 53

கோள்என எண்ணப் பட்டும் குலவுறு வானந் தன்னுள்
நாள்ஒரு தன்மை யாகி நற்றிறம் செல்லாத் திங்காள்!
"வாள்என நிலவை வீசி வஞ்சியர் அஞ்சச் செய்தால்
தேள்என மற்றும் சாபம் தினம்வரும்" என்று சொல்வாள், 54

## தென்றலைப் பழித்தல்

"இன்றமிழ் பயின்றும் நல்ல இசைக்குறு தவனைச் சார்ந்தும்
குன்றிடுஞ் செயலுள் நீங்காக் கொடியவர் இனம்போல்" தோன்றி
அன்றிடுஞ் செயலைச் செய்யும் அழகிய மலயக் காற்றே!
"கன்றிடுங் கயவர் செய்தி காட்டினை தெளிய" என்பாள். 55

## இறைவன் தோற்றம்.

இங்ஙனம் புலம்பி வைகும் இளங்கொடி தன்மு ளுக
எங்ஙனம் மனத்துட் டோன்றி எழில்பெற நின்றான் எம்மான்
அங்ஙனம் வடிவு கொண்டே அணைதலும், "இன்ப வாரி
எங்ஙனும் பெருகி வந்தால் எதிர்பவ ரென்ன" நின்றாள். 56

## இருவரின் கலப்பு

ஆயிழை விரைந்து சென்றே அழகமர் அமலற் புல்லச்
சேயிழைத் தழுவின் முன்னர்ச் சிவனவள் வடிவம் புல்லக்
காய் ஒளி வடிவி னுனும் காம்படு தோளி னுளும்
"சேயவன் ஒளியும் கண்ணின் சீரொளிச் செறிவும்" ஒத்தார் 57

நானெனும் செயலே நீங்க நாயகன் செயலே ஓங்கத்
தானெனும் உணர்வு போகத் தலைவனுர் அறிவே யாகத்
தேனெனும் மொழியாள் இங்ஙன் திகழ்சிவத் துறுத லாலே
ஆனெனுங் கொடியான் செய்யும் அருள்நிலை விளங்கிற் றம்மா. 58

ஒருவனும் ஒருத்தி ஆகில் உறுமகிழ் அடைய லாகும்
இருவரும் மடந்தை யாகில் எங்ஙனம் மகிழ்வுண் டாகும்?
அருவுரு வடிவம் தாங்கும் அண்ணலார் தனைக்கூ டாமல்
இருமையெண் ணுயிர்கள் கூடில் எங்ஙனம் மகிழ்வுண் டாமே? 59

பயின்றநாள் தொட்டுக் கண்ணின் பனிப்புறு படலம் எல்லாம்
அயின்றநன் மருந்தொன் ருலே அகன்றிட அனைத்துங் கண்டே
குயின்றநல் உவகை வெள்ளம் குலவிடும் ஒருவர் போல"
இயன்றஎம் இறையைக் கூடி இயம்பொணு மகிழ்பெற் ருளே. 60

உள்ளெலாம் உவகை வெள்ளம் ‘ ஊற்றெனப்’’ பெருக லாலே
‘‘கள்ளெலாம் பருகிநின்ற காட்சிசேர் மக்களே போல்’’
புள்ளெலாம் முரலும் கொன்றைப் புதுமலர்க் கடவுள் முன்புத்
தெள்ளெலாம் சிறிதும் இன்றித் தெரிவையும் திகழ்ந்தாள் அம்மா. 61

ஆண்டவன் அருளும் அந்த ஆண்டவன் இணைய டிக்கே
பூண்டவள் அன்பும் ஒன்றாய்ப் பொருந்திய தாத லாலே
ஈண்டிய உலகத் தோற்றம் என் துணை உணராள் ஆகிக்
காண்டிடும் இறைவ னோடு காரிகை கலந்தாள் அம்மா. 62

## இறைவன் மறைவு

இத்தகைப் போகம் ஈந்த இறையவன் அவட்பு கழ்ந்தே
‘‘முத்தகைக் கோவை நல்லாய்! மொழியுநாள் சிலபின் நீங்க
இத்தரை காண ஏற்பம் இனைந்திடல்’’ எனவு ரைத்தே
வித்தகர் காணும் எம்மான் விரைந்தனன் மறைந்தான் மாதோ. 63

## சுந்தரி இரங்கல்

‘‘ஈடிலா வனப்பில் தோன்றி என்னுளங் கவர்ந்த எம்மான்
பீடுறு செயல்தான் என்னே! பேதையேற் கிரங்கித் தன்னை
நாடுறும் படியே ஆக்கி நன்னெறி செலுத்தி னானைக்
கூடுறு தளவில் காலம் கொன்னையாய்க் கழிந்தேன்’’ என்றாள். 64

## ஞாயிறு தோற்றம்

காதலன் பிரிவி னாலே காரிகை கலங்கி னாலும்
ஓதுறு மொழியி னாலே ஓவிடா துயிரே நிற்க
மாதரும் துயிலை நீத்தாள்; மண்ணவர் துயிலை நீக்கச்
சீதளக் கடலின் கண்ணே செங்கதிர் எழுந்த தம்மா. 65

செங்கதிர்க் காத்தால் கட்டைச் சீர்பெற அவிழ்த்து நல்ல
பங்கய முகைய லர்த்தும் பரிதியின் உதையங் கண்டும்
வெங்கதிர் முதல வாய விளங்கொளிக் கொளியாம் எம்மான்
இங்குறக் காணின் அல்லால் என் இருள் விடியா தென்றாள் 66

‘‘உறையெதிர் பறவை போல’’ உளமிகக் களிக்க மாலைப்
பிறையெதிர் நுதலி னாளும் பெருந்தகைக் கோயில் வந்தே
முறை யுளி வழிபாடாற்றி மூர்த்திடும் பெரிய அன்பால்
கறையொளிர் மிடற்றி னானைக் காணும் நாள் கணித்து நின்றாள். 67

## இறைவன் அரசனிடம் வருதல்

யாழ்கெழு மிடற்ற னாகி யாவையும் இயக்கும் எம்மான்
தாழ்நழற் கருள வேண்டித் தான்முனம் இசைந்த வாபோல்
ஆழ்கடல் உலகர் தன்னுள் ஆம்இவன் அழதக் கென்ன
ஏழ்புணர் இசையா ழோடும் ஏகினன் அரசன் மாடே. 68

வந்திடும் இசைவல் லானின் வனப்பினில் வலந்த வேந்தன்
"மூந்திடும் இசைவல் லாள! மொழியிசை முறைகாட்'' டென்ன
அந்திவெண் பிறையோன் றில்லா அழகனும் அரசற் போற்றி
நைந்திட உலகம் எல்லாம் நைவளம் இசைக்கல் உற்றான். 69

## இறைவன் இசை பாடுதல்

ஓவிய உறையுட் போர்த்து ஒளிமணி நல்லார் போல
பூவிரி கரிய கோடும் பொலிவுறு பத்தர் ஆணி
நாவிரி நரம்பும் வாய்த்த நலந்திகழ் யாழ்க்கை யேந்தி
பாவிரி பண்ணல் ஆதி பயிற்றிவெம் பரிவு தீர்த்து. 70

ஏர்மிகு விரல்கள் எல்லாம் எழின்மிகு வண்டிற் செல்ல
வார்தலே முதல வாற்றால் வகையமை பாலை பாட
ஆர்பதம் நினையா வாகி அனைத்துயிர் அன்பே யாக
ஓர்தரு இசையின் வெள்ளம் உலகெலாம் ஓடிற் றாக 71

அவையுளார் கோயில் உள்ளார் அணியுறு நகரத் துள்ளார்
நவையறு நாட்டில் உள்ளார் நனியிசை மயக்கர் ஆக
சிவையருள் பூத்த கொம்பின் செவிமுதல் செறிந்த பாணி
குவியுணர் வுடைய நெஞ்சுள் குலவிட அறிந்தாள் அன்றே. 72

"இயங்குறு காலைப் பற்றி இறுக்கிவெம் புலன்கள் கட்டி
மயங்குறு மனத்தை மாற்றி மயங்கிடா துறையும் யோகில்
முயங்குறு நாதம் போன்றே'' முதல்வனார் இசையும் கேட்க
உயங்குறு மனத்தி னாளும் உவப்பொடு உருகி னாளே. 73

இன்னிசை ஈர்க்கச் சென்றாள்; எண்ணரும் மாந்த ரோடே
மன்னிசை சார்பின் ஆங்கோர் மங்கல யாழ்கை ஏந்தி
தன்னிசை தேக்கி நின்ற தலைவனைக் கண்டாள்''; அ ஆ!
முன்னிசை கள்வன் இங்கே முளைத்தனன்'' என்று முன்னா. 74

''உலகெலாம் நிறைந்தும் என்றும் ஒளித்திடுங்கள்வா! உன்னைக்
குலவிடப் பிடிப்பன்'' என்று கொழிமதுக் கோதை தன்னால்
நிலவுறு நுதலாள் பற்ற நிகர்மலர்க் கொன்றை யானும்
அலகிலா விளையா டாற்ற அவையினின் றோடி னானே. 75

''வெண்ணெய்வாய்க் கள்வன் ஊதும் வேய்ங்குழல் ஒலியைப் பற்றி
வண்ணமார் நாக மாது வார்செறி படர்ந்தா லென்ன''
கண்ணுதற் காந்த கள்வன் கானமாம் வலையிற் சிக்கி
ஒண்ணுதல் வேற்கண் ணாளும் ஓடினள் அவனைப் பற்ற 76

பண்ணிறைத் திவவின் யாழால் பால்நெறி உருகப் பாடி
வண்ணநல் லடிகள் நங்கை வருந்துறா இயல்பைச் செய்தே
கண்ணுதற் காந்த கள்வன் காட்டிடை நடந்தா னாக
ஒண்ணுதல் மடந்தை தானும் "உனைவிடேன்'' எனத்தொ டர்ந்தாள். 77

முல்லைகள் நகைக்கும் கானும், முறிஅலர் தூற்றும் குன்றும்,
கல்லென வண்டார் ஆர்க்கும் கழனிசூழ் மருதப் பாலும்,
ஒல்லென அலையி ரங்கும் உவரியும் உழன்று ஓடி,
அல்லெனும் மிடற்றைத் தோற்ற அழகனின் வழிச்சென் றாளே. 78

இத்தகை இடங்கள் எல்லாம் இறைவனுற் கடந்த நங்கை
முத்தகைக் கரும்பு செந்நெல் முளரிகள் முதல தோற்றி
எத்தகை அழுக்கும் போக்கி இரும்புறம் புனித மாக்கும்
அத்தகைப் புனல்வி ளங்கும் அரசிலி அணுகி னாளே. 79

அன்பெனும் நாரால் யாத்து அழகினை ஈர்த்து வந்த
இன்பமர் தேவும் ஆங்கு எதிர்ப்படா னாகிச் செல்ல
துன்பமர் மங்கை தானும் "துணையறு பிணைபோல்" ஆகி
முன்பமர் இடங்கள் எல்லாம் முதல்வனைத் தேடி னாளே. 80

"முரசெலாம் ஒலித்தால் என்ன" முகிலினம் முழங்கும் கானில்
"அரசெலாம் துறந்து உண்மை அறிவினை அடைதல் வேண்டிப்
பரசுலாம் அரசைக் கண்ட பயன்நெறி புத்தனேபோல்"
பிரசுலாம் அரசைக் கண்டாள்; பெருங்கடல் விழியி னாளே. 81

காண்டலும் உளத்தின் கண்ணே காதலும் தெளிவும் தோன்றி
மூண்டிடப் பழைய வான மும்மல மயக்கம் நீங்க
ஆண்டவன் உணர்வு பொங்கி அகமெலாம் வழித லாலே
ஈண்டிய கரங்கள் கூப்பி எலும்பெலாம் உகவந் தாளே. 82

வந்தவள் அரசின் பாங்கர் மாதவப் பாட்டற் கண்டே
சிந்தையிற் றெரிவி லாளாய்ச் சேவடி வணங்கி நிற்ப;
அந்தமில் அறிவன் நோக்கி "அம்மையே! வருக யார்நீ
வந்தனை தனிமை யஃக வருத்துறை வாலா" றென்றான 83

"சாளுவ நாட்டை ஆண்ட சத்திய விரதன் மைந்தன்
எளிமை அற்ற வேந்தன் இந்திர சேனன் என்பான்
கேளுயர் குமரி யாகி நின்மலன் அடியை போற்றும்
தாள்புரி அழகி யாவன்; தந்தைநீ யாரை?" என்றாள். 84

கேட்டஅப் பாட்டன் விம்மிக் கிளத்தொணா உவகை பெற்றே
சேட்படு காலம் எல்லாம் சிந்தையில் எழுந்து தோன்ற
"கோட்படு வெறியன் போலக்" குதித்துநின் றாடிச் சொல்வான்
"தாட்படு குழந்தாய்! நீயென் தகுமுறைப் பேர்த்தி" என்றான், 85

என்றலும் நங்கை விம்மி "யான்பிறத் தலுக்கு முன்னே
சென்றனன் மானின் பின்னே; சேணிடை அகன்றான் என்ற
நன்றறி பாட்டன் நீயோ? நல்வினை விளைந்த தின்றே
தொனுறுற எங்குச் சென்றாய்? தோன்றிட உரைத்தி" என்றாள். 86

அம்மையும் அப்பன் ஆகி அனைத்தையும் இயக்கா நின்ற
செம்மையன் மாணாய் வந்து சிறியனைக் கொணர்ந்தான் இங்கே;
மும்மைய வடிவமான முதல்வனின் அருளினாலே
அம்மையும் இம்மை வாய்ப்ப அவனடி வணங்கி னேனே. 87

இவன் அவன் எனவே சொல்லி இகழ்தலும் புகழ்வும் கூறும்
பவநெறி மனிதர் போலப் பயன் இல புரிதல் இன்றி
அவன் அவள் அதுவே என்னும் அவற்றினுக் கிறைவன் ஆய
சிவன் அடி வணக்கம் பெற்றேன் சிறப்பிதிற் பிறவும் உண்டோ? 88

"தந்தையும் யாரும் இன்றித் தனிமையய் இங்ஙன் வந்தாய்
நொந்தனை போலும்" என்ன; நுடங்கிடை நொந்து கூறும்
"சிந்தனை செல்லொணாத சிவமெனும் செல்வனாலே
வந்தனன் இங்கே" என்று வான்முறை கூறினாள். 89

கேட்டஅப் பாட்டன் சொல்லும் "இளரொளி மாணாய் வந்து
நாட்டினன் இங்கே என்னை; நலமெலாம் வந்த உன்னை
ஈட்டினன் இங்கே இன்று; இறையவன் செயல்தான் என்னே!
காட்டுவன் அவனை இன்று கடிதினில் வருக" என்றான். 90

தெள்ளிய நீருள் மூழ்கித், திகழ்மலர் கையிற்கொண்டே,
ஒள்ளிய நங்கை அன்பே உருவெனச் சென்றாளாக;
கள்ளிய வேந்தன் அந்த நலம்மலி அன்பினாளை
அள்ளிய அரச வேந்தின் அடிமுனம் அடைவித்தானே. 91

"தொல்லையில் மணந்த கேள்வன் தோன்றலன் துறந்து வாழ,
முல்லையந் தொடையல் நங்கை முன்னுற அடைந்தால் என்ன"
அல்லையங் குழலி னாளும் அன்பெனும் சிவனைக் கண்டே,
எல்லையில் உவகை பொங்க, என்பெலாம் உருகினாளே. 92

ஐந்தெனும் புலன்கள் எல்லாம் அகத்தையே நோக்கிச் செல்லச்,
சிந்தையும் சிவத்தை நோக்கச், செல்வியும் பித்தியானாள்.
அந்தணன் மயக்கின் கண்ணே அழகமர் கோலம் காட்டி,
வந்தநல் வருத்தம் தீர்த்தான்; வல்லியும் தெளிந்தாள் அன்றே. 93

"இன்னிசை நறவை வார்த்து யாரையும் மயக்கி வந்தோன்
மன்னிசை மகளை யீர்த்து மாணெறி படர்ந்தான்" என்றே
பன்னிசை அரசும் மற்றப் பாங்கரும் வழிக்கொண் டாராய்த்
தென்னிசை வனங்கள் எல்லாம் தேடினர் வருகின்றாரே 94

மண்ணிசை இடங்கள் எல்லாம் மங்கையைத் துருவித் தேடிக்
கண்ணிசை இடங்கள் எல்லாம் கண்டிலர் வருந்தி வந்தார்
பண்ணிசைச் சுரும்பர் உண்ணப் பன்மலர் நறவம் தோற்றும்
விண்ணிசை பொழில்கள் மன்னி விளங்கரசிலி கண்டாரே. 95

பூமணம் வாரித் தென்றல் பொழிந்தமேல் உாசி ஓடப்
பாமணம் பெற்ற வேந்தும் பாங்கரும் வருத்தம் தீர்ந்தார்
தேமணம் வீசா நின்று திகழ்அர சடிக்கண் வந்து
மாமணக் கோயில் கண்டு மகிழ்வொடு புகுந்தார் அன்றே. 96

என்பெலாம் விளங்கித் தோன்ற இனைத்தொளிர் வடிவனோடே
அன்பெலாம் விளங்கித் தோன்றும் அழகியை விழியாற் கண்டார்;
''பின்பெலாம் இழந்த ஒன்றைப் பெரிதுறத் தருவும் போழ்தில்
முன்பெலாம் இழந்த தோடு முன்வரப் பெற்றார்'' ஆனார். 97

அன்பினை விளைக்கும் வித்தாய், அடியருக் கென்றும் மாறா
இன்பினை இயற்றும் தெய்வ எழிற்பெரு கோலங் கண்டார்,
துன்பினை இயற்றும் பற்றைத் தொலைத்திடு நெறியைக் கண்டே
இன்பினை அடைந்த அன்பர் இயல்பென மகிழ்ந்திட்டாரே. 98

சத்திய விரதன் என்னச் சாற்றிடு தவத்தி னானைப்
பத்தியின் மிகுந்த வேந்தும், பாங்கரும், வணங்கிச் சொல்வார்;
''தத்திய உழையை தேர்ந்து'' தாலமேல் நடந்தாய் பின்னர்
எத்திசை நடந்தெங்குற்றாய்? எங்களுக் கியம்பு'' கென்றார். 99

கான்மலர் கடுக்கை வேய்ந்த கடவுள்தம் அருளி னாலே
தேன்மலர் மிடைந்த தெய்வத் திருத்தலம் அடைந்த வாறும்,
வான்மலர்ப் பிணையல் ஒத்த வஞ்சிபின் வந்த வாறும்,
''மேன்மலர்ப் பிரமன் போன்ற'' மேலவன் உரைத்தான் அன்றே 100

இங்ஙனம் நடந்த வெல்லாம் இறைவனார் செயலே என்று
அங்ஙனம் இருந்த எல்லா அறிவரும் உணர்ந்தார் ஆக
உங்ஙனம் அரசின் பாங்கர் ஒளிர்சிவ பெருமான் தன்னை
அங்ஙனம் இருந்த எல்லா அறிஞரும் வணங்கி னாரே. 101

''அந்திவெண் பிறையாம் நெற்றி அழகியை நாளை வந்தே
தந்திர விதிமணப்பம் தகைபெற உணர்திர்'' என்றே
மந்திர வடிவ மான மறையவன் அருளால் ஓர்சொல்
அந்தரத் தெழுந்ததாக அனைவரும் வியந்தார் அம்மா. 102

## மாலை வரவு

குயிலெலாம் பொங்கர் சூழ்ந்து குழையினுண் மறைந்து வாழ;
மயிலெலாம் ஆடல் இன்றி மரமிசை இவர்ந்து துஞ்ச;
வெயிலெலாம் சுருக்கி வெய்யோன் விரைந்துமேல் மறைய; மாலை,
அயிலெலாம் பொருவுங் கண்ணி அலமர வந்த தன்றே. 103

பொன்னிறச் சிவனார் போலப் புகுந்தது செக்கர் வானம்;
பன்னுறு கண்ணி போலப் படர்ந்தது திங்கள்; சூடும்
மன்னுறு மத்தம் போல மலர்ந்தன வான மீன்கள்;
தன்னுறு மிடற்றைப்போலத் துலங்கின நீல வானம். 104

"இலகுறு பிரள யத்தே எவ்வகைச் செயலும் நீங்கி
அலகுறு குடிலை தன்னுள் அடங்கிடும் உயிர்கள் போல"
உலகுறு செயல்கள் எல்லாம் ஓவிய மாந்தர் யாரும்
நிலவுறு மனையில் வந்து நிறைதுயில் கொள்வ ரானார். 105

சிற்றுயிர் மேல வாகும் சிறப்பிலாக் காமங் கொண்டோர்
பற்றிலர் உறக்கம் என்றால்! பரமனும் அழகன் றன்மேல்
முற்றுறக் காமம் கொண்ட மொய்வளை உறங்குங் கொல்லோ?
"கற்றுறு புலவர் போலக்" காரிகை உறக்கம் நீத்தாள். 106

"பண்ணொடு தவக்கி ஈர்த்த பான்எனும் அழகன் தன்னைக்
கண்ணொடு கண்கள் கட்டிக் கவருநாள் என்றோ"வென்று
விண்ணொடு விளங்கும் திங்கள் விழிதனை விரைந்து பார்த்தே
"எண்ணுறு மற்றைக் கண்தான் என்றுறும்?" என்று நோவும். 107

வாரணம் கூவிற் றாக: வஞ்சியும் உவகை எய்தி,
ஆரண ஒலிகட்கெல்லாம் அரும்பொரு ளாகி நின்ற
காரணன் வந்து கூடும் காலையை உரைத்த தென்றே
"பூரண மாக வாழ்ந்து பொலிக"என் றுரைத்தாள் மன்னே. 108

மாணுறு சுடர்கட் கெல்லாம் மாண்டிடா வலிப டைத்த
ஆணவ இருளைப் போக்கும் அறிவொளி உதிக்கும் என்னக்
காணுற வருவான் போலக் கதிரவன் உதயம் செய்தான்
நாணுறும் அழகி நல்ல நாண்மலர்ப் பொலிவை ஒத்தாள். 109

இளநலம் எழுந்து பொங்க இமையவர் வனப்பு வாய்ப்பக்
களநலம் மறைத்து எம்மான் கணங்களோ டெழுந்து வந்தான்
உளநலம் இலங்கு வேந்தும் உழையரும் வணங்கி யேற்று
வளநலம் பொலியும் பாவை வரைவினைத் தொடங்கி னாரே. 110

மயன்எனும் தச்சன் செய்த மங்கல மணிமா டத்துள்
அயன்முதற் றேவர் வந்தே அருங்கடி வினையைக் காணச்
செயன்முதற் றேவும் வேந்தன் செல்வியும் மணத்தைக் கொண்டார்
"பயன்மழை யென்னத்" தேவர் பன்மலர் சொரிந்தார் அம்மா. 111

(வேறு)

தேவர் நாயகன் திகழொளி நாயகன் தேவரிற் சிறப்பான
மூவர் நாயகன் முதலெனுங் குண்டலி முதற்பல மகளிர்தம்
சீவ நாயகன் சீவரின் நாயகச் சிவன்திரு வருள்கூர்ந்தே
மேவு நாயகன் ஆகினன் சுந்தரி மேவுநற் றவத்தாலே. 112

(வேறு)

எடுத்தநல் லடியே வெல்ல இளம்பிறை கொன்றை தோன்ற
கடுத்தரு களமும் கண்ணும் கருணையே காட்டத் தூய்மை
அடுத்தநல் விடையில் ஏறி ஆன்கொடி அசைய எம்மான்
இடத்தமர் சிவையி னோடே இலங்கினன் வானுள் அம்மா. 113

அருவினன் உருவே யாகி அறிதான் அறிய வந்தே
ஒருசெயல் தனக்கொன் றில்லான் உயிர்க்கருள் விளக்க வென்றே
மருவிய விடையின் மேலாய் மலைமக ளுடனே தோன்ற
கரியநல் விழியினாலும் காவலர் யாருங் கண்டார். 114

சமநிலை உள்ளம் வாய்ந்த சத்திய விரதன் றன்னை
இமமலை வல்லி கேள்வன் எய்தென அடியுட் சேர்த்தான்
தமநிலைக் கூந்தல் பெற்ற தையலை உமையோ டாக்கி
அமர்தரச் செய்தான் வானோர் அலர்மழை பொழிந்தா ரன்றே. 115

அன்பர்காள்! "சளுக்க வேந்தன் அருந்தவக் கொடியன் பென்னும்
இன்பமார் நெறியே பற்றி எம்மிடம் படர்ந்தார்; என்றும்
துன்பமார் தவத்தை யாற்றித் துயருறு இவரைப் போல
அன்புமா நெறியே பற்றி அடைகவென்" றருளி னானே. 116

பெண்ணிடம் பொலிய உற்ற பிறைமுடி நுதற்கண் எம்மான்
விண்ணிடம் பொலியத் தோன்றி விளங்கிப்பின் மறைந்தா னாக
மண்ணிடம் பொலியும் அன்பர் மற்றவன் அருளே பேசி
எண்ணிடம் பொலியும் அன்பால் இறைநெறி அடைந்தார் அம்மா. 117

இந்திர சேனன் என்னும் இசையினாற் சிறந்த வேந்தன்
மந்திரம் போன்ற கோயில் மணிமிடற் றிறைக்குச் செய்தே
தந்திர நெறியே போற்றித் தரைமிசை அமர்ந்து பின்னாள்
அந்திவான் பிறையைச் சூடும் அவன்அடி அடைந்தான் மாதோ. 118

சுந்தரி சிவம்பெறு படலம் முற்றும்.

# ஞான சம்பந்தர் வழிபடு படலம்

சைவக் கொழுந்து, யாழினிசை, சாற்று தமிழின் இனிய பொருள்,
தெய்வக் குழவி, அன்பின்சேய், தென்னன் அமிழ்தம், தெளிதருநல்
உய்வைப் புகட்டும் நல்லாசான், உளத்தை உருக்கும் புதுநறவு,
நைவை அகற்றும் நற்செல்வம் நலமார் புகலிப் பெருந்தகையே. 1

உலகம் உய்யத் தமிழ் விளங்க ஓதும் இசைகள் உளவாகத்
திலகம் ஒக்கும் புனல்நாட்டில் தெய்வப் புகலித் திருப்பதியுள்
அலகில் சீர்மைப் பெருங்குலத்தில் அமலன் அடிகள் மனத்துன்ன
நிலவும் அன்பின் மனைவியார் நிகரில் வயிற்றோர் குழவிவர. 2

வந்த குழந்தை உமைமுலைப்பால் வண்ணக் கலத்தில் இனிதுண்டு
முந்து பயின்ற தமிழ்பாடி முத்தின் சிவிகைப் பொலன்றாளம்
தந்தெம் பெருமான் அருள்செய்பத் தரைக்கண் ஞான சம்பந்தச்
சந்தம் உடைய பெயர் விளங்கச் சைவம் விளங்க விளங்குநாள். 3

வடநாட் டுள்ள சிவத்தளியை வணங்க விழைந்த சிவப்பிள்ளை
புடையே அன்பர் குழுவிளங்கப் புகுந்து பலநற் றளிகண்டே
விடையேய் சிவத்தின் திருவருளே விளங்க எலும்பை மகளாக்கி
அடைவே தளிகள் பலகண்டே அடைந்தார் திருஅச் சிறுபாக்கம். 4

திருவச் சிறுபாக்கத் தமர்ந்த தெய்வச் சுடரைத் தொழுதேத்தி
மருவும் பொழுதில் கார்ப்பொழுது மல்லற் கருவி மழையோடே
வரலும் புகலிக் கோனுணர்ந்து வண்ணம் பெருகும் அடியருடன்
தால்சேர் மடத்திற் றங்கினராய்த் தக்க சிவத்தை நினைந்திருந்தார். 5

## கார்கால வர்ணனை.

மறுகெலாம் கலங்கல் வார, மரனெலாம் துளிகள் சிந்த,
அறுகெலாம் கலித்து ஓங்க, ஆறெலாம் வெள்ளம் போத,
"வெறுகெலாம் சிரித்தால் என்ன" வெண்முலை அரும்பு தோன்ற
சிறுகெலாம் கழிக்கும் வானம் செழுமழை பொழிந்த தன்றே. 6

களித்தன மானும் தூறும் காண்பவர்க் கினிய வாக
இளித்தன இனிய முல்லை எண்ணருஞ் சுரும்பர் உண்ண
அளித்தன நறவம் எல்லாம் அவையுணக் காமந்தோன்ற
விளித்தன பெடைகள் தம்மை விரைந்தன பொதும்பர் மாடே. 7

வெள்ளிடும் கோட்டு வேழம் "வீங்கிய வயிறு தாங்கிக்
கள்ளிடும் களியர் போலக்" களிப்புறு மதத்தாற் காணும்;
துள்ளிடு மான்கள் எல்லாம் தோன்றுமக் களியர்க் கண்டே
"எள்ளிடுஞ் சிறுவர் போல" எங்கணும் தெறிக்கும் மாதோ, 8

“பல்சுவை உணவும் வேட்டுப் பாங்குற உண்டு வீங்கி
ஒல்செவி உணர்வு போய ஓர்வறு மாக்கள் எல்லாம்
சொல்வகை உணரார் தம்முள் சூழ்ந்தபின் பிசைப்ப போலத்”
தொல்வகை நுணல்கள் எல்லாம் தோம்உற ஒலிக்கும் மாதோ. 9

வற்றிய மானும் தூறும் வான்புயற் பெயலி னாலே
“கற்றிடு மகனைப் போலக்” களிசிறந் தொளிரக் கண்டே
“பெற்றிடும் அன்னை உள்ளம் பெருகிய உவகை போல”
உற்றிடு நிலங்கள் எல்லாம் ஊற்றெழுந் துலாய தன்றே. 10

மாடெலாம் மழைகள் பெய்ய மலிபுனற் பெருக்கம் தேங்கிக்
கோடெலாம் வழியும் ஏரிக் குளமெலாம் “உலகுக் கீயப்
பாடுலாம் பொருள்வந் துற்ற படிபுகழ் அறிஞர் தங்கள்
சேடுலாம் உவகை உள்ளச் சிறப்பினிற் சிறக்கும் அம்மா. 11

“பொய்கையுள் புக்கு மூழ்கிப் புனலெலாம் உடம்பில் வார
ஒய்யெனச் செல்லா நின்ற ஒளிமணி மகளிரே போல்”
பெய்யுறு மழையுள் மூழ்கிப் பெரிதுநன் குவகை யோடும்
மய்யுறு மிடற்ற வாய மயிலினம் திரியும் அன்றே. 12

ஆவினம் மேய்ப்பார் எல்லாம் அழகிய முல்லை சூடி,
மேவுறு கானம் செய்யும் மென்குழல் ஊதி, ஏந்தும்
ஓவலில் பிறியோ லைக்குள் உளமகிழ் வோடே தங்க;
சேவினம் தொடரும் ஆக்கள் செறிபுனல் புல்லை மேயும். 13

பொற்குடம் நிகர வாய பொலிமடி ஆன்பால் எல்லாம்
விற்குறும் இடைச்சி மாரின் விளங்கொளி முறுவல் கண்டே
அற்புறு சிலவர் “உன்பால் அடைதர இன்பாம்” என்பார்
கற்புறு மடந்தை நல்லார் “காதலர்க் கதுவாம்” என்பார். 14

கார்ப்பெயல் அடங்கி வையம் களிப்புறு நிலைமை கண்டே,
ஆர்ப்புறு அடிய ரோடே அரசிலி வணங்க வேண்டி,
ஏர்ப்பெறு புகலிப் பிள்ளை இயற்கையின் வனப்புக் கண்டே,
சீர்ப்பெறு சிவத்தை எண்ணிச் சிறப்பொடு வந்த தாக. 15

இசைபாடி மனம்உருக்கி இங்கும் அங்கும்
இனம்இனமாத் திரிதந்தே துணருண் மேவி
அசைபாடி முகையமர்ந்து அலர்த்தி மூக்கால்
அருந்திநறும் தேன்எல்லாம் மயங்கும் வண்டர்
“திசைதோறும் செலப்பரமன் சீர்த்தி பாடிச்
சிவானந்தத் தேன்அருந்தும் அடியர் போல”
மிசைதோறும் விளங்குபொலன் கடுக்கை கண்டே
மெய்ஞ்ஞானச் சிவப்பிள்ளை மகிழ்ந்த தன்றே. 16

"மண்ணெலாம் உளஆன்பால் வயங்கக் கொண்டு
மலிநீறு மிகக்குழைத்தே மருள்தான் நீங்க
விண்ணெலாம் ஒளியாலே விளங்கித் தோன்ற
வியன்உலகைப் பூசியதோர் விரகு மானத்"
தண்ணெலாம் மிகவீசித் திங்கள் தோன்றத்;
தழைஞான சம்பந்தப் பிள்ளை கண்டே
எண்ணெலாம் உவகைவர இறைவன் கண்ணி
இதுவாமென் றுளம்விரும்பி இறைஞ்சிற் றம்மா. 17

கார்மேவு முகில்கலித்துப் பொழியர் நின்ற
கடும்புனலம் அலைவீசிப் பாயா நிற்பச்
சீர்மேவு அருள்பொழியம் சிவத்தின் முன்னர்ச்
செல்லுகின்ற அடியர்கள்போல் விழைவி னோடே
ஆர்மேவு கயலினங்கள் எதிரே ஓட
ஆங்கணைந்த இளம்பிள்ளை அன்பாற் கண்டே
ஏர்மேவு புனல்முடியின் இயல்பை உன்னி
இனிமையொடு மனமுவந்தே ஏகிற் றம்மா. 18

வேனிலான் மெலிந்த விரிநில வளாகம் விழைபெரும் பயன்மழைக் கொண்மூ
வானெலாம் பொலிந்து பொழிதலால் தழைத்து, வயங்குறு காட்சியிற் களித்தே,
தேனெலாம் திரண்ட சுவைதரு பதியம் தெரிந்துரை ஞானசம் பந்தன்,
நானெலாம் அகன்ற உவகையே வழிய நணுகினர் அரசிலி நகரே. 19

நுகர்வினை கழிக்கும் அடியருக் கிடமா நுவல்திருக் கோயிலுள் நுழைந்தே
பகர்வினை முதலாம் பரம்பொருள் வடிவைப் பார்த்துணர் ஞானசம் பந்தப்
புகரறு புகலிப் பெருந்தகை விருப்பால் போற்றியே புகழ்ந்தன ராகி
அகமலி உவகை எழுந்திடப் புளகம் அரும்பிட நின்றனர் ஆங்கே. 20

பாலரு மழலைத் தீந்தமிழ்க் குழகர் "பாடல்வண் டறையென" எடுத்தே
"சேலரு வயல்சூழ் அரசிலி நகரே சிவம்உறை நகரெனத் தெரித்தும்;
மாலரு மனத்துத் தேரரை மறுத்தும்" மகிழ்விறைற் பதியமும் பகர்ந்தே
நீலரு மிடற்றர் திருவருள் நிலவ நினைவெலாம் சிவம்வர நிகழ்ந்தார். 21

உலகெலாம் சைவ உயர்நெறி வளர,உமையமர் பாகனை வணங்கி
அலகிலா உயிரும் அருள்நெறி ஒழுக, அகிலமும் உவகையே பெருக
நிலவுலாம் சடிலப் பெருந்தகை அருளால் நிகழ்திரு ஞான சம்பந்தர்
மலர்சிலம் படியைத் தொழுதிட எழுந்தார் மற்றைய பதியெலாம் மணக்கவே. 22

ஞானசம்பந்தர் படலம்
முற்றும்.

# புறவுரை.

அரசிலிப் பெருமான் தரிசனம் விரும்பும் அருண்மிகு பாலய தேவன்
உரைசெய்த உரையே உளத்தினில் கிடக்க உரைத்திடத் தொடங்கினேன் இதனை,
தரையுறு பிறர்தம் ஆதர விதற்குச் சற்றுமே இலாமையி னாலே
புரையறு கதையைப் புரையற வுரைக்கப் புகுந்திலன் விருப்பிலா மையினால் 1

"சென்றுதேய்ந் திறுதல் முதலிய வழுக்கள் செறிந்துள" என்றனை அறிஞர்
ஒன்றியே உரைக்கும் உரைக்கிலக் கல்லேன்; ஒருதரம் அரசிலி நகரை
நன்றுறப் பொருந்திப் பார்த்திட விழைந்தும் நான்அதைப் பெற்றிடா மையினால்,
குன்றுறும் உளத்தால் உரைத்தனன் கதையைக் குலவுநற் புலவரே! அறிக. 2

கொடைவளம் பழுத்த புரவலர் விழைவு குலவிடு காவியந் தானே
நடைவளம் பழுத்து நலமெலாம் சிறந்து நன்கனம் செயப்படுங் கண்டீர்!
மடைவளம் பழுத்த அரசிலிக் கதையை மற்றவர் மனங்கொளக் காணேன்
நடைவளம் பழுத்த பாலயன் உரையால் நவின்றனன் ஒருவித மாக. 3

ஐந்தினா யிரத்து ஐம்பதில் ஒன்று அகன்றிடுங் கலியுறும் யாண்டில்
மைந்தினால் உரைத்தேன்; மல்லலாற் சிறக்க மலிந்திடும் அரசிலிக் கதையை
இந்தினாற் பொலிந்த இறையவன் அருளே இயம்பிட விரும்பிடு அடியேன்
ஐந்தினாற் பொலிந்த குகைநகர் அடிகள் நண்ணும்ஆ சிரியனேன் யானே. 4

புறவுரை முற்றும்.

## பிற்சேர்க்கை

# பெரியபுராணம்-திருஞான சம்பந்த நாயனார்

(1132) இன்புற்றங் கமர்ந்தருளி யீறில்பெருந் தொண்டருடன்
மின்பெற்ற வேணியினார் அருள்பெற்றுப் போந்தருளி
என்புற்ற மணிமார்பர் எல்லையிலா ஆட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு அச்சிறுபாக் கத்தணைந்தார்.

(1133) ஆதிமுதல் வரைவணங்கி ஆட்சிகொண்டா ரெனமொழியும்
கோதில்திருப் பதிகவிசை குலாவியபா டலிற்போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினார் சின்னாளங் கமர்ந்தருளி.

(1134) எறணிந்த வெல்கொடியா ரினிதமர்ந்த பதிபிறவும்
நீறணிந்த தொண்டருடன் எதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானம் கடந்தருளி விரிசடையில்
ஆறணிந்தார் மகிழ்ந்ததிரு அரசிலியை மகிழ்ந்தடைந்தார்.

(1135) அரசிலியை யமர்ந்தருளும் அங்கணா சைப்பணிந்து
பாசியெழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினார் மேவுபதி பலவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுடுத்த திருத்தில்லை நகரணைந்தார்.

## திருவரசிலியந்தாதி.

(1) சாளுவ ராசன் அருள்தனச் சுந்தரி தன்பதியா
நீளுவ ராழி நிலம்போற் றரசிலி நித்தற்கன்பு
மூளுவ ராகியிவ் வந்தாதி முற்றும் மொழிந்தநல்லோர்
ஆளுவ ராகுவர் கற்பக நாடர சையமின்றே.

(27) இறையிலங் காழ் கயல்விழி யாமை யிடுபதக்க
மறையிலங் காழி மறையோன் பனுவ லலங்கலணி
நிறையிலங் காபுரக் கோமான் குலைய வெரித்தவற்குத்
துறையிலங் காயிழை யார்க்கு முரசிலித் தோன்றலுக்கே.

(60) தொண்டைக் கவானிளந் தோகையஞ் சாயல் சுருளளகந்
தொண்டைக் கனிநிகர் செவ்வாய் பயோதரச் சுந்தரியாள்
தொண்டைக் கனிவொடு செய்யத்தன் வாமந் துலங்கவைத்தான்
தொண்டைக் கமல வயனாட் டரசிலித் தூமணியே.

(79) கண்ணங் கனந்த மகபதிக் காக்கிய கௌதமப்பேர்
நண்ணங் கயந்தனின் மூழ்கிச் சிவாய நமச்செபித்து
வண்ணங் கனலனை யான்றண் ணரசிலி வானவனைப்
பெண்ணங்க நண்ணவைத் தானைத் தொழவுறும் பேரின்பமே.

## அபிதான சிந்தாமணி

பக்கம் 1537.

(திரு அரசிலி) ஒழுந்தியாப்பட்டு என இப்பொழுது வழங்குகிறது. வாமதேவ ரிஷி பூசித்த தலம். சுவாமி பெயர் அரசிலிநாதர். தேவி பெயர் பெரியநாயகியம்மை. தீர்த்தம் அரசடித் தீர்த்தம். புதுவையிலிருந்து ஏழு மைலில் இருக்கிறது. ஞான சம்பந்தர் பதிகமுடையது.

---

## திரு அரசிலி பதிகங்கள்.

கௌமார மடாலயம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இயற்றியது.

### விநாயகர் வெண்பா.

அரசிலியூர்க் கோயிலில்வாழ் ஆனை முகனே
பரசுடைய னீன்றமுதற் பாலா—விரசப்
புலவர்களும் நீதியற்ற புல்லர்களு மஞ்சும்
பலமுறச்சற் றின்றெனைக்கண் பார்.

### முருகக்கடவுள் திருப்புகழ்.

தனதன் தாத்தனத் தானன தானன—தனதானு.

படிமகள் கூக்குரற் றீர்வது நாடிய—தமியேனோர்
பயமில ராய்ப்பழித் தீனரு மார்வமெய்—திடலாமோ.
கொடிமிசை தோற்றுபுட் கூவிட நாடக—மயில்மேலே
குருதிவை வேற்படைத் தோளொடு நாளுமுன்—வருவாயே.
செடிமலி வேட்டுவச் சாதி மினாள்முலை—புணர்வானே
திருகிய *கோட்டயத் தேறிவி ணோருய—அருள்வானே
அடியவர் வேட்கைமுற் றீவது நாடிய—முருகோனே
அரசிலி யூர்த்திருக் கோயிலில் மேவிய—பெருமாளே.

### விட்டுணு வெண்பா.

நின்பின் சிவனிருக்க நீயவன்றன் பின்னிருந்த
அன்பின் பெருமை அறிவாரார்—பொன்பிறங்கு
மார்பகத்தி லொற்றைமணி வைத்தாய் அரசிலிப்பேர்
ஊர்பரிக்கு மாலே யுரை.

தெய்வமே துணை.

---

* கோட்டயத்து-கோட்டு அயத்து, கொம்பையுடைய ஆட்டு வாகனத்தில் என்பது.

# திரு அரசிலிபுரம் சிவன் பதிகம்.

## காப்பு—வெண்பா.

கண்ணுணை யென்னுட் கனவிலருட் காட்டியதோர்
பண்ணுல் **அரசிலியைப்** பாடுகின்றேன்—விண்ணுணச்
சொற்புலவர் நாணச் சுடர்போற் பெரிதெறிக்கும்
நற்புகழ்தோய்ந் துய்வதென்றே நான்.

## அறுசீர்த்தாழிசை.

கண்ட கோடரி யும்பொன் மானும் கையிற் கொண்டுவளைக்
குண்ட லக்கா தாட ஆடுங் கூத்தன் வாழ்கோயில்
வண்ட ரான தருவர் போரால் வாடா வாழ்வுறல் வேட் (டு)
அண்டர் வந்து தெண்டன் செய்யும் அருள்சேர் **அரசிலியே.** (1)

வேழம் போலுங் கொங்கை மங்கை விரும்பிச் சேர்மார்பில்
கேழல் வெள்ளைக் கோடும் பூண்ட கிழவன் வாழ் கோயில்
சூழ நிற்குங் கமுகின் றலையிற் றுள்ளிச் சேல்பாயும்
ஆழ நன்னீர் வாவிச்சீரால் அவிரும் **அரசிலியே.** (2)

நீறு பூசித் தோலு டுத்து நிலவார் தண்மதியூ (டு)
ஆறு சூடி விடையி லேறும் அழகன் வாழ்கோயில்
பேறு பெற்ற மேலோர் தம்மைப் பேணும் பெற்றியினோர்
வீறு வீதி தோறும் சங்கூர் வியனுர் **அரசிலியே.** (3)

நந்த ணிந்த செங்கை யானும் நளினப் பூவானும்
வெந்த கைப்போர் செய்த நாளில் வெற்பா ளன்கோயில்
கொந்த லர்ந்த கூந்தல் மாதர் கூடியாடிடும்
சந்த மோடு கீதம் நீடும் தகைசால் **அரசிலியே.** (4)

கருமந் தானே பிரம மென்று கழறுங் கல்வியினோர்
மருவு மாதர் மான முற்றும் மாற்றி னன்கோயில்
பெருமை தோயும் அஞ்செ ழுத்தைப் பேசும் பெட்பதனல்
இருவி னைக்கஞ் சாதார் நாளும் ஏத்தும் **அரசிலியே.** (5)

ஆறு கோடி பேதமாகி அவிரும் நெறிதோறும்
வேறு வேறு கோல மாகி மிளிர்கின் றன்கோயில்
சேறு மாறு வயல்கள் தோறும் செந்தா மரைமீதில்
ஏறு சங்கோ (டு) எகினம் வாழும் எழிலார் **அரசிலியே.** (6)

கட்டு நூலின் சிக்கு றுதார் கருத்தா குங்கண்ணோர்
எட்டு மூர்த்தி யாகி யொன்றும் இறைவன் றன்கோயில்
மட்டு மீறும் கொன்றை பூத்து மாழைக் கரசேபோல்
கொட்டு கின்ற சீல மென்றும் குலவும் **அரசிலியே.** (7)

பன்றி யோடு பார்த்தன் முற்போய்ப் பலவா விளையாடி
வென்றி வாளி யொன்று நல்கும் வீறுற் றன்கோயில்
மன்றி லாடும் தாளைச் சற்றும் மறவார் வாழ்கையினல்
தென்றி சைக்கோன் ஆண்மை யென்றும் செல்லா **அரசிலியே.** (8)

ஆனைச் சென்னி யானைச் செவ்வேல் அணியுங் கையானை
மானைப் போலுங் கண்ணி தன்பால் வருவித் தான்கோயில்
மீனைக் கண்டு கொக்குள் அஞ்சும் வியனூர் வாவிகளில்
தேனைச் சிந்தும் கமலம் பூத்துத் திகழும் அரசிலியே. (9)

பண்டு நால்வர் பாடற் கொண்டும் பாவத் தேன்புன்வாய்
விண்டு சூடும் பாட்டும் கொள்ள வெட்கா தான்கோயில்
மண்டு செந்நெல் வயலிற் பள்ள மடவார் வாய்செய்யும்
கண்டு போலும் குரவை யோசைக் கவினூர் அரசிலியே. (10)

வல்லை யொக்குங் கொங்கை யம்மை மருவும் பாகத்தோர்
தொல்லை மூர்த்தி யாளு மேன்மை துலங்கும் அரசிலியை
நெல்லையூரன் போற்றல் சாற்றும் நேயத் தோரெல்லாம்
அல்லை வென் றிட் (டு) எல்லை நேரும் அறிவெய் துநர்தாமே. (11)

முற்றிற்று.

---

## டை பதிகம் வேறு

## காப்பு-வெண்பா.

ஆணுமாய்ப் பெண்ணும் அலியுமாய் அண்டமுற்றும்
பேணும் பெரிய பிரானனை—தாணுவே
இந்நா ளெனையாண் டெழிலார் அரசிலியூர்க்(கு)
எந்நாளு மீவா யிசை.

## எண்சீர் விருத்தம்.

முன்னுமைப் போற்றிய நாளரு ளாமல் முரணுறு வாதொன்று மூட்டிவிட் டிருந்தீர்
பின்னுமிந் நாளெனை யீண்டழைத் தீரே பெருகிய திருவருட் பேறுநல் கிடவோ
பொன்னுறற் பாந்தளம் பூணுமிக் கணிவீர் பூதருந் தேவரும் போற்றிய புகழீர்
*அன்னுவல் கார்விடம் அமைதரு மிடற்றீர் அரசிலி புரத்தினில் அமர்ந்தபிரானே. 1

எத்தனை யோதரம் சுந்தரன் பாடற்(கு) ஏமம்நெல் லாதிய இனிதரு ளியநீர்
இத்தனை தலந்தொறும் பாடிய தமியேற்(கு) யாதும்நல் காதுறல் ஏனிசைத் தருள்வீர்
மத்தக மால்கரி யொடுபுலி யுரித்தீர் மாழைவெற் பேந்தியும் வளைத்தமர் இழைத்தீர்
அத்தமிக் குடையவ னுறவுபெற் றுள்ளீர் அரசிலி புரத்தினில் அமர்ந்த பிரானே. 2

புண்ணிய விருப்பமில் செல்வரு மின்சொற் பொலிவுண ராதபுன் புலவரும் புவிக்காம்
இண்ணிய வுதவிசெய் யாச்சிறு தவரும் சேர்ந்தெனை யிகழ்ந்திடச் செயல்முறை தானே
வெண்ணில வுடன்இற கணியவும் துணிந்தீர் வேலையிற் பாம்புமிழ் விடமுழு தயின்றீர்
அண்ணினர் மனத்தினுக் கமுதினு மினிப்பீர் அரசிலி புரத்தினில் அமர்ந்தபிரானே. 3

பாவம தேமிகப் புரிதரு பொல்லார் பார்மக ளழுந்துயர் பண்ணுமிந் நாளென்
ஆவலித் தனைவிதித் தருளினர் ஆரோ ஐந்தொழிற் செயுந்திறத் தார்பிற ருளரோ
சாவறி யீர்பிறப் பதுமறி கில்லீர் சத்திய மாய்ப்பெருந் தருமமு மானீர்
ஆவதன் எழில்வடி வெழுதிய கொடியீர் அரசிலி புரத்தினில் அமர்ந்த பிரானே. 4

---

அன்னுவல்-அல்-நுவல், எனப்பிரிக்க அல்-இருள்; எனவே இருளினை ஒத்த தென்று சொல்லும் தன்மையுடைய கரியவிடம்.

செங்கம லாதனத் தயன்மறை கூறும் சீரிய நெறியினர் தியக்கமுற் றளவில்
பங்கமுற் றூர்கொடும் பிசிதரின் புற்றூர் பரிந்தரு ளாடல்செய் பண்பினர்க் கருள்வீர்
கொங்கவிழ் கொன்றையும் ஆத்தியும் அறுகும் கூவிளமாதியுங் குலவிய சடையீர்
ஐங்கணைக்கிழவனைப் பொடித்தகண் ணுதலே **அரசிலி புரத்**தினி லமர்ந்தபிரானே. 5

சோறருந் தாததற் காவன தாமும் துய்க்கைவிட் டநுதினந் துதித் துமிக் கிரந்தும்
பேறரு ளாதிவண் அலமரச் செய்தீர் பித்தனென் றூற்கருள் பீடுமெய்ப் படுமோ
கோறலஞ் சாருணர் வரியபெம் மானே குரவனென்(று)ஆலோடு குருந்தையிலிருந்தீர்
ஆறவி ரைந்தலைப் பவளவெற் பனையீர் **அரசிலி புரத்**தினி லமர்ந்த பிரானே. 6

சமணரிற் சேர்ந்தும தடியரைக் கண்டாற் சகிப்பரி தாய்மிகத் தயங்கினன் றனையும்
அமலமெய் வீட்டினிற் சேர்த்திடத் தடுத்தாண் டருளியகருணையின் றயர்த்துவிட்டீரோ
எமனுயிர் செகுத்தொரு பாலனைப்புரந்தீர் யானென தென் கலர்க் கென்பொரு ளானீர்
அமணம தாய்ப்பல மாதர்முற் சென்றீர் **அரசிலி புரத்**தினிலமர்ந்த பிரானே. 7

குருச்செய லடைந்தவ ரெத்தனை பேரோ குவலயத் தவிர்ந்தமை கூறிடல் கேட்டேன்
மருச்செறி யிதழியிற் கவிபலபாடி வணங்குகின் றேற்கொரு வாழ்வுநல் கீரோ
கருச்சுழிப் பெருங்கடல் கடத்தவல் லீரே கவிஞனுக் காவொரு கன்னிமுன் னிரந்தீர்
அருச்சுனன் வில்லடிக் கம்பருள் செய்தீர் **அரசிலி புரத்**தினி லமர்ந்த பிரானே. 8

பற்பலர் கதிபெறச் செய்தது நிசமேற் பரிந்துநும் மாலயப் பணிமுழு தியற்றப்
பொற்பண மாயினு மின்றளித்தருளிப் பூரியர் நிந்தனைப் புழுக்கமுற் றொழிப்பீர்
கற்பசும் பொன்னெனச் செய்தமெய்ப் புகழீர் கரிமுக னுடனயிற் கந்தனைப் பெற்றீர்
அற்படுங் கூந்தலங் கவுரியைப் பிரியீர் **அரசிலி புரத்**தினி லமர்ந்த பிரானே. 9

நாலடி யவர்க்குமுன் னருளிய பேறே நல்கிட வேண்டுமிந் நாள்பசுத் தலையின்
மேலடித் துண்பவர்ச் செகுத்திடல் வேட்டேன் வீடதிற்பெரிதெனவிரும்புநர்ச்சேரேன்
மாலடி தேடிய வரையுரு வானீர் வஞ்சமில் லீர்வரம் வழங்கிடச் சலியீர்
ஆலடித் தேசிக னாகிய சிவனே **அரசிலி புரத்**தினி லமர்ந்த பிரானே. 10

ஆடல்வல் லார்தமை அளப்பரும் வளஞ்சேர் **அரசிலி புரத்**தினி லமர்ந்த பிரானை
ஏடணைப் பேய்களுக் கொதுங்கிஒல் காமல் எதிர்த்து வென் றுயத்துணிந் திடுந்திருப்-
புகழோன்
பாடல்நன் றெனப்புகழ்ந் துணர்ந்துசந் ததமும் பரவவல் லார்கள்மெய்ப்-
பத்தியிற்றோய்ந்து
நீடறி வால்இக பரமெனு மிரண்டும் நினைத்தவண் ணம்பெறும் நெறியினர் தாமே. 11

முற்றிற்று.

உ
தேவி சகாயம்.

# அம்பிகை பதிகம்.

## காப்பு—வெண்பா.

கண்ணுடி யுட்பொருள்போற் காண்டரும்நின் கண்ணருளென்
உண்ணு டியவா றுஞற்றலென்றே—விண்ணுடும்
அங்கையெடுத் தேத்தும் அரசிலியூ ரம்மான்சேர்
கொங்கையழ குத்தாயே கூறு

## எண்சீர் விருத்தம்.

மண்டலத் தொவ் வோர்தலர்த்தேர் வெண்கவிமட் டேற்று
 மகிழ்கின்ருய் சில தலத்தில் வண்டமிழ்ப் பாப் பதிகம்
விண்டணிதற் கானவிளையா டல்செய்கின் ருயிவ்
 விதமிரண்டின் உட்பயனே விளம்பியருள் புரிவாய்
கண்டனைய மதுரமொழி பயிலுமிளங் குயிலே
 கருணையினு லறம்வளர்க்கும் கையுடைக்கார் மயிலே
அண்டலர்க்கோ ரெமனனையார் பரவும்அர சிலியூர்
 அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (1)

பகரரிய கோடாநு கோடியண்டங் கொண்ட
 பண்டியுறும் நீதானே பரந்தாமன் வேறே
நிகரிலருட் பேறுபெற்றோர் இரண்டுவித மாயும்
 நிகழ்த்துகின்றூர் ஐயமற நிசமுரைத்தாண் டருள்வாய்
தகரநெடுங் குழற்காடு சுமந்தபிடி போல்வாய்
 தடங்கரத்தில் அங்குசமும் தனிக்கயிறும் கொண்டாய்
அகரமுதல் மூன்றுனுய் அரசிலியூர்க் கோயில்
 அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (2)

கணவனணிந் துள்ளகொன்றை தும்பைகங்கை யாதி
 கவின்றசடை யுடையமுதற் கான்முளைதன் கையில்
துணர்மலிபைம் பொழில்போலுங் கூந்தலுறும் நின்கை
 தோய்ந்தபடை யிரண்டுமுற்ற தோற்றம்நவின் றருளாய்
குணமனந்தங் கொளுஞ்சமயந் தோறுமொவ்வோர் வேடம்
 கொண்டுநின்ருய் யாரும்நின்னை கூறருந்தா யானுய்
அணவுபெருஞ் சீர்குலவும் அரசிலியூர் வளர்பே
 ரருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (3)

நஞ்சுறழும் வெறிப்புனலும் ஊனுமுண்டார் சிலரும்
 நலம்பெறச்செய் தாயெனச்சொல் நானிலத்தி லடியேன்
கெஞ்சுமொழிக் கவிவிரும்பிக் கனவினிற்பல் வாருய்க்
 கிளரும்நீ யுலகுணரும் கீர்த்திதர லென்றே
பஞ்சுறழ்மென் பதம்வருடிப் பலவாறு கொஞ்சிப்
 பவளவிதழ்க் கனிதருதேன் பருகிநின்கைப் பாணம்
அஞ்சுபொரற் கஞ்சினராய் அரசிலியூர் வாழும்
 அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (4)

நின்னருள்வா ரிதித்திவலை யொன்றுதெறித் தாண்டாய்
நீயறிவாய் நானறிவேன் நிசமெனினும் தமியேன்
இன்னல்முற்றும் தீர்தருமா றருளிலையால் நொந்தேன்
இகழ்கின்றேன் சிலவேளை யாதுமுனி வெய்தேல்
பொன்னகரிற் பூதலத்திற் பாதலத்தில் மற்றைப்
புவனகோ டிகளில்மிகப் பொலிந்துமகிழ் வோராம்
அன்னநடை யார்க்கரசே அரசிலியூ ராளும்
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (5)

சங்கையற்ற பலகோடி தேவர்களுங் கூடித்
தமதுசெய லளித்தாலும் சாற்றொருமூன் றுருவாய்ச்
செங்கையிற்பூ வேந்திநிற்கும் நின்னருட்பே றின்றேற்
சீரழிவுண் டென்னுமுண்மை தெரிந்துமிரங் கிலையே
கங்கைமுதற் சத்திகளும் தானுனை மயமே
கருதுவார் கருத்தளவிற் கவின்றருகா ரணையே
அங்கைவளைக் கற்பகமே அரசிலியூர் காக்கும்
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (6)

சொல்லருமை யறியாப்புன் புலவரொடு கூட்டித்
தொடுநீர்ப்பா ருலகிகழத் துயர்ப்பட்டே னந்தோ
நல்லபுகழ்ச் சீகாழிப் புலவனுக்கன் றீந்த
நறும்பாலே யென்றனக்கும் நனியளித்தாண் டருள்வாய்
பல்லவம்நேர் திருமேனிப் பசியமர கதமே
பாற்கடலிற் றுயில்கூரும் பகவனொடு வந்தாய்
அல்லலொழித் தருளமுதே அரசிலிமா நகரத்(து)
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (7)

செய்வமுற்றுஞ் செயத்தகுமெய்த் திருவருளா முனக்குச்
சீவகோ டிகள்முழுதும் சேயினமே யென்கை
பொய்வழக்கன் றறிவித்தாய் அறிந்துகொண்டே னென்னைப்
புறம்பெனற்கோர் ஞாயமின்றாற் பொருக்கெனக்காத் தருள்வாய்
மைவழிகண் ணிரண்டும்நுதற் செங்கணொன் றுமுள்ளாய்
மடங்கல்மிசை யேறியென்புன் மனத்தகத்தும் வருவாய்
ஐவர்களும் தாமேயாய் அரசிலியூர் வாழ்நல்
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (8)

கந்தனுக்கோர் வேலானை யன்னவன்றன் வடிவக்
காருக்கெல் லாம்பலவாக் கவின்றனையிக் கடையேன்
சொந்தமென்றோர் வடிவெடுத்தும் பூசைமிகக் கொண்டாய்
தொடுங்கருங்கற் கிணற்றுநன்னீர் தோய்வதென்றோ சொல்லாய்
பந்தமற்ற மூதறிஞர் பாவியசே வடியாய்
பத்தனுய்யக் காரிருளிற் பனிமதியு மழைத்தாய்
அந்தரத்தோர் வந்துவந்து போற்றுமர சிலியூர்
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (9)

வடிவமுற்றும் நின்மயமென் றுரைப்பதுண்மை யெனிலென்
மனவெளியி லுள்ளபல வழக்கும்இன்ன தன்றோ
படிபுகழ்சீர்ச் சங்கரமா முனிவனுட னொருகாற்
பரிந்துவந்த பெருங்கருணைப் பண்புகுன்றா தருள்வாய்
குடிவளரும் பயிர்வளரும் பொருள்வளமா தியவும்
குலவுமர சிலிநகரிற் கோமளப்பார்ப் பதியே
அடியவருக் கெளியனெனக் கையெழுத்தை யிட்ட
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியே. (10)

பரசுமவர்க் கெளியாளைப் பாரதியாய்த் திருவாய்ப்
பைந்தமிழும் செம்பொன்னும் பரிந்தருளு கின்றாளை
அரசிலிமா நகர்க்கோயிற் கரசாகி வைகும்
அருட்பெருமான் மருவுகொங்கை யழகியநா யகியைச்
சிரசெனத்தென் பாண்டியினிற் றிகழ்தரும் **நெல் வேலித்**
**திருப்புகழோன்** துதிக்குமிவை செப்பவல்லா ரெல்லாம்
முரசொலிக்கும் பெருவாயில் அரண்மனைக்கா வலரும்
மோகிக்கும் பெருவாழ்வும் முத்தியுங்கொள் வாரே. (11)

முற்றிற்று.

---

# அரசிலிக் கல் வெட்டுகள்.

## S. I. I. Volume VII No 821.

**அஸ்வத்தேசுரர் கருப்பக் கிரகத்துத் தென் சுவரிலுள்ளது.**

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ[11 ※] திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமச் சோழதேவர்க்கு [யாண்டு※] ஆறாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஓய்மாநாடான விசைய ராசேந்திர வளநாட்டுப் பெருவெம்பூர் நாட்.

(2) டுத் தேவதானம் திரு அரைசிலி ஆளுடையார் ஆலால சுந்தரர்க்கு நல்லூரான் பச்சை செல்வன் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு விட்ட சாவா மூவாப்பேராடு பன்னிரண்டு [11 ※]

## No 822.

**சுவாமி சந்நிதிக் கெதிரிலுள்ள மண்டபத்தின் கீழண்டைச் சுவரிலுள்ளவை.**

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ [11 ※] (பூ) மாது புணர புவி மாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத்தன தி

(2) ருபத மலர் மன்னவர் சூட மன்னிய வுரிமையால் மணிமுடி சூடிச் செ(ங்)கோல் சென்று திசை தொறும் வளர்ப்ப.

(3) வெங்கலி நீக்கி மெய்யறந் தழைப்ப கலிங்க மிரியக் கடகரி நடாத்தி வளங்கொளாழி வரை.

(4) யானை நடாத்தி இருசுடரளவும் ஒரு குடை நிழற் கீழ் வீரஸிம்மாசனத்துத் திரிபுவன முழுது முடையாளோடும் வீற்றி(ரு)ந்தரு.

(5) ளிய கோப்பரகேசரி பர(ம)ரான சக்கரவர்த்திகள்(ஸ்ரீ)விக்கிரம சோழ தேவற்(கு)* யாண்டு பன்னிரண்டாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாட்டுத்

(6) திருவரைசிலி ஆளுடையார்க்குச்

(7) செமலன் செங்காட்டு மொ(டக்க)ஞன புறையூர் நாட்டுப் பெரியரையன்.

(8) சாவா மூவாப் பேராடாக வைத்த

(9) திருநந்தா விளக்கொன்றுக்கு விட்ட ஆடு.

(10) தொண்ணூற்ரூறு இது சந்திராதித்தரை செல்லக்(க)டவது இது பந்மா யேசுவரர் இரலை(க்ஷ)112.

## No 823.

### மேற்கண்ட அதேயிடத்திலுள்ளவை.

1 ஸவஸ்தி ஸ்ரீ [11 *] பூமேவு வளர் திருப்பொன் மார்வு புணர(வு)ம் நாமேவு கலைமகள் நலம் பெரிது சிறப்பவும் (விசையமாம)கள் வெல்புயத் திருப்பவும்.

1 இசை(யி)ன் செல்வி எண்டிசை விளங்க நிருபர் வந்திறைஞ்ச(நீ)ணில மடந் தையைத் திருமணம் புணர்ந்து சீர்வளர் தருமம் அ(ணி)முடிக......................த்துப் பல்லுயிர்க்கெல்லாம் எல்லையிலின்பம் இயல்பினி லெய்த வெண் குடை நிழலில் செங் கோலோச்சி வாழி பல்லூழி யாழி நடப்ப செம்பொன்.

2 வீர ஸிம்ஹாசனத்துப் புவன முழுதுடையா(ளொ)டும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பர்ம்ம ரான திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ கொலோத்துங்க) சோழதேவற்கு யாண்டு ஐ(ஞ்)சாவது ஜய (ங்] கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாடான விசை [ய] * ராசேந்திர வளநாட்டுத் தனியூர் தேவதான(ம்) * திருவரசிலி ஆளுடையா(ர்)ற்க்கு மாத்தூர் நாட்டு ஒழுகறைய்........................(டை) உள் ஆட்டு குடிப் பள்ளிசாத்தன் சேயான் ஆன சோழப் பெரியரையன் ராஜ ராஜ வளநாட்டுத் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துக் கீழ் பிடாரிகை மண்ணுண்ணிப் பாக்கத் துக் குடிப்பள்ளி.

3 செயங்கொண்டான் குன்றஞன திருவெண் காட்டுப் பெரிய(ன *)ரய(ற்) கள் (வை) வத்த (தி) ரு நந்தா விளக்கு ஒன்று இவ் விளக்கு ஒன்றுக்கு விட்ட சாவா மூவாப்பசு முப்(ப)து திரு(ம)ண்டபத்து வடவிசெயில் மெற்கடைய ஸ்ரீ விக்கிரமச் சோழல் தெவற்கு யாண்டு ஏழாவது முந்நூற்றுக் குடிப்பள்ளி செங்கணியம் மண்டபத்து கிழ்விசையில் தெற்கடைய இத் தேவற்கு யாண்டு 12-வது கல்வெட்டி செமவர் செங் காட்டு மொடக்கன்ஞன புறையூர் நாட்டு பெரையர் விட்ட ஆடுதொண்ணூற்ரூனில்... ...........................விளக்குமு...............

## No 824.

### சுவாமி மண்டபத்தின் தென்னண்டைச் சுவரிலுள்ளது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11 *] திரிபுவ(ந)ச் சக்ரவத்திகள் ஸ்ரீ விக்ரமசோள தேவர் (க்)கு யாண்டு.

2 பதினாறுவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாடான விஜைய ராஜேந்திர வளநாட்டு பெருவெம்பூர் நாட்டு திருவரசிலி ஆளுடையார்க்கு மா(த் *)து நாட்டு.

3 குலோத்துங்க சோழநல்லூர் பிடாகை பெருவெள்ளேரியிலிருக்கும் மன்றாடி செட்டன் திருவையாறுடையானான சித்திரமெழிக்கோன் வைத்த சந்தி விளக்கொன் றுக்கு விட்ட பசுவனு இப் பசுவனும் கைக்கொண்டு ஸந்தி விளக்கு.

## No 825.

### மேற்கண்ட அதேயிடத்தில் உள்ளது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [11 *] குலொத்துங்க சோழ தேவற்கு யாண்டு 3-வது ஜயங் கொண்ட சோழமண்டலத்து ஒ(ய்)மா னாடடு திருவரைசிலி ஆளுடையார்க்கு இம் மண் டலத்து.

2 இரட்டகுல கால புரத்து வியாபாரி புளியங்குடையான். இது முடிவில்லை.

குறிப்பு:— இக் கல்வெட்டை அறிவித்தவர்கள் சைவ சித்தாந்த சபைக் காரியதரிசியாயிருந்த உயர்திரு—ம பாலசுப்ரமண்ய முதலியார் B.A.B.L அவர்களா வார்; இக் கல்வெட்டை எழுதிவந்தவர் பண்ணுருட்டி வித்துவான்; திரு—தருமலிங்க ஐயரவர்கள். (திரு அரசிலிப் புராணம் என்ற பெயருடன் உரை நடையில் அச்சாகாத ஒரு புத்தகம் உளது. அப் புத்தகம் பத்து அத்தியாயங்களை உடையது அப் புராணக் கதையைத் தழுவியே இவ் வரசிலிக்காதை இயற்றப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் தெரியவில்லை.)

அரசிலிக்காதை முற்றிற்று.

உ

அரசிலிக் காதை

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி.

---


### அ

| | |
|---|---|
| அகத்தினுள் | 18 |
| அகரமே | 24 |
| அந்தணர் | 2 |
| அந்திவெண் | 46 |
| அம்மரத் | 15 |
| அம்மையும் | 45 |
| அண்ணலார் | 20 |
| அண்மையில் | 18 |
| அச்சமுற்றிடு | 31 |
| அக்கமா | 36 |
| அண்டமும் | 39 |
| அய்வகை | 6 |
| அய்வகைத்தனை | 28 |
| அய்யிரு | 35 |
| அரசிலி | 21 |
| அரசிலிப்பெரு | 52 |
| அரசையும் | 32 |
| அருளெலாம் | 2 |
| அருவிவாரி | 3 |
| அருளிலா | 33 |
| அருளெலாம் | 33 |
| அருவினன் | 48 |
| அருள்கொடு | 21 |
| அல்லவை | 31 |
| அலகில் | 2 |
| அவையுளார் | 43 |
| அவ்வுரை | 36 |
| அன்பர்காள் | 48 |
| அன்புகொண்டே | 29 |
| அன்பருள் | 19 |
| அன்பருக் | 22 |
| அன்பினலமை | 15 |
| அன்பினல் விளங் | 1 |
| அன்பினலுலகம் | 37 |
| அன்பு புல்லி | 16 |
| அன்புளம் | 17 |
| அன்பின் மேவிய | 31 |
| அன்பினற் | 33 |
| அன்பினுக் | 35 |
| அன்பெலாம் | 14 |
| அன்புளங்கொள | 31 |
| அன்பெலாம் | 39 |
| அன்பிணை | 46 |

### ஆ

| | |
|---|---|
| ஆக்களும் | 8 |
| ஆக்குதல் | 22 |
| ஆங்குரை | 21 |
| ஆண்டவன் திருப் | 28 |
| ஆண்டவன் | 42 |
| ஆடவர் | 36 |
| ஆணவம் | 23 |
| ஆணவ | 24 |
| ஆதலால் | 18 |
| ஆதலிற் | 36 |
| ஆயிழை | 41 |
| ஆயபெண் | 33 |
| ஆயதை சதத் | 26 |
| ஆவினம் | 50 |
| ஆள்வழக் | 6 |
| ஆன்றவிந் | 3 |

### இ

| | |
|---|---|
| இங்ஙனம் நடந்த | 46 |
| இங்ஙனம் புலம்பி | 41 |
| இகஞ்செயும் | 9 |
| இசை பாடி | 50 |
| இத்தகைப்போக | 42 |
| இத்தகையிடங் | 44 |
| இந்திரசேன | 48 |
| இத்தகைய | 20 |
| இமைத்தகண் | 31 |
| இயங்குறு | 43 |
| இயமமாதிய | 28 |
| இருளிலே | 1 |
| இருள்படப் | 4 |
| இருளின் | |
| இருகுணங் | 26 |
| இருளினிற் | 37 |
| இல்பொருள் | 22 |
| இலகுறு | 47 |
| இவன் அவன் | 45 |
| இளநிலாமூரல் | 33 |
| இளநலம் | 47 |
| இறையொடுக் | 24 |
| இறைவனும் | 21 |
| இறைவன் | 27 |
| இன்னணம் | 17 |
| இன்பொடு | 23 |
| இன்ன தாகு | 26 |
| இன்னபல் | 36 |
| இன்சுவைப் | 39 |
| இன்னணம்மடந் | 40 |
| இன்றமிழ் | 41 |
| இன்னிசை | 43 |
| இன்னிசை நறவை | 45 |

### ஈ

| | |
|---|---|
| ஈடிலா | 42 |

### உ

| | |
|---|---|
| உடலினை | 21 |
| உடன்முத | 22 |
| உடன்நிகழ் | 22 |
| உடையவன் | 32 |
| உணங்கல | 12 |

உணர்வின் 25
உமையொடு 6
உயிருறு 18
உயிர்க்குயி 20
உயிரறி 23
உயிரின்மேவுறு 28
உலகம் யாங் 16
உலகுறு 22
உலகம் யாவும் 29
உலகுள 30
உலகரைப் 39
உலகெலாம் 43
உலக்ம் 49
உலகெலாம் சைவ 51
உளங்கரைந் 20
உலகம் ஆகமம் 27
உள்ளமெங்க 32
உளத்தில் 39
உள்ளெலாம் 42
உறையெதிர் 42

எ

எச்சிலும் 14
எடுத்தநல் 47
எண்ணிய 21
எண்ணுற்ற 23
எண்ணிலாத 28
எண்ணெயும் 38
எதுவுறின் 23
எரிபுரை 17
எய்ப்பினில் 30
எல்லொளி 37
எழுத்தொடு 24
எள்ளிடு 35
எளியவர் 10
எனவணங்கி 19
எனதுடல் 23
என்று 29
என்றவளுரைத்த 37
என்றவக்கொடி 37
என்றலும் 44
என்பெலாம் 46

ஏ

ஏர்மிகு 43
ஏரிநிறைந்த 13
ஏல்வகை 14

ஐ

ஐந்திணையிரத்து 52
ஐந்தெனும் 45

ஒ

ஒருவரின் 6
ஒருவனும் 41
ஒழுக்கம் 28
ஒன்றதாய் 23

ஓ

ஓசை ஊறுடன் 27
ஓசையே முதல் 27
ஓவிய 43

கவ்வருக்கம்

கதுவுறு 22
கரும்பிணைக் 9
கரிய நெடிய 34
கரிய இளைய 34
கரிய வெளிய 34
கலனுறு 36
கலித்த 3
கல்லுளம் 38
களித்தடை 49
களிரியை 5
கள்ளியும் 5
காட்டெலாம் 14
காதலும் 6
காதலன் 42
காமன் போற் 9
கார்மிகப் 8
கார்ப்பெயல் 50
கார்மேவு 51
காலமேமுத 25
காலமே முதற்பகுதி 25
கானமும் 5
கான்வளர் 12
கான் கோழி 19
கான் மலர் 46
காண்டலும் 44
குடிகளும் 33
குயிலெலாம் 46
குவித்திடு 38
குழைத்த 11
குழலே 15
குளவியும் 8
குன்றக் 12
கேட்ட அப் 44
கேட்ட அப்...சொல் 45
கொடைவளம் 52
கொல்லையின் 7
கொண்கணை 35
கோங்கரும் 12
கோள் என 41

சவ்வருக்கம்

சத்திய...தவத்தி 46
சத்திய...பெயர 30
சந்தனம் 4
சமநிலை 48
சாதி 29
சாந்தியா 24
சாளுவ 44
சிலதியர் 41
சில்வகை 19
சிவமும் 25
சிவமுத 24
சிவநெறி 31
சிற்றுயிர் 47
சுமைக்கென 13
செக்கர் 20
செங்கதிர் 42
செந்தளிர் 5
செய்வளர் 12
செய்பவன் 21
செயலுறும் 1
செல்வம் 34
சென்று 52
சேமமாய 12
சேறெலாம் 10
சைவக் 49
சொல்லினல் 38
சோம்பல் 13

தவ்வருக்கம்

தந்தையும் 45
தந்தையே 35
தலமிசை 10
தமக்கென 13
தளரியற் 36

தன்னமர் 39
தனிமையும் 18
தாயருக் 37
திங்கண் 1
திங்களிற் 3
திங்களுண் 11
திருவச் 49
திலகம் 34
திறமெ 13
தீப்புலன் 31
தீயசினமும் 30
தீயவுலகாம் 34
தூய்மை 25
தூயநீறு 28
தூயமாயையை ஒரு 25
தூயமாயை 24
தூயவெள் 40
தெள்ளிய 45
தென்னூர்க் 13
தேங்குறு 17
தேவர்தம் 31
தேவர்நாயக 47
தேன்நிறை 4
தொண்டை 13
தொல்லேயில் 45

## நவ்வருக்கம்

நல்லதைசதத் 27
நல்லவா 16
நானென் 29
நானெனு 41
நிச்சமும் 34
நீலமேதிகழ் 15
நுகர்தலுற் 25
நுகர்விளே 51

## பவ்வருக்கம்

பகல்கழி 40
பச்சிளங் 9
பச்சையாய்ப் 10
பசியடப் 40
பண்ணெலாம் 38
பண்ணிறைத் 43
பண்ணொடு 47
பயின்ற 41
பரனணி 38
பல்வகை உண 38
பல்சுவை 50
பல்வகை நறை 17
பல்வகைக் கொடி 18
பள்ளம் 1
பல்வகைய 19
பாசியும் 37
பாவகங் 26
பாலரு 51
பிணியும் 16
பிள்ளையை 35
பிறர்க்கென 3
புகலியன் 2
புத்தியாமொரு 26
புத்தியே முதல் 27
புத்தியாகிய 27
புவிப்பொருள் 14
புழுவெனத் 3
புன்னேயும் 11
பூக்கள் 32
பூசனேக்கொரு 31
பூம்பணேசேர் 20
பூந்துணர்ச் 16
பூப்புரை 36
பூமணம் 46
பூமனுங் 33
பெண்ணிடம் 48
பெண்ணெனப் 36
பெண்ணெனும் 35
பெரிய நல் 38
பெரியநல்லின்பம் 39
பேதுறு 8
பேயெனும் 36
பைம்புதல் 7
பொய்கையின் 19
பொய்கையுள் 50
பொருளிலான் 7
பொன்னணி 37
பொன்னிறச் 46
பொன்னும் 1
பொன்னுறை 5
பொன்னின் 16
பொற்குடம் 50

## மவ்வருக்கம்

மண்ணெலாம் 51
மண்ணிசை 45
மணி மழை 6
மணி நிலா 11
மணியுமீனு 12
மடியிலா 30
மயன் எனு 47
மரையொடு 9
மருவிடு 22
மல்லின் நல்லமர் 32
மலேயென 11
மலவலி 22
மலபரி 22
மழையுறழ் 3
மழைவளர் 4
மறுகெலாம் 49
மன்னன் மாடுற 32
மாடெலாம் 50
மால்தரு 6
மாணுறு 47
மாலும் நான் 31
மாலும்மால் 39
மானே எய்துற 32
மின்னெலாம் 35
மீனும் 11
முக்குணத் 26
முந்துறு 24
முரசெலாம் 44
முல்லேகள் 44
முல்லேயரும்பு 34
முல்லேயும் 7
முல்லே முகைநேர் 10
முல்லேக் கொடி 12
முழுமுதல் 22
முன்றிலின் 8
முனிவனே 20
மெய்ம்மையாகிய 32
மைவிழி 7

## யவ்வருக்கம்

யாழ்கெழு 42
யான் எனும் 14

## வவ்வருக்கம்

வடநாட் 49
வணங் 17
வந்த குழந்தை 49
வந்தவர் தம் 21
வந்தனேக் 37

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வந்தது | 40 | வாமதேவ | 14 | வெல்லும் | 30 |
| வந்திடும் | 43 | வாயிலான் | 26 | வெள்ளி | 9 |
| வந்தவள் | 44 | வாரணம் | 47 | வெள்ளிய | 17 |
| வந்துதித் | 15 | வாளினால் | 32 | வெள்ளொளி | 38 |
| வல்ல | 27 | வான்றோயும் | 19 | வெளிப்படா | 28 |
| வளியெழு | 11 | வானுலாம் | 18 | வெள்ளிடுங் | 49 |
| வரகொடு | 7 | வானம் வாழி | 2 | வேங்கியை | 30 |
| வற்று | 9 | விளம்பழம் | 8 | வேண்டியார் | 40 |
| வற்றிய | 50 | வெண்ணெய் | 43 | வேந்தும் | 32 |
| வன்பினால் | 4 | வெண்டிரு | 14 | வேல்புரை | 6 |
| வாடிய | 7 | வெண்டிரு—அடியார் | 40 | வேனிலான் | 51 |


THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY, + TANJORE +

அரசிலிக் காதை.

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 5 | ஊறும் | ஊரும் |
| 6 | 30 | அரிமின் | அறிமின் |
| 9 | 10 | திருவர்க | திருவர்க் |
| 15 | 4 | இரந்துபின் | இறந்துபின் |
| 16 | 19 | எஉறுநகர்த | எனுநகர்த் |
| 19 | 16 | மான்போத்துக் | மான்போந்துக் |
| ,, | 19 | கம்வகைய | எல்வகைய |
| ,, | 20 | எல்வகைய | கல்வகைய |
| 20 | 30 | பின்னறத் | பின்றைத் |
| 22 | 5 | எல்பொருள் | எல்பொரு |
| 24 | 7 | வேறுமாயையின் | வேறு; மாயையின் |
| 27 | 11 | ஒல்லுல் | ஒல்லும் |
| ,, | ,, | உஞற்றுறல் | உஞற்றுறும் |
| ,, | 18 | லைந்திலுல் | லைந்தினுள் |
| ,, | 19 | புனல்நில் | புனல்நில |
| 29 | 7 | நாளென் | நானென் |
| 31 | 13 | நனிவர் | நனியும் |
| 32 | 24 | கட்டிருட்களும் | கசட்டிருட்களும் |
| 33 | 11 | மடியுறப் | மடியறப் |
| 34 | 9 | பல்லுடுத்தோன் | பல்லுருத்தோன் |
| ,, | 20 | சூரிய | கரிய |
| 36 | 12 | எவ்வுரைதூலும் | எவ்வுரை நூலும் |
| ,, | ,, | விதித்த நன்றி | விதித்த தன்றி |
| ,, | 13 | எவ்வுரை | வெவ்வுரை |
| ,, | 36 | தவழுல் | தவழும் |
| 37 | 5 | கல்லாய் | கல்லால் |
| ,, | 13 | தீர்க்கத | தீர்க்கத் |
| 40 | 6 | பரிவனென்றே | புரிவனென்றே |
| 41 | 4 | நீத்துச | நீத்துச் |
| 44 | 25 | தனிமையக | தனிமையாக |
| 46 | 6 | இணைத்தொளிர் | இளைத்தொளிர் |
| 49 | 10 | அன்பின் | அன்பர் |
| 52 | 12 | சிறந்து | சிறக்க |